பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை (27.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 153

## செல்வா நினைவுப் பேருரையில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன்

# தமிழர்களின் போராட்ட நோயை அடக்க அரசியல் தீர்வே தேவை

## புலிகளை அழித்துவிட்டால் தமிழர் எந்தத் தீர்வையும் ஏற்பர் என எண்ணுவது தவறு



யாழ்ப்பாணம்,ஏப்ரல்27

தமிழர்களின் போராட்ட நோயை அடக்குவதற்கு அரசியல் தீர்வே தேவை. விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால் தான் முன்வைக்கும் எந்தத் தீர்வையும் தமிழர்கள் தாராளமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று அரசாங்கம் நினைக்கிறது.

அது தவறு என்ற கருத்துப்பட உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் யாழ்.பொது நூல்நிலைய கேட்போர்கூடத்தில் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை அவர் நிகழ்த்தினார். அப்போதே அவர் மேற்கண்ட கருத்துப்படக் கூறினார்.

நீதியரசரின் நினைவுப் பேருரையின் ஒரு பகுதி 5ஆம் பக்கத்தில்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

2002ம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் ஏற்பட்ட அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உடன்பாட்டைத் தொடர்ந்து சமஷ்டி என்ற கருத்து கூடிய ஏற்புடைமையைப் பெற்று வருகின்றது என்று கூறலாம். என்றாலும் அண்மைய கால அரசியலில் ஒஸ்லோ தீர்மானத்தைத் கிடப்பில் வைத்து இவை ஒன்றையும் ஏற்காது போரினால் முழுமையாகத் தமிழ் மக்களை வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் தமிழ் மக்களையும் அவர்களின் பாதுகாப்புப் பிரிவினரான விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் வேற்றுமைப்படுத்திக் காட்டி, விடுதலைப் புலிகள் மட்டுமே வன்முறையில் ஈடுபட்டுள்ளனர், அவர்களை அழித்தால் அரசாங்கம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## த.ம.வி.பு. உறுப்பினர் சூட்டுக்கு மரணம்

கொழும்பு,ஏப்.27

மட்டக்களப்பு, மயிலம்பாவெளியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின்(பிள்ளையான் குழு) அலுவலக முன்றிலில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அந்த அமைப்பின் உறுப்பினரான 19 வயதுடைய இளைஞன் கொல்லப்பட்டார்.

மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.(அ-2)

## குமிழமுனையில் வான் தாக்குதல்

வவுனியா,ஏப்.27

ஸ்ரீலங்கா விமானப் படையின் 'கிபிர்' விமானங்கள் நேற்றுப் பிற்பகலில் முல்லைத்தீவு குமிழமுனையில் குண்டு வீசித் தாக்கின.

குமிழமுனை பிரதேச மக்களின் குடியிருப்புகள் மீதே நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் எஸ்.தெய்வேந்திரம் என்பவரது வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. (அ-2)

## மடுவை அண்டிய 2 கி.மீற்றர் பிரதேசத்தை

## சமாதானப் பிரதேசமாக இருதரப்பும் அறிவித்த பின்னரே மாதா சொரூபம் கொலு வைக்கப்படும்

மன்னார்,ஏப்.27

மடுதேவாலயத்தை சுற்றி இரண்டு கிலோ மீற்றர் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையையோ, இராணுவத் தாக்குதல்களையோ நடத்தமாட்டோம் என்று எழுத்து மூலமான பாதுகாப்பு உத்தரவாதத்தை படையினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் கோரியுள்ளோம்.

மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுத்தேவாலயத்தில் இருந்து விடுதலைப் புலிகள் சென்றுள்ளனர். தற்போது படையினர் அங்கு பிரசன்னமாகியுள்ளனர்.

அவர்களும் அந்தப் பிரதேசத்தை ஆலய நிர்வாகத்திடம் கையளித்து விட்டு விலகிச் செல்வார்கள் என்று தகவல் கிடைத்துள்ளது.

அந்தப் பிரதேசத்தை சமாதான - தாக்குதல் அற்ற - பிரதேசமாக அனுசரிக்க இருதரப்பினரும் எழுத்து மூலமான உத்தரவாதம் வழங்கிய பின்னரே மடுமாதாவை அங்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் படை முன்நகர்வு முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

வவுனியா,ஏப்.27

மணலாறில் இராணுவத்தினர் மேற்கொண்ட பாரியளவிலான முன்நகர்வு பதினொன்றரை மணிநேர கடும் சமரின் பின்னர் முறியடிக்கப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட படையினரில் ஒருவரின் சடலம் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பெருமளவு போர்க் கலங்கள் மற்றும் வெடிபொருள்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 6 மணிமுதல் மண்கிண்டிமலை, கொக்குத்தொடுவாய் பகுதிகளில் இருந்து 59ஆம் டிவிஷன் படையினர் பெருமெடுப்பில் முன்னநகர்வை மேற்கொண்டனர். படையினருக்கு ஆதரவாக பின்தளங்களில் இருந்து ஆட்லறி மற்றும் பல்குழல் எறிகணைகளின் சூட்டாதரவு வழங்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் காயமுற்ற மேலும் இருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.27

பிலியந்தலவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த பஸ்குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

இக்குண்டுவெடிப்பில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் நேற்று உயிரிழந்தனர் என்றும் -

நேற்று மாலை வரை 62 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மரண விசாரணைகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கண்டனம்

கொழும்பு,ஏப்.27

பிலியந்தலவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜனாதிபதி வடக்குப் போர்முனையில் எதிர்கொண்டுள்ள தோல்வியால் விரக்தியடைந்தே இத்தாக்குதலை மேற் கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற கண்மூடித்தனமான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் இனியும் மேற்கொள்ளலாம். ஆகையால் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுள்ளார். (அ-1)

## படையினர் ஷெல் வீச்சில் நாயாறில் பெண் பலி

வவுனியா,ஏப்.27

மணலாற்றில் இருந்து நாயாறு நோக்கி இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்; ஒருவர் காயமடைந்தார்.

மூன்று பிள்ளைகளின் தாயாரான யோகராசா மோட்சானந்தலக்ஷ்மி(வயது 57) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

தம்பையா குமாரசாமி(வயது 56) என்பவர் காயமடைந்தார்.

மணலாறு முகாமிலுள்ள படையினர் நாயாறுப் பிரதேசத்தை நோக்கி நேற்று செறிவான ஷெல் தாக்குதலை நடத்தினர். படையினரின் ஷெல் வீச்சை அடுத்து அப்பகுதி மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். (அ-2)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. விருந்தினர்கள் பான்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்படுவதையும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் பலாலி சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் இலிகாவெல கலைஞர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். அங்கு அமைக் கப்பட்டிருந்த வர்த்தக நிறுவனங்களில் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதை கடைசிப் படத்தில் காணலாம். *(படங்கள்: நேசன், லக்ஸ்மன், வரன்)*

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு நேற்று வைபவ ரீதியாக மாநகரசபையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.27

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு நேற்று வைபவரீதியாக யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவவிடம் பலாலி பிரதம சிவில் அதிகாரி மேஜர் இலிகாவெல மைதானத்தை கையளித்தார்.

இந்த நிகழ்வில் அரச அதிபர் கணேஷ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, செயலாளர் ம.பிரதீபன் மற்றும் குடாநாட்டு பகுதிகளை சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், செயலாளர்கள் ஏனைய அரச பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), விசேட பிரதிநிதி வதிமகன் பூ.குணசிங்கம், கட்சியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் காலை 9 மணியளவில் பெயர் குறித்து விழா மேடைக்கு அழைக்கப்பட்டனர் அந்த நேரத்தில் விழா மண்டபத்தில் பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

தொடர்ந்து மங்கள இசை, - தவில் கச்சேரி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து 10.30 மணியளவில் யாழ் திருமறைக்கலா மன்ற மாணவிகள், மாணவர்களின் நடனங்கள் இசைக்கேற்ற சைகை மூலம் கருத்து வெளிப்பாட்டு நாடகம் என்பன நடைபெற்றன.

ஆரம்பத்தில் விழா மண்டபத்திலும் கூடுதலான மக்கள் அங்கு அமைக்கப்பட்ட புத்தாண்டு கடைகளை சூழ்ந்தே காணப்பட்டனர்.

37 வியாபாரக்கடைகள் அங்கு அமைக்கப்பட்டிருந்தன. நாணாவிதமான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மக்கள் கொள்வனவிலும் ஈடுபட்டு இருந்தனர்.

யாழ் நீதிமன்றத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிக் கட்டடத்தில் இலவச மருத்துவ பரிசோதனையும் படையினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சிறுவர்களுக்கு சிறுசிறு அன்பளிப்புப் பொருள்களும் அங்குவைத்து படையினர் வழங்கினர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அண்மையாக இருந்த சோதனை நிலையம் பிரதான வீதியின் கிழக்கு வீதிக்கு முன்நகர்த்தப்பட்டு முதலாம் குறுக்குதெருப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தன. ஆஸ்பத்திரி வீதிகளும் அம்புக் குறியீடுகள் அமைக்கப் பட்டு போக்குவரத்துக்கான வழமையான பாதைகள் மாற்றப்பட்டி ருந்தன. யாழ் பஸ்நிலைய பகுதியில் இருந்து மக்கள் கிழக்குப் பக்கமாக வெளியேறும் பகுதி இதுவாகும்.

பொதுமக்களது வாகனங்கள் விழா மைதானத்திற்கு அண்மையில் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. முற்றவெளிப் பகுதியில் தரிப்பிடங்கள் மாநகரசபையால் அமைக்கப்பட்டு இருந்தன.

(1-86-302-111)


## பண்டாரக்குளம் ஸ்ரீ கௌரி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்

நாளை (28.04.2008) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு மூலஸ்தான பூஜையும் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு புதிதாக திருநெல்வேலி ராஜன் சிற்பாலயத்தின் சிற்பாசாரியார் இராசதுரை பிரபாகரன்(பிரான்) குழுவினரால் நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத் தேரில் ஸ்ரீ கௌரி அம்பாள் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். அனைத்து அடியார்களும் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

- ஆலய நிர்வாகம்.

(73534)

## ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ

இல. 13,14 பெரியகடை வீதி, 47, பெரியகடை வீதி யாழ்ப்பாணம்.

**இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய சாறி வகைகள்**

- ★ ஜானுசாறி
- ★ நண்டிற்ரா சாறி
- ★ பலஸ் சாறி
- ★ மஞ்சயறி சாறி
- ★ றேமன் பியூட்டி
- ★ றிசம் சாறி
- ★ அமிசா சாறி
- ★ றெயின்போ சாறி
- ★ காமினி சாறி
- ★ றாப்வார்சா சாறி
- ★ திறட்லேக் சாறி
- ★ எம்புறொய்டெர் வேக் சாறி
- ★ டயமன் வேக் சாறி

**Indian Kiss Gold Silver work saree**

விசேடமாக எமது ஸ்தாபனம் இன்று 27.04.2008 ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.

(சி/552593)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 ★ 04 ★ 1960



மறைவு 30 ★ 01 ★ 2008

திருமதி

## ரேவதி சிவஞானம்

*அம்மா! அம்மா! அன்புத் தெய்வமே!*
*நெஞ்சம் துடிக்குதம்மா! நினைவு தடுமாறுதம்மா*
*உம்பிரிவை அறியா எம் மழலைச் செல்வங்கள்*
*அம்மா வருவார் என்று வாசலில் காத்து நிற்பதைக் காண*
*வயிறு பற்றி எரியுதம்மா! ஓடி வாருமம்மா!*
*நீ ஓடி மறைந்து மூன்று திங்கள் ஆனாலும்*
*நினைவலைகள் எம்மை விட்டு என்றும் நீங்காது*
*நித்திலத்தில் வித்தாகிப் போன பின்பும் எம் மனதில்*
*விருட்சமாய் வாழ்வாயம்மா வேரூன்றி!*

அன்னாரின் 90ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் நாளை (28.04.2008) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெற உள்ளன. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

*123, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(73546)

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் மங்கள வாத்தியத்தில் தனக்கென ஓர் இடம்பிடித்தவரும் எமது ஆலயத்தில் நீண்ட காலமாக மங்கள வாத்தியம் வாசித்தவருமான



## மகாலிங்கம் சின்னராசா

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந்திரன் அம்பாளை வேண்டுகிறேன்.

துயருறும்

சிவஸ்ரீ சி.இந்திரராஜாக்குருக்கள்.

(சி/552592)

## 25ஆவது திருமணநாள் வாழ்த்து



## வல்லிபுரம் ஜெயரட்ணம் கலா தம்பதியினர்

ஜேர்மனியில் வசிக்கும் ஜெயரட்ணம் - கலா தம்பதியினர் இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை தமது 25ஆவது திருமணநாளைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். இவர்களை அன்பு மகன் செந்தூரன், சாருகன், மகள் டயானா ஆகியோர் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள் வயிரவர், முருகன் துணையுடன்.

- தம்பாப்பிள்ளை.

வெள்ளி விழாக் காணும்
எம் தெய்வங்களே
அன்னையின் அன்பும்
தந்தையின் அரவணைப்பும்
என்றென்றும் எம்முடன் இருக்க
இறைவனை வேண்டுகிறோம்.

- பிள்ளைகள்.

(73546)

## அரியாலை ஐக்கிய கழகம் அரியாலை யாழ்ப்பாணம்

மேற்படி கழகம் நடத்தும் மாவட்ட ரீதியான

**கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி**

(Setup and Over game)

- ★ விண்ணப்ப முடிவு திகதி : 15.05.2008
- ★ விண்ணப்பபடிவம் பெறும் இடங்கள் :
  - (I) பெனின்சுலா அக்கடமி, புன்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
  - (II) லிட்டில் இந்தியன் பெஷன், No.77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகம்,
அரியாலை ஐக்கிய கழகம்.

(73541)

## மரண அறிவித்தல்

### *சி.செல்லையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்)*



பருத்தித்துறை, கல்லூரி வீதி, புலோலி மத்தியைச் சேர்ந்த சி.செல்லையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (26.04.2008) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமணியின் அன்புக் கணவரும் பவாநந்தன், பிறேமாநந்தன், ஜெயந்தி, ஜெயாநந்தன், சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிமாலா, சுரேஷ், எழில்மதி, ஜமுனா, ஆனந்தவதனன் ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிருலப்பனை,*
*கொழும்பு - 05,*
*தொ.பே. 0777325465*

தகவல்:
செ.ஜெயாநந்தன்
(மகன்)

(A)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் வரலாற்றுப் பக்கங்களில் இடம்பெறப்போகும் கிழக்கின் தேர்தலில் வாக்காளர்கள் எதனை எழுதுவர்?

தென்னைமரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டிய கதையாகக் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பான விவகாரங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் பிரதம வேட்பாளராகப் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தீவிர பிரசாரத்தினை மேற்கொண்டுவரும் நிலையில், கொழும்பில் உள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான 'தாருஸ்லாம்' சல்லடை போட்டுத் தேடப்பட்டுள்ளது. தேடுதலுக்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இது தொடர்பாக நீதிமன்றத்திற்குச் செல்லவுள்ளோம் என்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் பிரிவுத் தலைவர்களில் ஒருவர்.

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை உடனுக்குடன் தங்கள் செய்தி நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில் பெருமளவிலான வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கிழக்கு மாாணத்திற்குப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, பிரதான அரசியல் கட்சிகளான ஆளும் சுதந்திர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி என்பன தங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கும் நிலையில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் பெரும் எண்ணிக்கையான சுயேச்சைக் குழுக்கள் தங்கள் பிரசார நடவடிக்கையாக நாளும் பொழுதும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு வருகின்றன.

இங்கு வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்களைப் பொறுத்தவரை இவற்றில் ஒரு சில துண்டுப் பிரசுரங்கள் அவற்றை வெளியிடுவோரின் கொள்கை விளக்க அறிக்கைகளாகக் காணப்படுகின்றன. ஆனால், பெரும்பாலான துண்டுப் பிரசுரங்களோ தனி மனிதர்களைக் கண்டிக்கும் பிரசுரங்களாக விளங்குகின்றன.

### மட்டக்களப்பில் அதிகளவான முறைப்பாடுகள்

தேர்தல் சட்டவிதிகளை மீறும் செயல்கள் குறித்து 22 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சில தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் திருகோணமலை மாவட்டத்திலேயே மிகவும் குறைவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக அம்பாறை மாவட்டத்தில் குறைவான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் பெரிய அளவிலான பிரசாரக் கூட்டங்களை நடத்துவதைவிட தங்கள் ஆதரவாளர்களை அழைத்து கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்யும் நடவடிக்கைகளில் அவை ஈடுபட்டு வருகின்றன. தற்போதைய அரசியல் சூழல் மற்றும் பாதுகாப்பு நிலையில் இத்தகைய நடவடிக்கை தமக்குப் பாதுகாப்பாக உள்ளதாகவும் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்–முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை பலமாக வலியுறுத்தும் ஹக்கீமின் பிரசார உத்தி

கிழக்குத் தேர்தலைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூக் ஹக்கீம் தனது சகபாடிகளுடன் நாடாளுமன்றப் பதவிகளைத் துறந்து மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட முன்வந்தபோதே, ஆளும் தரப்பினர் அதிர்ச்சியில் மூழ்கி விட்டனர். ஆனால் தற்போதுள்ள களநிலையை உற்றுநோக்கும் போது ஹக்கீம் தரப்பினர் தமது நிலையைப் பலப்படுத்தி வருவதாக ஆளும் தரப்பு உணரத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாகப் பல்வேறு அம்சங்களை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும்.

### ஹக்கீமின் பேச்சுக்கள் ஆளும்தரப்பை ஆட்டங்கொள்ள வைக்கின்றன

குறிப்பாக சூழல் மாசடைவதாகக் கூறி ஜாதிக் ஹெல உறுமயவினர் ஆளும் தரப்பின் அனுசரணையுடன் கொண்டுவந்த ஒலி பெருக்கிப் பாவனை சம்பந்தமான விடயம் - முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினை - தொடர்பாக ரவூப் ஹக்கீம் தரப்பினர் எடுத்தாளும் விடயம் மற்றும் தமிழ்- முஸ்லிம் உறவு தொடர்பாக ரவூப் ஹக்கீம் மேடைகளில் முழங்கிவரும் பேச்சுக்கள் ஆளும் தரப்பினரை சற்றே நிலைகுலைய வைத்துள்ளன என்றே கூறவேண்டும்.

ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் நடைபெறும் தங்கள் பிரசாரக் கூட்டங்களில் எல்லாம் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பேசி வருகின்றனர். இந்த நிலையில் தமிழ் மக்களும் ஐக்கிய தேசியக் கட்சியின்பால் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் என்பது மாகாண சபைகளின் தேர்தல் மட்டுமல்ல. இது ஆட்சி மாற்றத்திற்கான தேர்தலாகவும் அமையும் எனவும் ரவூப் ஹக்கீம் தமது தேர்தல் பேச்சுகளில் தெரிவித்து வருகின்றார்.

ஆளும் தரப்பினைப் பொறுத்தவரை வரலாற்றில் முதல் தடவையாகத் தங்கள் மேதின விழாவை அம்பாறை மாவட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகையதொரு எழுச்சிகரமான விழாவினை அம்பாறை மாவட்டத்தில் நடத்துவதன் மூலம் மக்களின் மனங்களை வென்றெடுக்கலாம் என்பது இவர்களது கணிப்பீடாகும்.

### கூடாரம் அடித்துள்ளனர்

ஆளும் தரப்பைச் சேர்ந்த ஆளுநர்கள், அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட இறுதி நாளான ஏப்ரல் 3ஆம் திகதியிலிருந்து கிழக்கு மாகாணத்தில் தங்கி - கூடாரம் அடித்து - தங்களின் பிரசார நடவடிக்கைகளைத் தீவி ரப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் செயற்பட்டதைவிட இங்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் தரப்பினர் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் தாங்கள் மேற்கொண்டுவரும் வேலைத்திட்டங்களைப் பட்டியலிட்டு வாக்காளர்களைத் தம் பக்கம் திருப்ப இவர்கள் தங்களாலான சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

### ஆளும் தரப்பினருக்கு கௌரவப் போராட்டம்

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வரும் சூழ்நிலையில், ஆளும் தரப்பினர் இதனை ஒரு கௌரவப் போராட்டமாகவே எண்ணிச் செயற்பட்டு வருகின்றனர்.

விஷம் போல் ஏறிவரும் வாழ்க்கைச் செலவு, பாதுகாப்புத் தொடர்பான கெடுபிடிகள் போன்ற விடயங்களால் கிழக்கில் உள்ள மக்கள் தங்கள் பார்வையை ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் செலுத்துவதை ஓரளவு அனுமானிக்க முடிகின்றது.

குறிப்பாக, உயர்ந்துள்ள இன்றைய வாழ்க்கைச் செலவு வறிய மக்களை மட்டுமன்றி நடுத்தர மக்களையும் உயர்தட்டு வர்க்கத்தினரையும் கூட சிந்திக்க வைத்து விட்டது. இத்தகைய நிலையும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாகவே அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள்கருத்து வெளியிட்டுவருகின்றனர்.

### கிழக்குத் தேர்தல் களத்தில்

மாகாண சபைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வார காலமே உள்ளது. இரண்டு தரப்பினரும் வெற்றி வாகை சூடப்போவது தாமே எனத் தமக்குள் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த இருதரப்பினரும் இவ்வாறு கங்கணம் கட்டிக் கொண்டிருந் தாலும் கிழக்கு மாகா ணத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போவது கிழக்கு மாகாணத்தின் வாக்காளப் பெருமக்கள் தான்.

வரலாற்றுப்பக்கங்களில்இடம்பெறப்போகும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் குறிப்பு வாக்காளர்களால் எவ்வாறு எழுதப்படப் போகின்றது என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம். *

அவதானி


இங்கிலாந்து அணியினர்...

# கிரிக்கெட் சபையின் அதிரடி நடவடிக்கை இங்கிலாந்து வீரர்கள் கடும் சீற்றத்தில்

ஐ.பி.எல். போட்டியில் விளையாட தடை விதித்ததை எதிர்த்து இங்கிலாந்து வீரர்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர். பணம் சம்பாதிப்பதை தடுக்க யாருக்கும் உரிமை இல்லை என்று பீற்றர்சன் ஆவேசமாக கூறினார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டியில் விளையாடினால் வீரர்கள் பணத்தாசை பிடித்து நாட்டுப் பற்றை அடியோடு மறந்து விடுவர்கள் என்று கூறி அந்த போட்டியில் விளையாட இங்கிலாந்து வீரர்களுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது. ஆனால், இங்கிலாந்து தவிர ஏனைய நாட்டு வீரர்கள் ஐ.பி.எல். போட்டியில் விளையாட கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கின்றனர். இதைப் பார்த்த இங்கிலாந்து வீரர்கள் அந்நாட்டு கிரிக்கெட் சபையை கடுமையாக விமர்சனம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

முன்னணி வீர் பீற்றர்சன் லண்டனில் கூறியதாவது:

ஐ.பி.எல். போட்டி மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த போட்டியில் விளையாடினால் நல்ல அனுபவம் கிடைப்பதோடு தேவையான பணமும் கிடைக்கும். இந்த 2 வாய்ப்பையும் நாங்கள் இழந்து தவிக்கிறோம். வீரர்கள் குறிப்பிட்ட வயது வரைதான் விளையாட முடியும். அதற்குள் அவர்கள் பணம் சம்பாதிக்கவேண்டும். உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நாட்டுப்பற்று இருக்கும். அதிக பணம் கிடைத்தால் நாட்டுப்பற்று போய்விடும் என்ற கருத்து அபத்தமானது.

ஐ.பி.எல். போட்டியில் எல்லா நாட்டு வீரர்களும் விளையாடுகின்றனர். அவர்களுக்கு எல்லாம் நாட்டுப்பற்று மறந்துவிட்டதா? என்னைப் பொறுத்தவரை இப்படி பேசுபவர்களுக்குத்தான் நாட்டுப்பற்று இருக்காது. இனிமேலாவது இப்படி அபத்தமாக பேசுவதை சபை நிர்வாகிகள் நிறுத்திவிட்டு ஆரோக்கியமாக சிந்தித்து ஐ.பி.எல். போட்டியில் விளையாட அனுமதிக்கவேண்டும் என்றார்.

கிரிக்கெட்டில் இளஞ்சிவப்பு பந்து

ஸ்கொட்லாந்து அணிக்கும் மெரிலபோர்ன் கிரிக்கெட் கழக (எம்.சி.சி.) அணிக்கும் இடையிலான ஒருநாள் போட்டியில் பரிசோதனை முயற்சியாக பயன்படுத்தப்பட்ட இளஞ் சிவப்புநிற பந்து வெற்றியளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அடுத்த ஆண்டு அளவில் சர்வதேச இருபது20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் இளஞ்சிவப்பு நிற பந்து பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளதாக தெரியவருகிறது. எனினும் இந்த ஆண்டு இறுதிவரை இந்த பரிசோதனை முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என மெரில் போர்ன் கிரிக்கெட் கழகம் தெரிவித்துள்ளது. ஸ்கொட்லாந்து எம்.சி.சி. அணிகளுக்கு இடை யில் லோட்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த போட்டியில் எம். சி.சி. அணி 4 விக்கெட்டு களால் வெற்றியீட்டிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட லாந்து அணி 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட் டுகளை இழந்து 253 ஓட்டங்களை பெற்றது. அணித்தலைவர் ரியான் வொட்சன் 113 பந்து களுக்கு 91 ஓட்டங்களை பெற்றார். எனினும் பதிலெடுத்தாடிய எம்.சி.சி. அணி 8 பந்துகள் மிச்சம் வைத்து 6 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டிக்கொண்டது.

இதன் முதல் இன்னிங்ஸில் குக்கபூரா நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட இளஞ்சிவப்பு நிற பந்து பயன்படுத்தப்பட்டதோடு இரண்டாவது இன்னிங்ஸில் டுகஸ் பந்து பயன்படுத்தப்பட்டது. இதில் பயன்படுத்தப்பட்ட பந்து வழமையாக உபயோகபடுத்தப்படும் வெள்ளை நிற பந்தை விடவும் தெளிவாக பார்க்க முடிந்ததாக இரு அணி வீரர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக எல்லைக்கோட்டில் களத்தடுப்பில் ஈடுபட்டிருப்போருக்கு வெள்ளை நிறப்பந்து சரிவர தென்படுவதில்லை எனும் குறைபாடு காணப்பட்டுவருகிறது. அத்துடன் பிடியெடுப்பின்போது வெள்ளை மேகமூட்டங்கள் காரணமாக வெள்ளை நிறப்பந்து தென்படாத நிலை காணப்படுகிறது. ஆனால் இளஞ்சிவப்பு நிற பந்தில் இந்த குறை[illegible] போட்டியில் எம்.சி.சி. அணிக்காக விளையாடிய முன்னாள் இங்கிலாந்து பந்துவீச்சாளர் மின் பட்டேல் குறிப்பிட்டுள்ளார். இந்த போட்டியில் அவர் 37 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டை வீழ்த்தினார்.

எனினும் மெரில் போர்ன் கிரிக்கெட் கழகம் இளஞ்சிவப்பு நிற பந்து குறித்து இந்த ஆண்டு இறுதிவரை தொடர்ந்து பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடவுள்ளது. குறிப்பாக பகலிரவு போட்டிகள் மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கு இளஞ்சிவப்பு நிறப்பந்து உகந்ததா என்பது குறித்து எதிர்வரும் காலங்களில் ஆய்வு செய்யப்படும் என்று எம்.சி.சி. கழகத்தின் தலைவர் ஜோன் ஸ்டெபன்ஸன் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இளஞ்சிவப்பு நிற பந்து குறித்து மெரில்போர்ன் கிரிக்கெட் கழகத்தினால் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபைக்கு இவ்வருட இறுதியில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கெரி பாக்கர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் போதே முதல் முறையாக வெள்ளை நிற பந்து பயன்பாட்டுக்கு வந்தது. இந்நிலையில் 1989 ஆம் ஆண்டு இங்கிலாந்து கிரிக்கெட் சபை செம்மஞ்சள் நிற பந்தை பயன்படுத்த முயற்சித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்படத்தக்கது.

## நட்சத்திரத் தூதர் பொறுப்பிலிருந்து நடிகை நயன்தாரா நீக்கப்பட்டார்



### நட்சத்திரதூதர் பொறுப்பிலிருந்து நயன்தாரா நீக்கப்பட்டார்

நடிகை நயன்தாரா 'சென்னை சுப்பர் கிங்ஸ்' அணியின் நட்சத்திர தூதர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளரான இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் அணியை ஊக்குவிக்கும் வகையில் நட்சத்திர தூதர்களாக நடிகர் விஜயையும், நடிகை நயன தாராவையும் நியமித்தது.

ஒப்பந்தப்படி போட்டி நடைபெறும் நாள்களில் நட்சத்திர தூதர்கள் வீரர்களை உற்சாகப்படுத்தியும் அணி வெற்றி பெறச் செய்யும் வகையிலும் ஊக்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அந்த வகையில் சேப்பாக்கத்தில் நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் போட்டியின்போது நடிகர் விஜய் கலந்து கொண்டு தோனி தலைமையிலான சென்னை அணி வெற்றி பெற வேண்டுமென வாழ்த்திப் பேசினார். மேலும், மைதானம் முழுவதும் வலம் வந்து ரசிகரகளை உற்சாகப்படுத்தி பாடல்களைப் பாடினார்.

ஆனால், மற்றொரு நட்சத்திர தூதரான நயன்தாரா போட்டித் தினத்தன்று பங்கேற்காமலும் மேலும் அணிக்காக எந்தவிதமான முயற்சிகளும் எடுக்காமலும் அதற்குரிய விளக்கமளிக்காமலுமிருந்துள்ளார்.

இந்நிலையில், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் சென்னை 'சுப்பர் கிங்ஸ்' அணியன் நட்சத்திர தூதர் பொறுப்பிலிருந்து நயன்தாரா நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நீக்கம குறித்து நயன்தாராவிடம் விளக்கம் கேட்க முயற்சித்தபோது அது முடியவில்லை.

அவருக்கு நெருங்கிய வட்டாரங்களில் விசாரிக்கையில்

ஐ.பி.எல். போட்டிக்கு ஒத்துழைக்க நயன்தாரா தயாராக இருந்ததாகவும் ஆனால், சரியான தகவல் பரிமாற்றம் இல்லாததால் சிக்கல் ஏற்பட்டதாகவும் மேலும் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மட்டுமே நயன்தாரா கையெழுத்திட்டிருந்ததாகவும் அதிலும் கூட படப்பிடிப்பு இல்லாத நாள்களில் மட்டுமே பங்கேற்பது என்று திட்டவட்டமாக இருந்ததாகவும் அதையும் மீறி தற்போது இந்த நிகழ்வு நடந்திருப்பதால் எதுவும் சொல்வதற்கில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். – ரி.லோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ உதவியாளர்களுக்கு ஆங்கில தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.27

அரச அலுவலகங்களில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோருக்கு ஆங்கில தொழிற்பயிற்சி நெறியொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரிட்டிஷ் சபையின் அனுசரணையுடன் ஜேர்மன் தொழில்நுட்ப வலய (ஜீரிஸற்) நிறுவனத்தினால் இப்பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன. (202-207)


**திரு.ஐயாத்துரை கமலநாதன்**
*(ஆசிரியர் யா/இந்துக் கல்லூரி)*
அவர்களின்
**மணிவிழாவும் மணிவிழா மலர் வெளியீடும் அழைப்பு**

இடம்: தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபம்
*சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி.*
காலம்: இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 9 மணி
தலைவர்: திரு.க.கனகேஸ்வரன்
*(உதவித் தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.)*

*அனைவரையும் விழாவிலே கலந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி/552537) **விழாக்குழுவினர்.**



**ST.JOHN'S COLLEGE JAFFNA**
185TH ANNIVERSARY AND PREFECTS CENTENARY CELEBRATIONS 2nd & 3rd May 2008

| | |
|---|---|
| 1st Day | 02nd May 2008 |
| EXHIBITION | 9.00 am to 3.30 p.m. |
| 2nd Day | 03rd May 2008 |
| 7.45 am | Laying Floral Wreaths on the tombs of the late Principals |
| 8.15 am | Holy Communion Service |
| 9.30 am to 12.00 noon | Exhibition |
| 9.30 am | Tree Planting |
| 10.00 am | Prefects Group Photograph (Past & Present SJC) |
| 3.00 pm to 5.00 pm | Cultural Show |
| 4.30 pm to 5.15 pm | Soccer Match - SJC Prefects V s Central Prefects |

*All are welcome*

*(Pastmembers of the Prefects' Guild will please register your names at the College Office to confirm your participation before Wednesday the 30th of April 2008).*

*(c/552579)* **PRINCIPAL.**



**வலி.கிழக்கு வடபகுதி**
**பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி**
**கூட்டுறவு நகர் திறப்புவிழா அழைப்பு**

இடம்: *அச்சுவேலி*
காலம்: *இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30மணி*

தலைவர்: **திரு.க.பேரின்பநாயகம்**
(வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம்)

**பிரதமவிருந்தினர்:**
**திரு.C.A. மோகன்றாஸ்**
(பிரதேச செயலர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்)

**சிறப்பு விருந்தினர்கள்:**
**திரு.பொ.சிவலிங்கம்**
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
**திரு.செ.கனகசபாபதி**
(கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (கணக்காய்வு), யாழ்ப்பாணம்)
**திரு.பொ.கனகசபாபதி**
(தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை)
**திரு.இ.யோகராசா**
(முகாமையாளர், மக்கள்வங்கி, அச்சுவேலி)
**திரு.த.புவனேந்திரன்**
(முகாமையாளர், இலங்கை வங்கி, அச்சுவேலி)
**திரு.த.நடராசா**
(செயலாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்)
**திரு.வி.சிவகுமார்**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலி.கிழக்கு வடபகுதி
ப.நோ.கூ.சங்கம்,
அச்சுவேலி. (சி/552586)

**பணிப்பாளர்களும், பணியாளர்களும்.**


# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஏப்.27

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

**சென்.பற்றிக்ஸில்**

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

* தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தி.
* சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி.
* வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம் எதிர் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.
* சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம்.
* நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்.மத்திய கல்லூரி.

**சென்றலில்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

* ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி எதிர் நாவற்குழி மகா வித்தியாலயம்
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வேலணை மத்திய கல்லூரி
* யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் எதிர் ஊர்வற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
* மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி
* நாவற்குழி மகாவித்தியாலையம் எதிர் யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலையம்.
* சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் வேலணை மத்திய கல்லூரி. (1-86)

* * *

மந்திகை, ஏப்.27

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை தமிழ்ப் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 20X20 ஓவர் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

காலை 8.30 மணிக்கு- சென்.தோமஸ் வி.க. எதிர் ஞானம்ஸ் வி.க.

பிற்பகல் 3 மணிக்கு- மனோகரா வி.க. எதிர் திருநல்லூர் வி.க. (1-218)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.27

சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 101ஆவது ஆண்டு நினைவுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தம்ப சிட்டியில் அமைந்துள்ள சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் கி.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் பருத்தித்துறைக்கிளை முகாமையாளர் மு.சிவநேசனும் கலந்து கொள்வர். (202)

* * *

வடமராட்சி, ஏப்.27

யாழ்.கியூடெக் நிறுவனத்தால் நடத்தப்பட்ட சுயதொழில் மேம்பாட்டு பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் பலநோக்கு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் அருட்திரு ஜே.ஜெயக்குமார் அடிகளார் நிகழ்வில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றோர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவார். 5 நாள்கள் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் 27 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். (202-236)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ்.மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என சங்கச் செயலாளர் தெரிவித் தார். (202)


**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், கோப்பாய் வடக்கு, மாணம் (ஓடப்புலம்) 25 பரப்பு பயிர்ச்செய்கை தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
**தொ.பே.: 0722904430**
(சி/552589)



**மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - லண்டன்**
நூற்றாண்டு விழாவையொட்டிய கல்விப் பணியில்
**புலமைப் பரிசில் திட்டம் (தரம் 6-12 வரை)**
கல்வியில் திறமையிருந்தும் பொருளாதார கஷ்டம் காரணமாகக் கல்வி கற்பதில் இடர்படும் மாணவர்களுக்கு உதவுவ தற்கு எமது சங்கம் புலமைப் பரிசில் வழங்கவுள்ளது. விரும்புவோர் கல்லூரியில் 10.05.2008 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.
(சி/552552) **J.A. இராஜகாரியார்,** *செயலாளர்.*



**தீராத மூலவியாதியால் அவதிப்படுவோரின் கவனத்திற்கு....!**
**இரசாயன முறையில் மூலரோக நிவாரணம்**
**மூல ஆர்சிஸ் இரசாயன மற்றும் மூலரோக பஸ்பம்**
மூலரோக சம்பந்தமான வியாதிகளை உடன் குணப்படுத்தும்
மூலரோகம் என்பது பரம்பரை வியாதி. இதனால் ஆரம்பத்தில் சிறு கட்டிகளை உண்டாக்கும். அத்துடன் எரிச்சல், கூடின மலம்போக்குத் தன்மை, சீதம்போக்கு, குடல்இறக்கம், குடலில் வாய்வு நிரம்புதல் போன்ற வியாதிகளை இம்முறையினால் குணப்படுத்த முடியும். மேலும் சிறுநீர் எரிச்சல், சிறுநீர் தடங்கல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. உடன் பாவித்து குணம் பெறுங்கள்.
யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured by:
Kadahapola Dharmarathne Aushadalaya
Kuliyapitiya Road, Kadahapola,
Narammala.
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணை பூங்கா
இல,288 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**

தோற்றம் 12.02.1925 | மறைவு 26.03.2008



26.03.2008
புதன்கிழமையன்று
சிவபதமடைந்த எமது தந்தை
**நாகப்பர் வல்லிபுரம்**
*(தங்கராசா)*
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமைகாலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவ்வொல்லை,
புலோலிமத்தி, பருத்தித்துறை.
**குடும்பத்தினர்.**
(சி/552585)

# மரண அறிவித்தல்கள்

## *பிலோமினா பெனடிக்ற்*



(ஓய்வுபெற்ற ஆசிரியை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 10A, கதீற்றல் வீதியில் வசித்தவரும் தற்பொழுது கொழும்பு 143/4/12, மெசஞ்சர் வீதி, கொழும்பில் வசித்தவருமான பிலோமினா (பபாக்குஞ்சு) 22.04.2008 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான எம்.ஏ.இராசையா- லூட்ஸ் தம்பதியரின் மகளும், றீற்றா சேவியரின் (பேபி) அன்புச் சகோதரியும் குயின்ரஸ் பெனடிக்ற் (ஓய்வுபெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், ஒக்ரோவின் (லெசத்தோ) பாசமிகு தாயாரும் பிரியாவின் (லெசத்தோ) அன்பு மாமியும் பசில் (அமெரிக்கா), Dr.றோகினி (லெசத்தோ) ஆகியோரின் சிறிய தாயும் Rev. Dr.C.Y.நைற் (லெசத்தோ) அவர்களின் அன்ரியும் கிறிஸ்ரி மரினோவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (24.04.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் கனத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24.04.2008இல் பிரசுரிக்கப்பட்ட மரண அறிவிதலில் மருமகள் பிரியாவின் பெயர் தவறுதலாக விடப்பட்டதையிட்டு வருந்துகின்றோம்.

தகவல்:
சகோதரி றீற்றா சேவியர் (பேபி).
தொ.பே:- 078 6070695,
021 222 5687,
(73537)

## *கனகரத்தினம் சிறிகிருஸ்ணபாலன்*

**(முன்னாள் சாரதி, C.T.B )**



ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனகரத்தினம் சிறிகிருஸ்ணபாலன் அவர்கள் (26.04.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் வரதா (கனடா), சிறிவேணுபாலன் (கனடா), காலஞ்சென்ற சிறிவரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.புஸ்பலீலா (மருமகள்)
*சதுமலை வீதி, ஆனைக்கோட்டை.*
(73531)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையும் மனித உரிமைகளில் ஒன்று; ஆனால் அதனைப் பிரிவினை என்கிறார்கள் சிங்களத் தலைவர்கள்

**பகுதி 01**

**தந்தை செல்வாவின் 32 ஆவது சிராத்த தின நிகழ்வு நேற்று மாலை யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு 'விடிவை நோக்கி' என்னும் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது. மிகுதிப் பகுதி 'உதயனில்' தொடர்ந்து வெளிவரும்.**



எஸ்.ஜே.வி. அவர்கள் சமஷ்டிக்காகப் போராடியவர். தமிழ் மக்களின் விடிவிற்காகப் போராடியவர். நாடு ஒன்றுபட்டு நிற்பதானால் சமஷ்டியே உரியமுறை. அன்றேல் பிரிவைத் தவிர எமக்கு வழியில்லை என்று பல முறை ஆணித்தரமாகக் கூறி வந்தவர். எமது நாடு பிரிவினையை நோக்கிப் போகின்றதோ சமஷ்டியை நோக்கிச் செல்கின்றதோ நான் அறியேன். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சி செலுத்திய காலத்தில் பிறந்து, கொழும்பில் வளர்ந்தவன் என்ற முறையிலோ என்னவோ இந்த நாட்டைக் கூறுபோட்டு எமக்கெனத் தனி ஒரு கூடமைத்து வாழ வேண்டும் என்ற வெறி ஏனோ என்னுள் இதுவரையில் உருவாகவில்லை. போதிய உச்சக்கட்டத் தன்னாட்சி கிடைத்தால் போதுமானது என்றே இன்று வரையில் நினைத்து வருகின்றது எனதுள்ளம்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் 1926ஆம் ஆண்டில் இலங்கைக்குச் சமஷ்டியே சிறந்தது என்று கூறியதைப் பல தமிழ்மக்கள் பெருமையாகப் பிற்காலத்தில் குறிப்பிட்டிருந்ததைக் கேட்டிருக்கின்றேன். ஆனால் அவரின் அந்தக் கருத்துக்குப் பலமான எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அன்றைய காலத் தமிழ்மக்களே என்பதை நாங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். முழு இலங்கையிலும் எமக்கு முக்கியத்துவம் கிடைக்கையில் வட கிழக்கு மூலையில் நாங்கள் ஏன் முடங்கிக் கிடக்க வேண்டும் என்று அன்று கேட்டவர்கள் தமிழர்களே. ஆங்கிலேய கால அரசு என்றென்றுந் தொடர்ந்திருக்கும் என்ற எண்ணமோ என்னமோ அவர்களை அன்று அப்படிச் சிந்திக்க வைத்தது. நாங்கள் வாழும் இடம்,சூழல், வசதி போன்றவை எங்கள் நோக்குகளையும் கருத்துகளையும் முடிவுகளையும் பாதிக்க வல்லவை.

## பிரிந்து செல்வதோ சேர்ந்திருப்பதோ அந்தந்த நாட்டின் உள்விவகாரம் என்று கருதப்படுவதும் உண்டு

ஆனால் இன்று தமிழர் பெருவாரியாக வாழும் பிரதேசங்களில் பிறந்து, தமிழ்ச் சூழலில் வளர்ந்து, சிங்கள மக்களை அந்நியர்களாகவும் அரக்கர்களாகவும் நினைக்கும் பாங்கு கொண்ட தமிழ்ப் பேசும் மக்கள், பிரிவினை ஒன்றே எம் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழியென்று எப்பொழுதோ தீர்மானம் எடுத்திருக்கக் கூடும். அதற்கு தந்தை செல்வநாயகம் அவர்களின் அந்திமகால "அகற்சியே அடுத்த கட்டம்" என்ற அவரின் கருத்துரை ஆதாரமாக இருந்திருக்கக் கூடும்.

ஆகவே "விடிவை நோக்கி" என்ற தலையங்கத்தில் பேசவரும் என்னிடம் தந்தை செல்வா காலத்துக்கு வேண்டுமானால் உச்சக்கட்ட தன்னாட்சி அடிப்படையில் சமஷ்டி ஒரு தீர்வாக அமைந்திருக்கலாம். இன்று இவ்வளவும் பட்டபின் சமஷ்டி ஒரு தீர்வாக அமையலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா என்று வினவலாம். அதுவுந் தலையங்கத்தை "விடிவை நோக்கி..." என்று வைத்துக் கொண்டதால் ஒரு தற்காலிகத் தங்குமிடம் பற்றிப் பேசவா வந்துள்ளீர்கள் என்று கூட நீங்கள் கேட்கலாம்.

எமது இலக்குகளையும் இலட்சியங்களையும் நாங்கள் புரிந்துகொள்ள வேண் டும். பிரிவினையே எங்கள் இலக்கு; சமஷ்டித் தீர்வு ஒரு தங்குமிடம் என்பது ஒரு நோக்கு. சமஷ்டியே எங்கள் இலக்கு. பிரி வினையோ எமது பேரம்பேசும் ஆயுதம் என் பது இன்னொரு நோக்கு. இவற்றைவிட இன் னுமொரு நோக்குடையவர்களும் உள்ளார்கள். "தமிழர்கள் வருங்காலத்தில் இந்த நாட்டில் இருப்பார்களோ அவர்களைத் தமிழர்களாக வாழ விடுவார்களோ தெரியாது. நாங்கள் இருக்கப் போவது சிலகாலம். இருக்குங் காலத்தில் தந்திரமாய் அபகரிக்கக் கூடியதை அபகரித்து வைத்து சொகுசு வாழ்க்கை வாழ்வோம். இதற்காக எவன் காலடியில் விழுந் தாலும் பரவாயில்லை எவனிடம் மரியாதை கெட்டாலும் பரவாயில்லை எனது சுயநலமே முக்கியம்" என்பது இவர்களின் நோக்கு. ஆகவே இன்று இந்த மூன்று நோக்குகளுக்குமிடையே இலங்கையில் தமிழ்ப்பேசும் மக்கள் செய் வதறியாது மயங்கிக் கிடக்கின்றனர்.

ஒவ்வொரு நோக்கையும் முதலில் ஆராய்வோம். சுயநலமிகள் பற்றி முதல் வார்த்தை. கொழும்பை ஒட்டிய சில இடங்களில் பல தமிழர்கள் இன்று வாழ்கின்றார்கள். முக்கியமாக மலை நாட்டில் இருந்து வந்த தமிழர்கள் இவர்கள். "இருக்கும் வரையில் இன்பமாய் வாழ்வோம். கிடைப்பதைச் சுருட்டி வைத்துக் கொள்வோம்" என்ற எண்ணத்துடன் தமது பெயர்களைக் கத்தரித்து, நடையுடை பாவனைகளை மாற்றி, பெரும்பான்மையினராகத் தம்மைச் சித்தி ரித்து வாழ்கின்றார்கள். இவர்கள் படித்தது சிங்கள மொழிப் பாடசாலைகளில். கேட்பது சிங்கள மொழிச் சினிமா இசை. விஜேந்திரன் விஜேயாகவும், சோமகாந்தன் சோமேயா கவும், தர்மேந்திரன் தர்மேயாகவும் பெயர்கள் மாற்றப்பட்ட நிலையில் தாமும் சிங்களவரே என்று நிரூபிக்கும் நடத்தையில் ஈடுபட்டுள்ளார்கள். வீட்டில் பெற்றோருடனும் தமது பாரியார்களுடனும் தமிழில் பேசினாலும் அவர்கள் குழந்தைகளும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் தலைமுறை சிங்களமயமாகி அதற்கடுத்த தலைமுறை "துட்டகைமுனுவுக்கு ஜே!" என்று கொடிபிடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். கேட்டால் நல்ல தமிழ்மொழிப் பாடசாலைகள் இல்லை. எங்களைத் தமிழர்கள் என்று வெறுத்து ஒதுக்குகின்றார்கள். ஆகவே எம்மை மாற்றி அவர்களுடன் சேர்ந்து பொருளாதார விருத்தியைப் பெற்று வருகின்றோம். அதற்கு உங்களுக்கு என்னையா பிரச்சினை என்று கேட்காமல் கேட்கின்றார்கள்.

தமிழருக்கு உரிமை கொடாதே என்று கூறுபவர்களில் முன்நிற்பவர்கள் மதுரையில் இருந்த தமிழரின் வம்சத்தினர்.

இன்று சிங்கள மக்களிடையே கூடத் தமிழர்க்கெதிராப் போர்க் கொடி தூக்கும் பலரின் பூர்வீகம் இத்தகையதே. உதாரணமாக சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன் தர்மபால என்ற அரசனுக்கு மகுடஞ் சூட்ட உள்ளூரில் உரியவர்கள் இல்லை என்றதால் மதுரையில் இருந்து முனிவம்சத்துத் தமிழர்கள் பலர் கொண்டு வரப்பட்டார்கள். முடிசூட்டல் முடிந்ததும் "நீங்கள் இங்கேயே எங்கள் பெண்களை மணந்து வாழலாமே; உங்களுக்குக் காணிகள் பூமிகள் நான் தருகின்றேன்" - என்றார் அரசர். தேங்கி நின்றுவிட்டார்கள் அந்தச் சுத்த மதுரைத் தமிழர்கள். இன்று தமிழனைக் கொல்லு, தமிழனுக்கு உரித்துக்கள் கொடுக்காதே என்று

## தந்தை செல்வா நினைவுப் பேருரையில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

கூறுவதில் முன்னிலையில் நிற்கும் பலரின் பூர்வீகம் இதுதான்.

**மொழி போனால் எல்லாம் போய்விடும்**

இலாப்லாந்தில் இருந்து ஒரு பையன் சுவீடன் நாட்டுக்கு வந்து அங்கு கல்வி கற்றான். ஆனால் படித்ததோ அவனின் தாய் மொழியில் அல்ல. வேற்று மொழியில். வயது வந்த பின் அவன் சொன்ன வார்த்தைகள் பின்வருமாறு - "ஒரு புதிய தாய்மொழி என் மீது திணிக்கப்பட்டது. எனது மொழி, எனது வரலாறு, எனது கலாசாரம் என்னிடம் இருந்து பறிக்கப்பட்டிருந்தது. எனது பாடசாலையும் கல்லூரியும் எனது பாரம்பரிய மொழிக்குப் பதிலாகப் புதியதொன்றை என்னுள் உட்புகுத்தியிருந்தன. நான் தற்பொழுது அந்த மொழியில் மிக்க தேர்ச்சி பெற்றுள்ளேன். ஆனால் எனக்கு அந்நிய[illegible]றிருந்தது. அது "நான்" தான். ஏமாற்றப்பட்டது போல் நான் உணர்ந்தேன்". "மொழிசார் மனித உரிமைகள் வேண்டும்" என்ற தலையங்கத்தில் சுவீடன் நாட்டு றொஸ்கில்ட் பல்கலைக்கழக ஆராச்சியாளர்களான டீ.ஸ்குண்ட்நாப் கங்கஸ் என்பவரும் ஆர்.பிலிப்சன் என்பவரும் சேர்ந்து எழுதிய ஒரு கட்டுரையில் இதைப் படித்தேன். மொழிபோனால் 'முழுதும் போய்விடும்' என்ற கருத்துக்கு இந்த உண்மைக் கதை உதாரணமாக அமைகின்றது.

இன்று தமது வாழ்க்கை முறையை மேம்படுத்தலாம் என்ற வகையில் தமது பாரம்பரியத்தை இழக்கச் சிலர் முன்வந்துள்ளார்கள். கிடைக்காத ஒன்றிற்காகப் போராடுவதிலும் பார்க்கக் கிடைப்பதை வைத்துக் கொண்டு சொகுசாக வாழலாம் என்பது இந்தச் சுயநலமிகளின் நோக்கு. நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையிலான இடம் வாழ் பல தமிழ் மக்கள் இன்று தங்களைச் சிங்களவர்கள் என்று அடையாளம் காட்டுவது அவர்களின் முன்னோர்களின் அந்தச் சுயநலச் செய்கையின் நிமித்தமே.

புதுக்கடையில் அதாவது ஹல்வ்ஸ்டோர்ஃப்பில் சுமார் 35 வருடங்களுக்கு முன் என்னைப் போலச் சட்டத்தரணியாகத் தொழில் பார்த்த "பெர்ணாண்டோ" என்ற பெயர் கொண்ட எனது நண்பர் ஒருவர் பலர் முன்னிலையில் தான் சிங்களவரே என்று அடையாளம் காட்டிவிட்டுத் தனிமையில் இவ்வாறு கூறினார். "விக்னேஷ்! இன்றைய அரசியல் சூழ்நிலை அவ்வாறு பேசவைத்தது. நீ என் நண்பன். உனக்கொன்று கூற விரும்புகின்றேன். எனது தாயாருக்கு இப்பொழுது 86 வயது. இன்றும் தமிழ் பைபிளையே வாசிக்கின்றார். தேவாலயத்தில் தமிழ்மொழி வழிபாடுகளிலேயே இன்றும் கலந்துகொள்ளுகின்றார். எங்கள் பாரம்பரிய வீட்டு உறுதிகள் கூட இன்றும் தமிழ் மொழியிலேயே இருக்கின்றன" என்றார். இவர்கள் தமக்குத் தாமே அந்நியர்களாக மாறிவிட்டார்கள்.

**இளக்காரமாகப் பேசுவார்கள்**

இதில் இன்னுமொன்றைக் கவனிக்க வேண்டும். இவர்களைச் சிங்களவர் என்று தமது நன்மைக்காக ஏற்றுக்கொள்ளும் பாரம்பரிய பௌத்த சிங்கள மேல்வர்க்க மக்கள் தனிமையில் பேசும்போது "இவர்கள் முதலில் மதம் மாறினார்கள். இப்பொழுது இனம் மாறியுள்ளார்கள்" என்று இளக்காரமாகக் கூறி அவர்கள் தென்னிந்தியாவில் இருந்து வந்த கரையோரத் தமிழர்களே என்றும் கூறுவார்கள்.

ஆகவே சுயநலத்துடன் நாட்டின் அரசியல் பிரச்சினையை அணுகும் நபர்கள் காலக்கிரமத்தில் தம்மையும் தங்கள் சமூகத்தையும் மிகுந்த தாழ்ந்த ஒரு நிலைக்கு இட்டுச் செல்லப்போகின்றார்கள் என்பதை உணரவேண்டும். மற்றவர்கள் இன அழிப்பில் ஈடுபடமுன் இவர்கள் முந்திக் கொள்வார்கள் போல் தெரிகிறது.

அடுத்துப் பிரிவினை - சமஷ்டி இரண்டையும் பற்றி ஆராய்வோம். பிரிவினை பற்றி ஆராயும் போது மூன்று விடயங்கள் மனதில் நிலை நிறுத்தப்பட வேண்டும். சர்வதேசச் சட்டம் பிரிவினையை ஏற்கின்றதா? சர்வதேசக் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் பிரிவினையை [illegible] பிரிந்து செல்லப் போகும் நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் பிரிவினையை வரவேற்பார்கள் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உண்டா? இக்கேள்விகளை மனதில் நிறுத்திக் கொண்டே ஆராய்வைத் தொடங்குவோம்.

**சர்வதேசச் சட்டமும் பிரிவினையும்**

நடைமுறையில் இருக்கும் ஒரு தன்னாதிக்கம் கொண்ட நாட்டின் எந்த ஒரு பகுதியும் சட்ட பூர்வ மாக ஒரு பக்கம் பிரிந்து செல்லலாம் என்பதைச் சர்வதேசச் சட்டமானது ஏற்கவில்லை என்பது கண்கூடு. ஆனால் அதே நேரம் அவ்வாறு பிரிந்து செல்ல எந்த ஒரு உரித்தும் இல்லை என்று திடமாகக் கூறவும் சர்வதேசச் சட்டம் முன்வரவில்லை. இதை வைத்துப் பிரிந்து செல்வதைச் சர்வதேசச் சட்டம் தடை செய்யாததால் மறைமுகமாகப் பிரிந்து செல்வதைச் சர்வதேசச் சட்டம் ஏற்றுக்கொள்கின்றது என்று ஒரு சாரார் விவாதிப்பர். அதே நேரம் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவின் சுயநிர்ணய உரித்தை (The Right of Self determination) சர்வதேசச் சட்டம் ஏற்றுக்கொள்வதால் பிரிந்து செல்லலையும் சர்வதேசச் சட்டம் சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ளலாம் என்றும் இவர்கள் கருத்துத் தெரிவிப்பர். எனினும் பிரிந்து செல்லல் என்பது சர்வதேசச் சட்டத்தால் இதுவரை நேரடியாக ஏற்கப்பட்டதொன்றல்ல. ஏற்காமைக்குக் காரணம் பிரிந்து செல்லலுக்கான அடிப்படை சந்தர்ப்ப சூழ்நிலைகளை அவ்வளவு எளிதாக வரையறுக்க முடியாது போகும் என்பதும் அப் படி வரையறுக்கப்பட்டாலும் அதன்பின் அது நிரூபிக்கப்பட முடியாமற் போகும் என்பதுமான தயக்கமே.

அதாவது ஆக்கிரமித்திருக்கும் நாடொன்றினால் அல்லது அந்நாட்டின் அரசாங்கங்களினால் நியாயமற்ற முறையில் அந்நாட்டின் ஒரு பகுதியினர் நடத்தப்படுவதாகவோ அல்லது தம் நாட்டில் ஆக்கிரமிப்புக்கு அல்லது அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் நியாயமற்ற குரூரமான முறையில் தம் நாட்டிலேயே நடத்தப்படுவதாகவோ நிரூபிப்பது மிகக் கடினமாக இருக்கும் என்பதாலேயே பிரிந்து செல்லலைச் சர்வதேசச் சட்டம் ஏற்கவிலலை என்ற கருத்துக்கு இதனை அடிப்படைக் காரணமாகச் சட்ட நிபுணர்களில் ஒரு சாரார் எடுத்துக் காட்டுகின்றனர்.

நடைமுறையில் இருக்கும் ஒரு நாட்டின் இறைமையைச் சர்வதேசச் சட்டம் மிக முக்கியமானதொன்றாகக் கருதுகிறது. ஆகவே பிரிந்து செல்லலோ சேர்ந்திருப்பதோ அந்தந்த நாட்டின் உள்நாட்டு விவகாரம் என்று சர்வதேசச் சட்டம் கருதுவதாக 1963 இல் எழுதப்பட்ட "சர்வதேசச் சட்டத்தில் நிலப்பகுதி கையேற்பு" (The Acquisition of Territory in International Law) என்ற நூலில் ஆ.வை.ஜெனிங்ஸ் அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார். (பக்கம் 8-9) பிரிந்து செல்லலானது நாட்டின் அரசியல் யாப்புக்கு முரணாக இருக்கும் இடத்தில் சர்வதேசச் சட்டமானது அந்நாட்டின் அந்த யாப்பின் கொள்கையையே ஏற்கும் என்று கூறவேண்டும். அதாவது பிரிவதை அரசியல் யாப்பு மிகக் காரசாரமான முறையில் தடை செய்யாவிடில் அது வேறு விடயம். ஆனால் தடை செய்யுமிடத்து எமக்கிருக்கும் அவசரங்கள், அவலங்கள், அபிலாஷைகள் அனைத்தையும் நாம் வாழும் நாட்டின் யாப்புச் சட்ட அதிகார வரம்பை முன்வைத்தே சர்வதேசச் சட்டம் நோக்குகின்றது. அந்த நோக்கை நாங்கள் பிழையென்று புறக்கணிக்கவும் முடியாது. 18 வருடங்கள் நடைமுறையில் இருந்த வடக்குக் கிழக்கு இணைப்பு சட்டத்தால் பிரிக்கப்பட்டது. அதற்குச் சட்டத்தில் இடமிருந்தது எனப்பட்டது. ஆனால் 1833 ஆம் ஆண்டில் தமிழ்ப் பேசும் பகுதிகளும் மற்றைய பகுதிகளும் நிர்வாகக் காரணங்களுக்காகப் பிணைக்கப்பட்டதைப் பிரிக்க எங்கள் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு தடைசெய்கின்றது. அந்தத் தடையையே சர்வதேசச் சட்டம் கணக்கில் எடுக்கும். 175 வருடங்களுக்கு முன் நடந்தவற்றைக் கணக்கில் எடுக்காது.

( 14 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baraka

# இருமல், மூக்கடைப்புக்கு விரைவான நிவாரணி



ஆஷ்வா

பரக்கா ஆஷ்வா வில்லை பலநூற்றாண்டுகளாக பாவிக்கப்பட்டுவரும் கருஞ்சீரக எண்ணெய் மற்றும் பரிசோதனை செய்யப்பட்ட மூலிகைகளின் சேர்க்கையாலானது. கருஞ்சீரகமானது ஆஷ்வாவின் ஆற்றலை மேலும் மேம்படுத்துகிறது.
இம் மூலிகைகள் தடிமன், மூக்கடைப்பு, தலையிடி போன்றவற்றிற்கு பாவிக்கப்படுகிறது.

உடையுங்கள் ஊற்றுங்கள் முகருங்கள்




யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம் SIVA NARUMANAB POONGA No:288, Hospital Road, Jaffna. Tel: 021 2222567

Manufactured By: Bio Extracts (Pvt) Ltd. 11A, Milepost Avenue, Colombo 3, Sri Lanka.
Tel: +9411 2810570 Fax: +94 11 2827126. E.mail: bioext@expo.slt.lk www.baraka.lk
Marketed By: Expolanka Pharmaceuticals (Pvt) Ltd.



**மானிப்பாயில்...........**

**100% Practical Education!!**
பல புதிய விடயங்களுடன்
30/04/2008 அன்று பிரிவு - 04 ஆரம்பம் !!

**Diploma in Mobile Phone Repairing**

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-
**UNI TECHNOLOGY**
**ICT Education Trainers**
**Manipay** T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


## ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்திற்கு!

வர்த்தக நோக்கில் எனது பெயரில் 5ஆம் தர புலமைப் பரிசில் வழிகாட்டிக்கான நூலொன்று **"மலிபன் தெரு, கொழும்பிலிருந்து விமானம் மூலம் வந்து விற்பனையாகிறது"** என்ற போலியான தகவலுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. இப்படிப் போலியான தரமற்ற நூல்களை எனது நூல்கள் என விற்பனை செய்வதால் எனது பெயருக்குக் களங்கம் ஏற்படுகின்றது. எனவே இதற்காக மிகவும் வருந்துகிறேன்.

**எனது வெளியீடுகளாக... ஆண்டு 2008இல்**

★ ஏஞ்சல் (புலமை வழிகாட்டி)
★ விவேகம் (மாதிரி வினாத்தாள்)
★ சுற்றாடல்சார் செயற்பாடுகள் - தரம் 1-5
★ தமிழ்மொழி (புலமை வழிகாட்டி) - தரம் 1-5
★ கணிதம் (புலமை வழிகாட்டி) - தரம் 1-5

எனும் 5 விதமான நூல்களை மட்டுமே ந.சந்திரகுமார் ஆகிய நான் வெளியீடு செய்துள்ளேன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றேன்.

எனது நூல்கள் அனைத்தையும் மட்டக்களப்பு, "ராஜாஸ் புத்தக நிலையம்" மட்டுமே வெளியீடு செய்யும் என்பதையும் அறியத்தருகிறேன்.

**ந.சந்திரகுமார்,**
*515, திருமலை விதி,*
*மட்டக்களப்பு.*
065 - 2226698

*மேலதிக விவரங்களுக்கு:*
**ராஜாஸ் புத்தக நிலையம்,**
*111, மெயின் வீதி, மட்டக்களப்பு.*
065 - 2222371

(சி/552533)

## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி நகுலமீரா சிதம்பரநாதன்



உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீமதி நகுலமீரா 21.04.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினத்தின் (CTB மணியம்) சிரேஷ்ட புத்திரியும் திரு.திருமதி பொன்னையாவின் அன்பு மருமகளும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிதம்பரநாதனின் (குமரன் வைன் ஷொப், கல்வியங்காடு), அன்பு மனைவியும், நாகப்பிரபா, சித்திராரூபி, ஷாமினி ஆகியோரின் பாசமிகு தாயும், கிரிந்தன், சுகிதன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஆதித்தனின் அன்பு அம்மம்மாவும் செல்வரத்தினம், கனகலிங்கம் ஆகியோரின் பெறாமகளும், கைலாயபிள்ளை- சரோஜினிதேவி தம்பதியரின் மருமகளும் ராதா, மாலா, சக்ராயுதர், கீதா ஆகியோரின் அன்பு அக்காவும் திருமதி இராசமலர் கந்தசாமி (மைனா), காலஞ்சென்ற ஜீவரட்ணம், திருமதி சுசிலாதேவி சண்முகநாதன், க.தா.சிவகுருநாதன் (சுடர் ஒளி), ரவீந்திரன், ஸ்ரீவாசுதேவன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி ஜீவரட்ணம், ராசலட்சுமி, திருமதி நர்மதா சோதிலிங்கம், திருமதி கௌரிவாசதேவன் ஆகியோரின் சகோதரி முறையானவரும் ராதா, பிரேமாநிரஞ்சன், மோகனதாஸ், விஜயதாஸ், சற்குணராசா, செல்வமலர் ஆகியோரின் மாமியும் ஜீவதாசன், ஜீவராசன், ஜீவரேகா, ஜீவவத்சல, ஜீவகௌரி, ஆகியோரின் சித்தியும் துஷாந்தி, லாவர்ணன், சுதன், அபராஜிதன், சுதேசனா, நர்த்தனா, கீர்த்திக், மூலிஷன், கார்த்திகேயா, விஷாரதன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.04.2008 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24 5/1, இனிசியம் றோட், தெஹிவளை.
தொ.பே.இல.: 2732481

(சி/552563)

தகவல்:
பொ. சிதம்பரநாதன்.

## கூட்டுறவு நகர்கள் திறப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.27

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுநகர் (கோப் சிற்றி) திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோப் சிற்றியின் திறப்புவிழா சங்கத் தலைவர் பா.பத்மநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (202)

* * *

அச்சுவேலி, ஏப்.27

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 2ஆவது 'கோப் சிற்றி' திறப்பு விழா அச்சுவேலியில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றவுள்ள விழாவில் அச்சுவேலி சந்நிதி வீதியில் அமைக்கப்பட்டுள்ள கோப்சிற்றி விற்பனை நிலையத்தை வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைக்கவுள்ளார். (202-11)

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கையளிப்பு

பருத்தித்துறை கிராம சேவையாளர் பிரிவில் இருக்கும் சுப்பர் மடத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கபட்டு வீடுகளை இழந்தவர்களுக்கு வழங்குவதற்காக கட்டப்பட்டு வந்த நிரந்தர வீடுகள் விரைவில் உரியவர்களுக்கு கையளிக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் சேவாலங்கா மன்றத்தினரால் வைபவரீதியாக 37 பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட உள்ளதாக மன்னத்தினர் தெரிவித்துள்ளனர். (202-302)


**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
*இல.150, பாங்ஷால் வீதி,*
*யாழ்ப்பாணம்.* 021 222 6335
(73496)

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் லேன், நல்லூர்.*
(73261)

**பிள்ளையார் அச்சகம் நல்லூர்**

உங்கள் அன்புக்குரியவர்களின் படங்கள் நல்ல தரமான கலர்ப் படமாக அச்சிட்டுக் கொடுக்கப்படும்.
**பிள்ளையார் படம் 5/=**
(சி/562570)

**திருமண சேவை**

தங்கள் பிரச்சினை கிரகபாவமா...? கிரகபாவம் ஜாஸ்தியா..? கம்மியா..? கிரகபாவம் எந்த நிலையிலிருந்தாலும் பொருந்தக் கூடிய குறிப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம் **வேல்அமுதனே!** மேலதிக விபரங்களைத் திங்கள், புதன், வெள்ளி மாலை சுபநேரிவு முறை முன்னோடி மூத்த புகழ்பூத்த சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் துரும்பசிட்டியூர் மாயெழு வேல்அமுதனிடம் விசாரித்தறிக.
வேல்அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360486, 2360694, 4873929

**ORENDAL AQURIUAM**
**விற்பனைக்கு**

பல வகையான வளர்ப்பு கலர் மீன்களும் வெளிநாட்டு வளர்ப்புக் குருவிகள் மற்றும் புறோயிலர் இறைச்சிக் கோழிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: **மல்ரிபாம்**
61, இராமநாதன் வீதி (கலட்டி),
நாச்சிமார்கோவில் முன் வீதி.
T.P (0774007202)
(73518)


## மனம் கனிந்த நல் வாழ்த்துக்கள்



யாழ். பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் பொருளாளராகவும் இருந்து கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்தவம்சார் சமூகத்திற்கும் நற்பணியாற்றி வரும்
அருட்பணி கலாநிதி
**ஜெபரட்ணம் ஜெபமோகன்**
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில், கிறிஸ்தவ நாகரிகத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றமையையிட்டு யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினர் பெருமகிழ்ச்சி அடைவதோடு அடிகளாரின் பணிகள் மேன்மேலும் சிறக்க இறையருளை வேண்டி மனம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(73504) **யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினர்.**


**கொழும்பில்**

பாதுகாப்புடன் கூடிய நம்பிக்கையான தங்குமிடவசதிகட்கு.
↓
**தம்பி லொட்ஜ் 177**
"தம்பி கட்டிடம்"
177, பழைய சோனகத்தெரு, கொழும்பு- 12
011 - 2343126, 077-7382343

**மலேசியா நாட்டில் வேலை வாய்ப்பு**


• அலுவலக உதவியாளர்கள்
• பல்பொருள் அங்காடி விற்பனையாளர்கள்
• கணக்காளர்
• லிகிதர்

ஆலோசனைகளுக்கு
**071-5324495**

டயலொக் (Dialog) கிட் காட் (Kit Card) & றீலோட் (Reload)
எந்தவித மேலதிகக்கட்டணமும் இல்லாமல் நியாயமானவிலைகளில்
**தம்பி** கொமினிகேஷன்
90, கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி :- 071-4353000


சிவமயம்

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நாகலிங்கம் பாலகிருஷ்ணர்**
(பத்தர்)

| அன்னையின் மடியில் | ஆண்டவனின் அடியில் |
| --- | --- |
| 09.11.1920 | 09.05.1988 |

*திதி: 27.04.2008*

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

**பிறந்தவன் எவனுக்கும் மரணமும்**
**மரணப்பட்டவனுக்குப் பிறப்பும் நிச்சயமே!**
**தவிர்க்க முடியாத உன் கடமைகளைச்**
**செயலாற்றுவதில் இதற்காகக் கவலைப்படாதே!!**

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!

தெய்வமாகிய உங்களின் இந்நினைவு நாளில்
நாங்கள் கண்ணீர் மலர் தூவி வணங்குகின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு.
(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை).

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(73514)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவருடங்களுக்குப் பின்னரும் ஆபத்து விளைவிக்கவல்ல மிதிவெடிகள்........ யாவரும் கவனமாக இருக்கவேண்டும்....

மிதி வெடிகள், வெடிக்காத வெடி பொருள்கள், யுத்த, ஆயுத உபகரணங்கள் மற்றும் ஏனைய வெடிபொருள்களால் உலகத்தில் உள்ள ஏறத்தாழ 82 நாடுகளைச் சேர்ந்த மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் எமது நாடும் உள்ளடங்குகிறது. மிதிவெடிகள், வெடிபொருள்களின் தாக்கம் விவரிக்கமுடியாத அளவுக்கு இந்த உலகப் பந்தினை பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. உலக நாடுகளிடையே அதிகரித்து வரும் யுத்த நடவடிக்கைகளும், உள்நாட்டு யுத்தங்களும், வன்முறைகளும், மிதிவெடிகள், வெடிபொருள்களின் உற்பத்தியையும், பயன்பாட்டையும் அதிகரிக்கும் அதேவேளை, அவற்றின் தாக்கமும் பாதிப்புகளும் அபரிமீதமாகவே உள்ளன. பல நாடுகளில் யுத்தமும் போர் நடவடிக்கைகளும் முடிவுக்கு வந்த போதிலும் இன்னும் அந்த நாடுகள் மிதி வெடிகள், வெடி பொருள் தாக்கங்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன.

இலங்கையிலும் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமான காலம் தொடக்கமே இம் மிதிவெடிகளினதும் வெடி பொருள்களினதும் தாக்கங்கள் இங்கு ஆரம்பமாகிவிட்டன. யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புகளாலும் தங்களைப் பாதுகாத்து கொள்வதற்கும் எதிர்த்தரப்பினரை கொல்வதற்கும் காயப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டன; பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. பல இடங்களில் வெடிபொருள்களும் விழுந்தும் வெடிக்காத நிலையில் காணப்படுகின்றன.

போர் அனர்த்தங்களாலும், நடவடிக்கைகளாலும் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர, அம்மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் போர்க்களங்களாக மாறின. மோதல்கள் நடைபெற்ற இடங்களில் மிதிவெடிகள், வெடிபொருள்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. அத்தகைய இடங்களில் பொதுமக்கள் மீளக் குடியேறும் போது அங்கு காணப்படும் மிதிவெடிகள், வெடிபொருள்களால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

இம்மிதிவெடிகள், வெடிபொருள்கள் குறுகிய காலத்துக்கு மட்டும் செயற்படக்கூடியவை அல்ல. இவை பல வருடங்களுக்கு பின்னரும் செயற்படக்கூடியவை. அவை வெடிக்க கூடியவையாகவும் இருக்கும். இவ்வகையான ஆபத்துகளிலும் அபாயங்களிலும் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தினதும் சர்வதேச

## பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சிறுவர்களே

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சம்பந்தப்பட்ட தரப்புகளினதும் பாரிய பொறுப்பாகும். மக்கள் மத்தியில் மக்களுக்குச் சென்றடையக்கூடிய விதத்தில் சரியான விழிப்புணர்வு கருத்துகள் எடுத்துச் சொல்லப்படுவதன் மூலமே முற்கூறிய ஆபத்துக்களிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இம்மிதிவெடிகள் தனி ஒரு மனிதனையோ அல்லது மனிதர்களையோ தாக்கிக் கொல்வதற்கோ அல்லது காயப்படுத்தி உடல் உறுப்புகளை இழக்கச் செய்வதற்கோ அல்லது வாகனங்களை தாக்கி அழிப்பதற்கோ உருவாக்கப்பட்ட வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட உபகரணங்களாகும். இவை தனி நபர் எதிர்ப்பு (Anti Personnel Mine) மிதி வெடிகள் எனவும் வாகன எதிர்ப்பு கண்ணி வெடிகள் (Anti Vehicle Mine) எனவும் இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகையான மிதிவெடிகள் நேரடியான அழுத்தம் பிரயோகிக்கப்படுவதன் மூலமோ இடறு கம்பிகள் செயற்பாட்டின் மூலமோ அல்லது மின்சாரவயர்கள் மூலமோ அல்லது றிமோட் கருவிகள் மூலமோ வெடிக்கின்றன.

### பிளாஸ்ரிக் மிதிவெடிகள்

பெரும்பாலான தனிநபர் எதிர்ப்பு மிதி வெடிகள் பிளாஸ்ரிக்கால் செய்யப்படுகின்றன. இவை கவர்ச்சிகரமான வடிவங்களைக் கொண்டவையாகவும் பாரம் குறைந்தவையாகவும் உள்ளன. இவை நிலதிற்குள் புதைக்கப்பட்டோ, நில மேற்பரப்பிலோ, நில மேற்பரப்பிற்கு மேலே பொருத்தப்பட்டோ காணப்படலாம். பெரும்பாலான மிதிவெடிகள் இலகுவில் இனங்கண்டு கொள்ளமுடியாத வகையில் சூழலுக்கேற்ப நிறங்களை கொண்டிருப்பதுடன் அல்லது சூழல் நிறங்களுக்கு ஏற்ப உரு மறைப்புச் செய்யப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுமக்களால் இவற்றை இலகுவில் இனம் காண முடி



மிதிவெடியில் ஒரு ரகம்

யாது. இவை வழமையாக வீதியின் நடுவிலும், இருமருங்கிலும், அதிகம் பாவனையில் உள்ள வீடுகள், கட்டடங்களுக்கு அருகிலும், மரங்களின் கீழும் மற்றும் எதிரிகள், பொதுமக்கள் அதிகம் பாவனைக்

## அவை நிறைகுறைவு என்பதால் ஆபத்தற்ற — பிரதேசங்களையும் சென்றடையும் வாய்ப்பு அதிகம்

குட்படும் இடங்களிலும் புதைக்கப்படுகின்றன.

### ரகங்கள் அறுநூறு

மிதிவெடிகளால் சமூக, பொருளாதார, உடல், உள ரீதியாகப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. யுத்த நியமங்களின் பிரகாரம் மிதிவெடிகள் ஒரு குறித்த ஒழுங்கிலேயே புதைக்கப்படவேண்டும் என்றும் அவை புதைக்கப்பட்ட அல்லது காணப்படும் இடங்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளால் வரைபடம் மூலம் குறிப்பிடப்பட்டு பேணப்படல் வேண்டும் என்றும் கூறப்படுகிறது. உலக நாடுகளில் ஏறத்தாழ 600 இற்கும் மேற்பட்ட மிதிவெடி மற்றும் கண்ணிவெடி வகைகள் பாவனையில் உள்ளதாக அறியப்படுகின்றது.

### பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்லவை

இத்தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகளானவை, தனிநபர் எதிர்ப்பு வெடிகள் (Blast Anti - Personnel Mines) எனவும் தனிநபர் எதிர்ப்பு சிதறு மிதிவெடிகள் (Fragmentation Anti - Personnel Mine) எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. இத்தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகள் (Blast) குறித்த நிறையுடைய வெடிமருந்துகளால் நிரப்பப்படுகின்றன. பெரும்பாலான இவ்வகையான மிதிவெடி விபத்துகளின்போது, பாதிக்கப்படுபவரின் கால் துண்டிக்கப்பட நேருவதுடன், பெரும் காயங்கள் ஏற்படின் மரணமும் சம்பவிக்கிறது. சில வகையான மிதிவெடிகள் உலோகங்களாலும் மரத்தாலும் செய்யப்படுகின்றன. ஆனால் பெரும்பாலானவை பிளாஸ்ரிக்கால் செய்யப்படுவதால், நீர் உட்புகாமல் தடுக்கப்படுவதுடன் நீண்டகாலம் ''உயிர் வாழ்கின்றன''. அத்துடன் இவை நிறை மிகக் குறைவாகக் காணப்படுவதால், மழைநீராலும் நீரோட்டங்களிலும் அடித்துச் செல்லப்படுவதால் மிதிவெடி ஆபத்தற்ற பிரதேசங்களையும் இவை சென்றடைந்து, மக்களுக்குப் பெரும் எதிர்பாராத பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இவை வழமையாக பச்சை, மஞ்சள், கறுப்பு, மண்ணிறம் மற்றும் சாம்பல் நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. தனிநபர் எதிர்ப்பு சிதறு மிதிவெடிகளானவை (Fragmentation) வழமையாக இறப்பை ஏற்படுத்துவதற்காகவும் அல்லது பரவலான பெரிய காயங்களை ஏற்படுத்தப்படகூடிய வகையில் தயாரிக்கப்பட்டுப் பாவிக்கப்படுகின்றன.

இவ்வகையான மிதிவெடிகளினுள் வெடிமருந்துடன் சேர்த்து இரும்புத் திறல்கள், இரும்புக் குண்டுகள் மற்றும் உலோக கூரான அமைப்புகளும் சேர்த்து உருவாக்கப்படுகின்றன. இவை வெடிக்கும்போது அதில் உலோக அமைப்புகள், நெருப்புத் தணல்கள் போன்று வெடித்துச் சிதறி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. எமது நாட்டில் நாம் அடிக்கடி கேள்விப்படும் ''கிளைமோர்'' இவ்வகையைச் சேர்ந்த சிதறு வெடியாகும்.

### வாகன எதிர்ப்புக் கண்ணிவெடிகள்

வாகன எதிர்ப்புக் கண்ணி வெடிகளில் அனேகமானவை தாங்கி எதிர்ப்பு கண்ணி வெடி கள் என்று அறியப்படுகின்றன. இவை அனேகம் எதிரிகளின் வாகனங்களை, தாங்கிகளை தாக்கியழிப்பதற்கென தயாரிக்கப்பட்டவையாகும். இவை ஒப்பீட்டளவில் பெரியதாகவும் கூடிய நிறை வெடி மருந்துகள் நிரப்பப் பட்டும் தயாரிக்கப்படுகின்றன. இவை அனேகமாக வீதிகளிலும் வாகனங்கள் சென்று வரும் பாதைகளிலும் புதைக்கப்படுகின்றன.

வெடிக்காத வெடிபொருள் களை நோக்கும்போது, (Unexploded Ordnance) இவை போர் நட வடிக்கைளின்போது, பாவிக்கப்பட்ட வெடி பொருள்களையும் விழுந்தும் வெடிக்காத நிலையில் உள்ள வெடிபொருள்களயும் குறிக்கின்றன. இவற்றுள் ஆட்டிலறி தாங்கி, எறிகணைகள்(Artillery/Tankshells), மோட்டார் குண்டுகள் (Mortar Bombs), ரொக்கட்டுகள்(Rockets), ஏவுகணை கள்(Missiles), கை எறிகுண்டுகள்(Grenades) மற்றும் இதர குண்டுகளும் அடங்குகின்றன. எமது நாடு உட்பட உலகின் பல நாடுகளில் இவ் வெடிபொருள்கள் பாரதூர மான விளைவுகளைப் பொதுமக்களுக்கு இன்னும் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

வெடிபொருள்கள் பல வருடங்களுக்குப் பின்னரும் எந்நேரமும் வெடிக்கும் நிலைக்கு உள்ளாகி, ஏதாவது ஒரு சிறிய இடையூறுகள் ஏற்படும்போதும் இவை வெடித்து பெரும் சேதங்களை ஏற்படுத்துகின்றன. இவை காணப்படும்போது ஆபத்தற்றவை போன்று காணப்பட்டாலும் பல வருடங்களுக்குப் பிறகும் மிக ஆபத்தானவையாக இருக்கும் என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் எமது மக்கள் இம்மிதி வெடிகள், வெடி பொருள்கள் குறித்து ஓரளவு விழிப்புணர்வைப் பெற்றுள்ளார்கள். இவ் விழிப்புணர்வும் அபாயக் கல்வியும் பல்வேறு வழிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டே வருகின்றன. ஆயினும் மிகவும் வறுமைக்குட்பட்ட மக்களே இம்மிதி வெடி, வெடிபொருள்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எமது நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுவரும் போரானது, பொருளாதார ரீதியில் எமது மக்களை மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளியுள்ளது. பொருளாதார கஷ்டங்கள், வருமானமின்மை, வேலைவாய்ப்பின்மை காரணமாக மக்கள் வெடிபொருள் ஆபத் துகளையும் பொருட்படுத்தாமல், கவனத்தில் கொள்ளாது செயற்படுவதன் மூலம் மிக அதிகளவு விபத்துகள் ஏற்படுகின்றன. எமது பிரதேசங்களில் இயங்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறான பின்தங்கிய, வறுமைக்குட்பட்ட மக்களை இனங்கண்டு, தமது உதவிகளைப் பல்வேறு வழிகளில் அதிகரிப்பதன் மூலம், இவ்வாறான மிதிவெடி, வெடிபொருள் ஆபத்துகளிலிருந்து குறைக்கலாம்.

### சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

பொதுமக்களும் மிதிவெடிகள், வெடி பொருள்களின் ஆபத்துகளையும், அபாயகரமான விளைவுகளையும் மனதில் நிறுத்திச் செயற்படவேண்டியது அவசியமாகும். மிதிவெடிகள், வெடிபொருள்கள் காணப்படக்கூடிய இடங்களை அவதானித்து, தவிர்த்து நடப்பதன் மூலம் இந்த ஆபத்துகளை பெருமளவில் குறைக்கலாம்.

இவ்வாறான ஆபத்துகளில் சிறுவர்களே அதிகம் சிக்கிக் கொள்கின்றனர். சிறுவர் விளையாடும் சந்தேகத்துக்கிடமான பொருள்களில் நாம் அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாகும். கடந்த காலங்களில் அனேகமான சிறுவர்கள் மிதிவெடி, வெடிபொருள் விபத்துகளுக்கு உள்ளாகியிருப்பது ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

மிதிவெடி அகற்றப்படும் இடங்களிலும், மிதிவெடிகள், வெடிபொருள்கள் உள்ளதாக சந்தேகிக்கப்படும் இடங்களிலும் இடப்பட்டிருக்கும் அபாய எச்சரிக்கைக் குறியீடுகளையும் அவதானித்து தவிர்த்து நடப்பதன் மூலம் இவ்விபத்துகளில் நாம் சிக்காது தவிர்க்கலாம்.

அனேகமாக மண்டையோட்டுக் குறியே உத்தியோகபூர்வ குறியீடாக பயன்படுத்தப்பவதுடன், மஞ்சள் நிறத்தில் மிதிவெடிகள் கவனம் என மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பொலித்தீன் நாடாவும் மிதிவெடி, வெடிபொருள் அபாயப் பிரதேசங்களை வேறுபடுத்திக் காட்ட பயன்படுத்தப்படுகின்றன.

மிதிவெடிகள், வெடிபொருள்கள் விபத்துக்களில் நாம் கவனயீனமாக நடந்து சிக்கிக்கொண்டு பிறகு கவலைப்படு வதால் எந்த நன்மையும் ஏற்படப் போவ தில்லை. இவ்வாறான ஆபத்துகள் எமது வாழ்வை முற்றாகவே பாதிக்கக்கூடி யவை. இவற்றில் இருந்து தப்பிக்கொள்ள நாம் ஒவ்



ஓரளவில் கண்ணுக்குத் தெரியக்கூடியவாறு மண்ணில் புதையுண்டுள்ள அபாயகரமான வெடிபொருள் வகைகளில் ஒன்று இது.

வொருவரும் புரிந்து செயற்பட வேண்டும்.

மிதிவெடி விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் கடந்த பல வருடங்களாக 'யுனிசெவ்' நிறுவனம், மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறது. சர்வோதயம் மற்றும் வெண்புறா நிறுவனங்களூடாக நிதி அனுசரணை திட்ட ஆலோசனைகளையும் வழங்கி மிதிவெடி அபாய கல்வி, விழிப்புணர்வு பொது மக்களை சென்றடைவதற்கும் பெரும் பங்காற்றி வருகின்றது.

அத்துடன் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகமும் மிதிவெடி அகற்றும் நிறுவனங்களும் தமது செயற்பாடுகளுடன் மிதிவெடி, வெடிபொருள் விழிப்புணர்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

போர் நடவடிக்கைகளால் சகல வழிகளிலும் பாதிப்புக்குள்ளாகும் எமது மக்கள் இக்கொடிய மிதிவெடி, வெடிபொருள் அரக்கர்களினதும் கோரப்பசிக்கு இரையாகாமல் எம்மை நாமே பாதுகாத்து, மிதிவெடி செயற்பாடுகள் யாவற்றுக்கும் இயன்ற ஒத்துழைப்பு வழங்குவோம். *


கே.வசந்தகுமார்
இணைப்பாளர்,
மிதிவெடி அபாயக் கல்வி,
சர்வோதயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர்கள் சமூகத்தின் கண்கள்; மக்களின் காவலர்களும் அவர்களே...!



தென் மராட்சியில் எல்லோருக்கும் தெரிந்த, எல்லோருடனும் புன்முறுவலுடன் பேசிப் பழகிய, புகழ்பெற்றுத் திகழ்ந்த மூத்த பத்திரிக்கையாளர்களில் ஒருவர் ம. அருளம்பலம் ஆவார்.



யாழ்ப்பாணத்தில் மூத்த பத்திரிகையாளர்களில் சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த ம.அருளம்பலமும் ஒருவர். வீரகேசரி, தினகரன், தினபதி ஆகிய கொழும்பு நாளேடுகளுக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு தினசரிக்கும் காலத்துக்குக் காலம் சாவகச்சேரிச் செய்தியாளராகப் பணியாற்றியவர்.

செய்திகளைச் சரியாகவும், உண்மையாகவும் தர வேண்டும் என்ற நோக்குடன், அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். செய்திகள் முந்திக் கிடைக்கவில்லை என்று அவரிடம் முறைப்பட்டுக்கொண்டால், உண்மையான, சரியான தகவல்களை எடுப்பதில் சற்றுத் தாமதமாகிவிட்டது என்று சிரித்துக் கொண்டு கூறுவார்.

பத்திரிகைத் தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து உழைத்த மூத்தவர் அவர். அவர் செய்திகள், கட்டுரைகள் மட்டுமன்றி புனைபெயர்களில் பல கவிதைகளையும் படைத்தவர்.

பெரியார் அருளம்பலத்தை செவ்வி கண்டு உதயனில் வெளியிட விரும்பினோம். வயது முதிர்ந்த காலத்திலும் மிதி வண்டியில் பயணம் செய்து முக்கிய விழாக்கள், நிகழ்வுகளில் பங்குபற்றியவர் அவர்.

உதயனுக்கெனச் செவ்வி கண்டு இரண்டு மூன்று வாரங்களில் கொழும்பு சென்றவர் அங்கேயே தமது 80 ஆவது வயதில் காலமானவர்.

அவரது செவ்வி காலம் பிந்தி வெளிவருகின்றது.

- ஆசிரியர்.

## ஆலயங்களில் "சின்னமேளம்" நடனத்தை நிறுத்த எனது பத்திரிகைப் பணி உதவியது

**த. அருணன்**

80 வயதில் அவர் காலமாவதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக 'உதயன்' பத்திரிகைக்கென வழங்கிய செவ்வியாகும் இத் தொகுப்பு.

கட்டையான தோற்றம்; அன்பான பார்வை; 80 வயதிலும் மிடுக்கான நடை; சையிக்கிள் ஓட்டத்துடன் நடைப்பயிற் சியிலும் ஈடுபடுவார். இது அவரது உடல் உறுதிக்கும் ஆரோக்கியத்துக்கும் உதவியது.

தமது ஆரம்பக் கல்வியை வீட்டுக்கு அண்மையிலுள்ள மட்டுவில் மகா வித்தியாலயம் என அழைக்கப்படும் சந்திர ஸ்கந்த வரோதயா மகா வித்தியாலயத்தில் கற்று பின்னர் மேற்கல்வியை தொடர வசதியாகக் கல்லூரியில் கற்க விரும்பி அன்று சிறந்த பாடசாலையான டிறிபேக் கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னர் கொழும்பு சென்று மருதானையிலிருந்த தொழில்நுட்பக் கல்லூரி நிலையத்தில் தொழிற் கல்வியை கற்றார். அவரிடம் கேட்கப் பட்ட கேள்விகளுக்கு அவர் நறுக்கென்று பதிலளித்தார். வயதிற்குரிய சோர்வு வெளிப்படவில்லை.

நான் படித்துக் கொண்டிருக்கும் பொழுது கவிதை எழுதுவதில் தனி ஆர்வம் இருந்தது. அப்பொழுது புதிய பாணியில் எதையும் உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னிடத்தில் ஏற்பட்டது. அப்பொழுது எழுத வேண்டும் என்ற ஆர்வமும் தூண் டப்பட்டது. தாய் தகப்பனை இழந்து இருந்த காலத்தை கழித்த நான் எனது தாய் மாமன் பண்டிதர் அளித்த ஊக்கத்தில் மேலும் வளம் பெற்றேன்.

**பத்திரிகைகளில் எழுதும் ஆர்வம்**

தினகரன், வீரகேசரி, ஈழநாடு இப் பத்திரிகைளை நான் தொடர்ந்து படிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தேன் அதனால் அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களின் எழுத்தாற்றலை அவதானித்தேன். அவை எனது எழுத்தாற்றலை தூண்டின. அதனால் எழுதத் தொடங்கினேன்.

...ாவைச் சேர்ந்த கே.பி.ஹரன் ...கவும் ஆற்றலுடன் எழுத உந்துதலாக இருந்தார். இராமசாமி என்பவர் குழந்தைகளுக்கான பத்திரிகைகளை வெளியிட்டார். அதற்கும் எழுத ஆரம்பித்தேன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அன்றைய நாள்களில் மிகவும் துணிவுடன் வெளி வந்த பத்திரிகை ஈழநாடு ஆகும். அப்பொழுது ஈழநாடு பத்திரிகையின் விலை 5 சதமாகும். அது நல்ல வடிவமைப்புடன் வெளிவந்தது. அதிகாலையில் மக்களின் கைகளுக்குச் செல்லக் கூடியதாக வெளி வந்தது. அந்த ஈழநாடு பத்திரிகையில் 10 வருட காலமாக அலுவலக நிருபராகப் பணியாற்றினேன்.

ஈழநாடு பத்திரிகையில் எழுதிய பின்னர் தினபதி பத்திரிகையில் பணிபுரிய ஆரம்பித்தேன். அந்நாள்களில் எஸ்.ரி. சிவநாயகம், கே.கே.இரத்தினசிங்கம், ம.வ.கானமயில்நாதன் (தற்பெழுது உதயன் பிரதம ஆசிரியர்) ஆகியோர் ஊக்கம் கொடுத்து வந்தனர். அப்பொழுது நான் சாவகச்சேரி நிருபராக எழுதிவந்தேன். அந்த நாள்களில் எனது செய்திகள் சிறப்பாகவும் முதன்மையாகவும் இருக்கும் வகையில் எழுதினேன் - என்றார்.

பத்திரிகைக்கு எழுதும் காலங்களில் உங்கள் வாழ்க்கைக்கு போதிய ஊதியம் கிடைத்ததா?

அந்த நாள்களில் வருமானத்தை எதிர் பார்த்து எழுதவில்லை. ஆனால் ஆரம்ப காலத்தில் 150 ரூபா வரை அலவன்ஸாகத் தந்தார்கள். பிரசுரமாகும் செய்திகளுக்கு தகுதி ரீதியாகப் பணம் கிடைக்கும்.

இதனால் எனது பிள்ளைகள் வளர் வதற்கும், அவர்களுக்கும் உந்து சக்தியாக அது காணப்பட்டது.

**பத்திரிகையாளர் பணிபற்றி....**

பத்திரிகையாளர்கள் சமூகத்துடன் ஒன்றித்தவர்கள், சமூகத்துடன் பின்னிப் பிணைந்தவர்கள். என்வே சமூகத்தை சீர்திருத்தும் வகையில் எழுதுதல் வேண்டும். பத்திரிகையாளன் தனது வருமானத்திற்காக எழுதக் கூடாது. பத்திரிகையாளனிடம் சுறுசுறுப்பு மிக அவசியம். செய்திகளை சமூகத்திற்கு உண்மைத் தன்மையுடன் எழுத வேண்டும். மாறாக செய்திகளைப் பெரிதாக்கி அநாவசிய புகுத்தல்களை ஏற்படுத்தக் கூடாது. அது ஒழுங்கற்ற முறையாகும்.

**இலகுவான தமிழ் நடையில் எழுத வேண்டும்**

சிறுதொகைப் பணத்தில் நிறைய விடயங்களை வாசிக்க பொதுமக்கள் எதிர் பார்ப்பார்கள். எனவே பத்திரிகையாளர் கள் இலகுவான தமிழ் நடையில் எழுத வேண்டும். இதனை ஒவ்வொரு பத்திரிகையாளனும் மனதில்கொள்ள வேண்டும். பத்திரிகைகளின் முக்கிய பணிகளில் ஒன்று- சமூகத்திற்கு மதம் சார்ந்த செய்திகளையும் வழங்குதலாகும். மதம், உண்மையில் சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் மார்க்கம். எனவே அதன் கருத்துக்களை மக்களுக்கு வழங்க வேண்டும். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து எந்தவொரு மதத்தையும் புண்படுத்தாது. எழுதவேண்டும். நல்ல விடயங்களை நல்ல கருத்துக்களை இலகுவில் விளங்கத்தக்க வகையில் எழுத வேண்டும், அது காலத்தின் தேவையாகும்.

**சின்னமேளம் நின்றது**

எனது காலத்தில் மத சம்பந்தமான செய்திகள், நீதிமன்றச் செய்திகள், பொதுக் கூட்ட செய்திகள், அதைவிட வேறும் பல செய்திகளை ஆர்வத்துடன் எழுதினேன். நான் மத சம்பந்தமான அறிஞர்களின் பேச்சுக்களை அதிகமாகச் சேகரித்து எழுதினேன்- அவை தாரளமாகப் பத்திரி கையில் பிரசுரிக்கப்பட்டன. எனது ஊரில் விசேட தினங்களில் திருவிழாக் களில் 'சின்ன மேளம்' என்ற நடன நிகழ்வு இடம் பெறுவதுண்டு. அத்தகைய சின்ன மேளம் நடன நிகழ்வு ஆலயத்தில் வேண்டாம் என நிறுத்தி சமய அறிஞர் களின் பேச்சுக்களை நிகழ்த்தச்செய்து அவர்களுக்கு காளாஞ்சி பிரசாதம் வழங்க ஏற்பாடு செய்தேன். எனது பத்திரிகைப் பணி அதற்குப் பெரிதும் உதவியது. இதனால் எனது ஊரில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினேன் என்று பெருமைப்படுகிறேன்.

நீதிமன்ற செய்திகளில் அந்த நாள்களில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான வழக்கு செய்திகளை முக்கியமாக எழுது வது வழக்கம். எனினும் குடும்ப வழக்குகள், காதல் தொடர்பான வழக்குகளையும் எழுதினேன்.

அக்காலத்தில் நீதிமன்றத்தில் பத்திரிகையாளருக்கான இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பார்வையாளர்கள் பகுதியில் சாட்சிக் கூண்டுக்கு அருகில் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. நாம் அமைதியாக இருந்து செய்திகளைச் சேகரித்தோம்.

**பொதுக் கூட்டங்கள் தொடர்பாக**

பொதுக்கூட்டங்களில் சென்று செய்திகளைச் சேகரித்தோம். அதைவிட அரசியல் கூட்டங்களிலும் கட்சி பேதமின்றி செய்திகளைச் சேகரித்தோம். அக்காலங்களில் சாவகச்சேரி தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பாக வ.ந. நவரத்தினமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பாக வே.குமாரசுவாமியும் போட்டியிட்டனர். அக் காலத்தில் மாறிமாறி கட்சிகளின் கூட்டங்கள் ஆங்காங்கே நடந்தன. கூட்டங்களுக்குச் சென்று செய்திகளைச் சேகரித்தேன்.

**பத்திரிகையாளர்களின் பண்புகள் பற்றி**


பத்திரிகையாளர்கள் சமூகத்தின் கண்கள்- மக்களின் காவலர்களும் அவர்களே. அவர்கள் சுறுசுறுப்பாக எந்த வேளையிலும் இருக்க வேண்டும். பத்திரிகையாள ரிடம் மனதில் நான் பொது மக்களின் பிரதி நிதி என்ற எண்ணம் இருக்க வேண்டும். எனவே சீரிய பண்புடன் செய்திகளை எழுத வேண்டும். அத்துடன் பத்திரிகையின் வளர்ச்சியில் கண்ணோட்டம் வேண்டும். அத்துடன் தான் சார்ந்த பத்திரிகை நிறுவனத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும்.

உதயன் பத்திரிகை தொடர்பாக உங் கள் கருத்து:-

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை திரு. கானத்தின் வழிப்படுத்தலில் சிறப்பாக அமைந்து வெளிவருகிறது. நான் உதயனை நாளாந்தம் தேடி வாசிப்பேன். அது மக்களுக்கு நல்ல பணியை வழங்கி வருகின்றது. தற்பொழுது கணனியுகம். எனவே புதிய பாணியில் வெளிவருகிறது. மிகவும் போற்று தலுக்குரியது - எனவும் குறிப்பிட்டார் பத்திரிகையாளர். ★

## தாகமாயிருக்கின்றேன்...

தரணி மீது கொண்ட தணியாத தாகத்தினால் ஆயிரம் தாக்கங்களை தனக்குள்ளே தாங்கிக் கொண்டு அத்தனைக்கும் மொத்த வடிவம் கொடுத்து ஆண்டவன் சொன்னான் - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. கருவறையில் கண் திறக்கும் சிசு எங்கே அது தனக்கு கல்லறையாகிடுமோ என்று கலங்கி அன்னையின் அனுமதிக்காக ஏங்கி அந்தப் பிஞ்சு தேகம் சொன்னது - 'தாகமாயிருக்கிறேன்....' என்று. தொட்டிலில் சாய்த்து தாலாட்டுப் பாட வேண்டிய நேரத்தில் தொடர் நாடகத்தில் மூழ்கிப் புட்டிப் பாலை நீட்டிப் பெற்ற பாசத்தை எட்டி வைக்கையில் சின்ன மனம் சொன்னது - 'தாகமாயிருக்கிறேன்...' என்று.



நன்மைகள் நிறைந்தபோது நாயராய் தேடி வந்தவர்கள் துன்பங்கள் என்றவுடன் பேயாய் ஓடிச் செல்கையில் உண்மை அன்புக்கு ஏங்கியவன் சொன்னான் - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. அர்ப்பண வாழ்வில் அடியெடுத்து வைத்த பின் உத்தமன் யேசுவை உதறி விட்டு அற்ப ஆசைகளுக்குள் அடிமைப் பட்டு உணர்விழந்து உரிமையிழந்த உள்மனம் சொன்னது - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. நீதிக்காகக் குரல் கொடுத் தவர்களை நீதிமன்றங்களில் நிறுத்தி அநியாயத் தீர்ப்புக்களை அரங்கேற்றும் வேளைகளில் நிந்தையில் அடிபட்டவன் மனம் சொன்னது - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையைப் பரிதவிக்க விட்டு பல்லான ஆசைகளைத் தேடிச் சென்ற பிள்ளையை நினைத்துப் பெற்ற மனம் சொன்னது - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. இறைவனின் அன்பை மறந்து இறை உறவைப் பிரிந்து தவறான வாழ்க்கை, தவறிய பாதை, தடுமாறிய வார்த்தையில் உள்ளம் குமுறியது - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. நினைக்கக் கூடாதவற்றை நினைத்து, செய்யக் கூடாதவற்றைச் செய்து, இழக்கக் கூடாததை இழந்து, துணையிழந்து, துயரில் விழுந்தவன் தூக்கி விட ஒரு உள்ளம் தேடிச் சொன்னான் - 'தாகமாயிருக்கிறேன்...' என்று. கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போக எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்கள் ஆகிட நம்பியவை நழுவிவிட, தாகங்கள் தணியாமல் போக, பணிகள் பலனின்றி போக, இன்பங்களே இல்லை என்றாகி துன்பங்கள் துரத்த நீ மட்டும் - 'தாகமாயிருக்கிறேன்...' என்று சொல்லாதே சிலுவையில் உனக்காக உயிர்துறந்து உலகிற்கு விடுதலை கொடுத்த வள்ளலின் மீட்பினால் உன் தாகத்தை தணித்துக் கொள் மானிடா!.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தாழ்வு மனப்பான்மை

**ஜமுனா**

என்னைக் கண்டாலே அவளுக்குப் பிடிக் காது. அத்தானாம் அத்தான்! காரணமில்லாமல் என் மேல் அவருக்கு வெறுப்பு. கண்டாலும் காணாத மாதிரிப் போய்விடுவார். பேசினா லும் வேண்டா வெறுப்பாக உதிரி வசனங் களை உதிர்த்துவிட்டு முகத்தைக் கடுமை யாக வைத்துக் கொள்வார். எனக்குச் சினஞ் சினமாக வரும்.

என்ன செய்வது! கடுமையாக நானும் அவரைப் பேசி விட்டேனானால்... அவர் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டு... பின் அசம்பாவிதமான சம்பவங்கள் ... சே! சே! அப்படி ஒன்றும் கெட்டவர் அல்ல அவர்.

இவருக்கொரு பாடம் படிப்பிக்க வேண் டும்.

நான்தான் வலிய வலியப் போய் இவரிடம் சிறுமைப்படுத்திக் கொள்கிறேனாக்கும் ஓ... ஆமாம். நாமும் இவரைப் போல் அலட்சிய மாயிருந்தால்... மிஞ்சினால்... கொஞ்சாமலா போய் விடுவார்?இத்தனைக்கும்.....

சின்ன வயது முதல் நாங்கள் கூடி விளை யாடினவர்கள்தான். சின்னச் சோறு முதல் புரு ஷன் பெண்டாட்டி விளையாட்டு வரை 'மியூஸிக்கல் செயர்' முதல் 'கௌபோய்' விளை யாட்டு வரை எல்லாம் நாங்கள் எத்தனையோ விளையாட்டுக்களை விளையாடியிருக்கிறோம்! ஊடலும் கூடலும் எத்தனையோ தரம் எத் தனையோ தரம் 'டூ' விட்டாலும் பேசாமல் இருக்க முடிவதில்லை.

ஹூம்! அதெல்லாம் எம் இளம்பராயத்தில்! இடையில் எத்தனையோ வருடங்கள் நானும் அவரும் சந்திக்க வாய்ப்பிருக்கவில்லை என்பது உண்மையே; ஆனாலும் உறவு மறந்து விடுமா? அந்தப் பழைய நாள்களின் இன்ப அனு பவங்கள் நினைவிற்கு வராமலா போகும்? என்னதான் இருந்தாலும் பழமையை முற் றாக மறக்க முடியுமா?

ஒருவேளை,.......

சூழ்நிலையினாலும் தொடர்பின்மையா லும் பழமையைமுற்றாகவே மறக்க முடியுமா?

இந்த ஐப்பசிக்கு எனக்குப் பதினெட்டு வயது தொடங்குகிறது.

அத்தான் சிறு வயதிலேயே கொழும்புக் குப் படிக்கச் சென்றார். நான் பிறந்த மண்ணி லேயே படித்து வந்தேன். இப்போது எஸ்.எஸ். ஸி. பாஸ் பண்ணிவிட்டு நான் படித்த கல்லூரி யிலேயே உபாத்தியாயினியாய் இருக்கிறேன்.

அத்தான் இப்போது டாக்டருக்குப் படிக்கி றார். கொழும்புச் சீவியமாய்ப் போய் விட்டது அவர் வாழ்வு. வருடத்தில் ஒரு முறையாவது யாழ்ப்பாணம் வந்துதான் போவார். ஆனால் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து பின் அவர் யாழ்ப்பாணம் வருவதேயில்லை. மாமாவும் மாமியும் தான் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வருவார்கள்.

நேற்று-

பல நாள்களின் பின்-

யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

அதுவும் மூன்றுமாத விடுதலையானபடி யால் தானாம் இங்கு வந்திருக்கிறார். இல்லா விட்டால் கொழும்புத்துரை இங்கு ஏன் வரப் போகிறார்.

இவரை எண்ணியெண்ணி நான் வாடா விட்டாலும் அவரைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், சரளமாகப் பழக வேண்டும் என்று எனக்கோர் ஆவல், சாம்பல் படர்ந்த தணல் போன்று கனன்று கொண்டிருந்தது உண்மைதான். அதுவும் நேற்று அவர்கள் வீட்டிற்கு, அத்தான் அவை வீட்டிற்கு நானும் அம்மாவும் போய்ப் பார்த்த பின் என் மனம் ஒரு நிலையில் இல்லை.

அவர் தனதறையில் ஏதோ படித்துக் கொண் டிருந்தார். வெளியில் வரவேயில்லை. பின் மாமி தான் அவரைக் கூப்பிட்டு எங்கள் வரு கையைஅவருக்குத் தெரிவித்தார். அதன் பின்... அந்தத்துரை வந்து... எங்களருகே நின்று கொண்டிருந்தார்.

''எப்பிடித் தம்பி சுகமாயிருக்கிறியளோ?'' என்று என் அம்மா அவரிடம் கேட்டார்.

''ஓம். இருக்கிறோம்.''

பேச்சுத் தொடரவில்லை. அதற்கிடையில் அவரைத்தேடி ஒருவன் வந்திருந்தான். அவர் என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார் ஒன்றும் கூறாமலே.

அவருக்கு -

கொழும்பில் எத்தனை எத்தனை சிநேகிதி களோ? வண்ண வண்ண உடை தரித்து சிங் காரமாக அலங்கரித்து 'நாகரிகமாகப் பழகும் பெண்மணிகள் எத்தனை பேரோ?

கேவலம்!

பட்டிக்காட்டுப் பெண் நான் எங்கே? அத்தா னின் மேல்நாட்டு மோகத்துக் கேற்ற விதத்தில் அவரை வளையவரும் அந்த நாரி மணிகள் எங்கே?

சீ! சீ! இப்படியெல்லாம் நான் எண்ணக் கூடாது! பாவம் அப்பா!.. அவர்ஒரு வேதை.... தானும் தன்பாடும் என்று படிப்பில் கவனம் செலுத்துபவரே. படிப்பில் சூரப்புலிதான்! அல்லாவிட்டால் டாக்டராவது சுலபமா என்ன?

ஆனால்... இவர் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே..ஆணவம்... பணத் திமிர்.. வித்துவக் காய்ச்சல்... ஆனால்.. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்களே. என் அழகைக் கூடவா அவரால் இரசிக்க முடிய வில்லை!

மாமாவும் மாமியும் நல்லூரிலும், எங்கள் குடும்பம் கந்தரோடையிலும் இருந்த போதிலும் இரு குடும்பங்களுக் குமிடையில் பரஸ்பர போக்குவரத்தும் நல்லுறவும் இருக் கத்தான் செய்தன.

அம்மாவின் வேண்டுகோள்படி அவர்கள் எல்லோருக்கும் எங்கள் வீட்டில் இன்று விருந்து. அதாவது மாமா, மாமி, அத்தான் மூவருக்கும். எங்கள்வீட்டிலும் மூன்று பேர்தான்!

காலையில் அவர்கள் வந்ததும் நான் தான் போய் வரவேற்றேன். அம்மா குசினியில் வேலை யாயிருந்தாள். அப்பா தோட்டத்தில் கத்தரிச் செடிகளை நட்டுக் கொண்டிருந்தார்.

''வாருங்கோ.. மாமா! வாங்கோ மாமி! என்று அவர்களை வரவேற்று விட்டு,

''அம்மா, அம்மா! அத்தான் அவை வந்தி ருக்கினம்'' என்று கூவிக்கொண்டே நான் உள்ளே ஓடினேன்.

அம்மாவும், அப்பாவும் போய் அவர்களு டன் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் கோப் பியைக் கலந்துகொண்டு போய் முதலில் அத் தானிடம் நீட்டினேன். அவர் எழுந்து நின்று 'டிறே'யிலிருந்து கோப்பையை வாங்கிக் கொண்டு 'தாங்ஸ்' என்றார்.

இதுஎன்னமோடியோ!இப்படியும்மரியாதையா?

நான்அவரைப் பார்த்து முறுவலித்தேன். அதைக் கவனிக்காதது போல்..இல்லை கண் டும் பொருட்படுத்தாது கதிரையிலிருந்து கொண்டார். அவர் என்னை உதாசீனப்படுத் துவதை நான் அறிந்துகொண்டேன் என்பதைப் புரிந்தது போலக் காட்டியது அவர் முகம்.

ஹூம்! இவர் ஏன் என்னை வெறுக்க வேண் டும்? என்மேல் கோபம் கொள்வதற்கு நான் என்ன குற்றம் செய்தேன்? சரி! சரி! இவர் மேல் எனக்கொரு சபலம் ஏன் வரவேண்டும், பார்ப் பதற்கு அவர் ஒன்றும் அப்படி சுந்தரபுருஷ ரல்லவே?

ஆனால்....

ஆஜானுபாகுவான தோற்றம், கம்பீரமான பார்வை, பரந்த நெற்றி, நீண்ட நாடி, சதுர முகம், மிடுக்கான நடை, அலட்சிய மனப்பான்மை, சுருக்கமான பேச்சு, அடேயப்பா, இப்படிப் பேசாமடந்தையாக இருக்க அத்தான் எங்கு கற்றுக் கொண்டார்? இந்தக் குறுகிய இடைக் காலத்தில் இவ்வளவு மாற்றமா?

ஆனால்... அத்தான்என்னை அலட்சியம் செய்ய நியாயமேயில்லை. இவருக்கு என்னி டம் கூச்சமா? அல்லது என்னை வெறுக் கிறாரா? பெரியவர்கள் மனம் விட்டுப் பத்தும் பலதும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இவரும் கூடவே இருந்தார். அவர்களு டன் மெழுகுப் பொம்மை போல உறவுக்காரர் வீட்டில் பிறத்தியார் போல் பழகும் இவரை என்னவென்பது? வெறும் ஆணவக்காரர்! உள்ளே வந்து என்னிடம் பேசினால் என்னவாம்?

கேவலம்...

வருங்கால டொக்டர் வெறும் எஸ். எஸ். சி.பெண்ணை விரும்புவாரா என்ன? ஆனால், அதற்கு ஈடுகொடுக்கத்தான் அழகும் பண மும் இருக்கின்றனவே?

ஒரு வேளை நான் ஆங்கிலம் பேசமாட் டேன், நாலுபேருடன் பழக மாட்டேன் என்று நினைக்கிறாரோ?

என் உள்ளக்கிடக்கையைக் கண்களினால் எத்தனைமுறை தெரிவிக்க முயன்றிருக்கிறேன். கண்ணோடு கண் நோக்கினால் தானே!

தமிழ்ப் பண்பாட்டுடன் நாலு பேரோடு பழக எனக்குத் தெரியாதா என்ன? தொல் காப்பியருடைய பெண்ணின் இலக்கணத தில் அத்தானுக்கு நம்பிக்கையில்லையோ? அவர் தமிழன் என்பதை மறந்து விட்டாரோ?

புதிர்தான்!..

இவர் ஏன் என்னை வெறுக்க வேண்டும்?

போயும் போயும் இவர் மேல் ஏன் தான் நாட்டம் கொள்ள வேண்டும்? வெறுப்பின் எல்லை தான் அன்பின் உதயமோ? நான் அவரை வெறுக்க வெறுக்க,அவர் என்னை வெறுக்க வெறுக்க, வற்றாத ஜீவநதிபோல் அன்பு பரிணமித்தூற்றெடுக்கிறது.

ஏன் இது? அவரிடம் எனக்கொரு கவர்ச்சி! பழையஅனுபவங்களின் பசுமை நினைவோ?

ஹூம்! நான் என்றொரு பொருளிருப்பதாக அவர் காட்டிக் கொள்ளவில்லையே. இது எத்தகைய கொடுஞ் செயல்?

எனக்கு அவர்கள் முன்னிலையில் போயி ருந்து பேச வெட்கமாய் இருந்தது. என் அறைக் குள்ளேயே இருந்து விட்டேன்.

**கணேஷ்**

நேரம் கழிந்தது......!

எவ்வளவு நேரந்தான் அறைக்குள் அடைந்து கிடப்பாள் ஜமுனா! வெளியே வந்தாள்.

தென்றலில் அசைந்தாடும் பைங்கொடி போல் மெல்ல மெல்ல நடந்து வந்தாள்.

ஆஹா! அவள் அங்க அசைவுகளில் எத் துணை மென்மை; எத்துணை நளினம்; தோற்றத்திற்கேற்ற உயரம்; பிறை நுதலில் செந்தூரப் பொட்டு; வாரியிழுத்த கேசம், காதோரங்களில் சுருண்டு சுருண்டு கொண் டிருந்தது.

இரட்டைப்பின்னல்; 'றிபன்' முடிச்சு; சிறிய கண்கள்; செந்தாழை உதடுகள்; செக்கச் சிவந்தமுகம். புன்னமை மலரும் அந்த வத னத்தில் ஒரு சாந்தி, தெய்வீக ஒளி.மெல்லிய பூங்கரம். காந்தள் விரல்கள் கைத்தறி உடை.

அவள் என் மைத்துனி!

எனக்கு மணப்பெண்ணாகவும் மாறலாம்! தடைகள் எதுவும் இல்லை.

ஜமுனாவுடன் தனிமையில்பேச எனக்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. ஆனால் அவற்றை நான் தவிர்த்து விட்டேன்.

''ஜமுனா! இஞ்சவாம்மா, இப்படியிரு'' என்று என் பக்கத்தில் உள்ள நாற்காலியை காட்டி அழைத்தார் என் தாயார் .அவள் கூனிக் குறுகி, நெளிந்து வளைந்து, கொண்டு நாற்காலியில் அமர்ந்தாள்.

என்னையறியாமலேயேஅவளை உற் றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பப்பா! கண்ணைக் கூச வைக்கும் அழகு. ஒருமுறை

(10 ஆம் பக்கம் பார்க்க)



ஈழத்தின் மூத்த தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் கே.எஸ். சிவகுமாரனும் குறிப்பிடக்கக்கவர். ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்து இவர் எழுதத் தொடங்கினார். இலக்கியப் படைப்பு களோடு திறனாய்வுத் துறையில் அவர் பிரபல்யமானவர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதும் ஆற்றல் கொண்ட இவர், சிறுகதை, கவிதை ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளிலும் நிறை யவே பங்களிப்புச் செய்திருந்தாலும் திறனாய்வுத் துறையிலேயே இவர் சிறப்பு முத்திரை பதித்திருக்கிறார். பல பிறமொழிச் சிறு கதைகளையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

சிறந்த ஒளிபரப்பாளராகவும் விளங்கிய அவர், அத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும், ஊடகங்களில் பத்தி எழுதாளராகவும், கட்டுப்பாடற்ற பத்திரிகை யாளராகவும் எழுதிவருகிறார்.

இவர் இதுவரையில் 17 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில் பெரும் பாலானவை திறனாய்வு தொடர்பானவையாகும். சிவகுமாரன் சிறுகதைகள், 'இருமை' சிறுகதைத் தொகுப்பு என்பனவும் அவற்றில் அடங்கும்.

72 வயதான கே.எஸ்.சிவகுமாரன் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண் டவர். பட்டதாரி.

# தாரமாய்த் தாயானாள் கை என்று எழுதிய புலவருக்கு கையிருக்க கண்ணுக்கும் வேண்டும் கவி என்றார் பண்டிதமணி!

தமிழ் மலைப் பண்டிதமணி கணபதிப் பிள்ளையைத் தமிழ் உலகு நன்கறியும். தமிழகத்திலிருந்து அக்காலத்தில் இலங்கை வந்திருந்த கல்கி கிருஸ்ணமூர்த்தி திரு வி.க.ரா.பி.சேதுப்பிள்ளை போன்றோர் வியக்



பண்டிதமணி

குமாறுதமது சொற் பொழிவு ஆற்ற லைக் காட்டிய வர் அவர். அவரு டைய கட்டுரை கள் இலங்கைச் சஞ்சிகைகளிலும் தமிழகத்துக்கலை மகளிலும் சிறப் பாக இடம் பெற் றன.இவைஅனைத் தும் தமிழ் உலகு நன்கறிந்தவையே.

பண்டிதமணி அவர்களின் கவிதைத் திறன் வெகு சிலருக்கே தெரியும். அவர் தமது வாழ்நாளில் எத்தனையோ வெண்பாக் களை இயற்றியிருக்கின்றார். தேடித் தொகுத்தால் 'பண்டிதமணி கவிதைகள்' என்று ஒரு நூலே வெளியிடலாம்.

பண்டிதமணி வாழ்ந்த காலத்தில் யாழ்ப் பாணம் கரையூரில் டாக்டர் சுப்பிரமணி யம் என்ற தருமவான் சொந்த வைத்திய சாலை வைத்திருந்தார். அவர் தொழிலால் பணம் சேர்த்த அதே நேரத்தில் புண்ணி யத்தையும் சேர்த்துக் கொண்டார். ஏழை களுக்கு இலவசமாக வைத்தியம் செய்தார். எத்தனையோ பாடசாலைகளின் அபிவிருத் திக்கு நிதி வழங்கினார். அவருடைய பணி யைப் பாராட்டி எடுத்த விழாவுக்குப் பண்டி தர் மணி ஒரு வெண்பா எழுதினர். இதோ அந்த வெண்பா:

''மனிதருள்ளும் தெய்வம் மனித உருத் தாங்கி,
இனி தமர்தல் உண்டேயா மெங்கள் - கனியமிர்தம்,
டாக்டர் சுப்பிரமணியம் இவ்வுலகத் தெய்வம் காண்
மாப் பெரியர் இந்த மகான்!''

## இலக்கியப் பொழில்

டாக்டர் சுப்பிரமணியம் மனிதருக்குள் தெய்வமாக இருந்து மனிதரின் பிணி நீக்கி அரும் பணி ஆற்றினார். அவர் மனித உரு வில் வாழ்ந்தாலும் இவ்வுலகத் தெய்வம், அவர் மாப்பெரும் மகான்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பண் டிதமணியிடம் பெரு மதிப்புக் கொண் டவர். சிறுவர் செந் தமிழ் என்ற தமது நூலுக்குப் பண்டித மணியிடம் அணிந் துரை பெற்றவர்.



சோமசுந்தரப் புலவர்

சோமசுந்தரப் புல வர் ஒருமுறை நோயி னாற் பெரும் கஷ் டப்பட்டார். பல நாள் களாக நோய் நீங் காமையால் பாயும் படுக்கையுமாகத் துன்பப்பட்டார். அந்தத் துன்பத்தில் அவருடைய துணைவியார் நேரத்துக்கு மருந்து கொடுப்பது முதல் அனைத்துப் பணிகளையும் சிறப்புற ஆற் றினார்.

துணைவியாரின் பணிகளில் மகிழ்ந்த புலவர், தாரமாய்த் தாயானாள் கை என்று பணி விடை செய்த கைக்குப் பாட்டெழு தினார்.

அந்தப் பாடலைப் பார்த்த பண்டித மணி சோமசுந்தரப் புலவருக்கு ஒரு வெண்பா எழுதி அனுப்பினார்.

பணிசெய்த கையைப் பாராட்டி இருக் கிறீர்கள். நீங்கள் நோயாய்க் கிடந்த காலத் தில் இரவு, பகல் உறக்கத்தைத் துறந்து நித்திரை இன்றிப் பணி செய்ய உதவிய கண்ணுக் கல்லவோ கவி எழுதவேண் டும் எனக் கூறி ஒரு வெண்பா எழுதியி ருந்தார்.

''பின் தூங்கி முன்னெழும் பெற்றி உரைத்தார் தேவர்
உன் தாரத்துக் குறக்கமுண்டு கோலோ - குன்றாமே,
தண்ணேன் தமிழ்ப் புலவோய் தாயானாள் கையிருக்கக்
கண்ணுக்கும் வேண்டும் கவி.''

இந்த இரண்டு வெண்பாக்களைப் போன்று எத்தனையோ சிறந்த வெண்பாக்களைப் பண்டித மணி பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடி யிருக்கிறார். தேடித்தொகுத் தால் அவை 'பண்டித மணி கவிதைகள்' என ஒரு நூலாக அமையும். ✱



**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் இருந்து இங்கு இடம்பெயர்ந்து வருகின்ற பறவைகளால் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் உண்டு

அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சலின் பரவுகையினாலும் (out breaks) கண்டம் தாண்டும் பறவைகள் இளைப்பாறிச் செல்வதாலும் இலங்கையும் பறவைக் காய்ச்சலுக்கான அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது. எனவே "வருமுன் காப்போம்" என்ற விழிப்புணர்விற்காக.......

03 உலகை வலம் வரும் பறவைக்காய்சல் இங்கும் வருமா?

### நோய்க்கான அபாயக் காரணிகள்

தொற்றுக்குள்ளான பறவைகள் மற்றும் தொற றுக்குள்ளான பறவைகளின் இறகுகள், உமிழ் நீர், எச்சங்கள் என்பவற்றுடன் ஏற்படுத்தப்படும் தொடுகை பறவைக்காய்ச்சலுக்கான ஆபத் தான காரணியாக உள்ளது.

சிறுவர்கள் விளையாடும் பொழுது தொற் றுக்குள்ளான பறவைகளுடனும் அவற்றின் எச சங்களினால் அசுத்தமாக்கப்பட்ட தரைகளுட னும் தொடுகையுறுவதால் நோயினால் இலகு வில் பாதிப்படையக்கூடியவர்களாக உள்ளனர்.

### பறவைக் காய்ச்சலுக்கான அறிகுறிகளும் அடையாளங்களும்

பறவைக் காய்ச்சலுக்கான திட்டவட்டமான நோயரும்புகாலம் அறியப்படாதபோதிலும், நோயானது தொற்றுக்குள்ளாக்கப்பட்டு 1-5 நாள்களில் வெளிக்காட்டப்படுகின்றது.




பறவைக்காய்ச்சலுக்கான அறிகுறிகளும் அடையாளங்களும் வழமையான புளுவை (flu) ஒத்ததாகவே காணப்படுகின்றது. இரு மல், காய்ச்சல், தொண்டை நோ, தசைகளில் வலி போன்றன அதற்கான பொதுவான அறி குறிகளாக அமைகின்றன.

சிறியளவிலான கண்நோய்த்தொற்றுகூட சிலவேளைகளில் பறவைக்காய்ச்சலுக்கான ஒரு அறிகுறியாக அமைகின்றது.

பறவைக்காய்ச்சல் தொற்றுக்குள்ளாக்கப் பட்ட நோயாளிகள் உயிருக்கு பங்கம் விளைவிக் கக கூடிய சிக்கலான நிலைமைகளான வைரஸ் நியுமோனியா காய்ச்சல், தீவிரமான சுவாசத் தொகுதி நோய் போன்றவற்றையும் அறிகுறிகளாக கொண்டிருக்கின்றனர்.

### பறவைக்காய்ச்சலின் சிக்கலான நிலைமைகள்

பறவைக்காய்ச்சல் நோய்த் தொற்றுக்குள் ளாக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வழமையான புளுவுக்குரிய (flu) அறிகுறிகளை யும் அடையாளங்களையுமே கொண்டிருக்கின் றனர். இவர்களில் சிலரே உயிருக்கு ஊறு விளைவிக்கக்கூடிய சிக்கலான நிலைமைகளான வைரஸ் நியுமோனியா, தீவிர சுவாசப்பைநோய் என்பவற்றால் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக சவாசப்பைகளிலுள்ள காற்றுப்பை கள் திரவங்களால் நிரப்பப்பட்டு தீவிரமான சுவாசக் கஸ்டங்கள் ஏற்படுகின்றது. தொற்றுக் குள்ளானவர்களில் அரைவாசிக்கும் மேலா னோரில் மரணம்கூட சம்பவித்துள்ளது.

### பறவைக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்துகளும் சிகிச்சைகளும்

H5NI வகை இன்புளுவென்சா வைரசிற்கு எதிரான தடுப்பு மருந்து தயாரிப்பு முயற்சி களில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ள போதிலும் இதனைப் பூரணப்படுத்துவதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுவதனால் ஒரு திடீர் தொற்று ஏற்பட்டால் அதன் பரவு கையை தடுப்பது உடனடியாக முடியாத ஒன்று ஆகும்.

பறவைக் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிப் பதற்கு Oseltamivir (tamiflu) என்னும் மருந்து பயன்படுத்தப்படுகின்றது. தீவிர பரவுகை அடைந்த ஒரு சூழலில் தொற்று அடைவதற்கான சாத்தி யததைக் குறைப்பதற்கும் tamiflu மருந்து பயன் படுத்தப்படுகின்றது. ஆனால் ஒரு புதுவகையான இன்புளுவென்சா வைரசினால் நோய் ஏற்படுத் தப்படும்போது Tamiflu அதற்கு சிறப்பான சிகிச்சை மற்றும் தடுப்பு முறையாகக் காணப்படுமா என் பது பற்றி தெளிவாகக் கூறமுடியாது.

இன்புளுவென்சா "ஏ"(A) பி' (B) தவிர்ந்த வேறுவகையான வைரசினால் இதுபோன்ற நோய்கள் ஏற்படும்போது tamilflu பாவிப்பதால் எவ்வகையான அநுகூலமும் இல்லை.

இருதய, நுரையீரல் நோய் உள்ளவர்களி லும், சிறுநீரகம் செயலிழந்தவர்களிலும் வேறு பாரதூரமான நோய்களினால் பீடிக்கப்பட்டவர் களிலும் tamiflu பயன்படுத்துவது பாதுகாப்பா னதா அல்லது வினைத்திறனுடையதா என்பது நிரூபிக்கப்படவில்லை.

### இலங்கையில் பறவைக் காய்ச்சல் ஏற்படுவதற்கு ஏதுவாக அமையம் காரணிகள்

இதுவரை பறவைக் காய்ச்சல் ஏற்பட்டதற் கான எந்த ஒரு தரவும் இலங்கையில் பதிவு செய்யப்படவில்லை. இலங்கை ஒரு தீவாக இருந்த போதிலும் பின்வரும் காரணிகளால் எமது நாடும் பறவைக்காய்ச்சல் நோயினால் பாதிப்படையக் கூடிய சாத்தியக்கூற்றைக் கொணடுள்ளது.

- இடம்பெயரும் பறவைகள் மூலம் (Migratory birds)

பெரும் எண்ணிக்கையான இடம்பெயரும் பறவைகள் வருடம்தோறும் புரட்டாதி தொடக் கம் கார்த்திகை வரையான காலப்பகுதிகளில் மன்னார், குமண, வில்பத்து போன்ற பிரதேசங் களுக்கு வருகை தருகின்றன. பறவைக் காய்ச சல் ஏற்பட்ட நாட்டிலிருந்தோ, அல்லது பறவைக காய்ச்சல் ஏற்பட்ட நாடுகளின் வழியாக பறந்து வரும் ஒரு பறவை அந்நாட்டிலுள்ள நோய்க் கிருமியை எமது நாட்டிலுள்ள நீர் நிலை களிலும் நீர்நிலைகளிற்கு அருகாமையிலுள்ள பண்ணைகளிலும் பரவலடைய செய்கின்றன.

- உயிருள்ள கோழிகள் மற்றும் உற்பத் திப் பொருள்களின் இறக்குமதி மூலம்

அதிகூடிய நோய் ஏற்படுத்தக்கூடிய ஏவி யன் இன்புளுவென்சா(Highly Pathognic Avian Influenza) வைரசின் தொற்று ஏற்பட்டுள்ள நாடு களில் இருந்து சட்டரீதியாக அனுமதிக்கப் பட்ட கோழிகள் மற்றும் உற்பத்தி பொருள் களின் இறக்குமதி மூலம் இவ் வைரஸ் ஆனது எமது நாட்டினுள் பரவலடைவதற்கான சாத் தியக்கூறு உள்ளது. தொற்றடைந்த முட்டை களில் இருந்து வெளிவரும் குஞ்சுகள் கூட இந்நோய்க்கான மூலமாக இருக்கின்றன.

- செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படும் பறவைகளின் இறக்குமதி மூலம்

இவ்வாறான பறவைகளில் அதிகூடிய நோய் ஏற்படுத்தக்கூடிய ஏவியன் இன்புளு வென்சாவின் நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பினும் அவை நோய்க்குரிய எந்தவகையான அறிகுறிகளையும் வெளிக்காட்டாமல் காணப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவற்றில் இருந்து எமது நாட்டிற்கு நோய் பரவக்கூடிய அபாயம் உள்ளது.

- ஆகாரத்திற்காக வளர்க்கப்படும் பறவை கள், அவற்றின் இறைச்சி மற்றும் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் பறவைகளின் சட்ட விரோதமான கடத்துகை மூலம் சட்டவிரோதமான முறையில் பறவைக காய்ச்சல் தொற்று ஏற்பட் டுள்ள நாடுகளில் இருந்து உள்நாட்டிற்கு பறவை கள் கடத்தப் படுகின்றமையானது பாரியளவு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு காரணி யாக அமைகின்றது.

- சர்வதேச பிரயாணிகள் மற்றும் அவர் களின் பாவனைப் பொருட்கள் மூலம் அதிகூடிய நோய் ஏற்படுத்தக்கூடிய ஏவியன் இன் புளுவென்சா (HPAI) தொற்று ஏற்பட்ட நாடு களிற்கு செல்லும் பிரயாணிகளின் உடைகள் மற்றும் காலணிகள் இவ்வகை வைரசினைக் கொண்டுள்ள பறவைகளின் எச்சங்களினால் தொற்றுக்குள்ளாக்கப்படுகின்றன. இவ்வாறான பிரயாணிகள் தமது தற்சுகாதாரத்தில் கவனம் எடுக்காதவிடத்தில் மாத்திரமே அவர்கள் எமது நாட்டிற்கு மீண்டும் திரும்பும்பொழுது நோயினை பரப்பக்கூடிய சாத்தியக்கூறினைக் கொண் டிருப்பார்கள்.

ஞானகலா ஞானகுரு
4 ஆம் வருடம்,
சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்.

எனவே இவ்வாறான காரணிகளில் இருந்து எமது நாட்டை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசாங்கம் சில முற்காப்பு நடவடிக்கைகளை ஏலவே மேற்கொண்டுள்ளது. இலங்கையில் நோய்த்தொற்று இல்லாத நாடுகளில் இருந்தே கோழிகள் மற்றும் வளர்ப்பு பறவைகள், அவற்றின உற்பத்தி பொருட்களின் இறக்கு மதிக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ள போதிலும் தற்போது தற காப்பு முறைகள் மேற்கொள் ளப்படுவதோடு கோழிகள் மற்றும் இறைச்சி, முட்டை என்பவற் றின் இறக்குமதி தொடர்பாக தற்காலிகமான கட டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது. (தொடரும்...)

# தாழ்வு மனப்பான்மை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பார்த்தாலே போதும்....

மனதில் பதிந்துவிடும் வடிவம்.பல முறை பார்க்கத் தூண்டும் சௌந்தரியம். எழுத்தில் வருணிக்க முடியாத ஓர் உணர்ச்சிப் பிழம்பு அவள்.

அவளும் என்னைப் பார்க்கிறாள். நான்கு கண்களின் சந்திப்பினால் சிறிது கலக்கம். பின்னர் தெளிவு. குமுதவாயில் குமிண் சிரிப்பு மொட்டவிழ்ந்தது.

நான் சடுதியாகத் தலையைத் திருப்பிக் கொள்கிறேன். அவள் வெட்கிக் கூனி ஏமாற்றத்தோடு தலை குனிகிறாள்.

''இப்ப என்ன விடுதலையா ஜமுனா'' என்று என் அம்மா அவளிடம் கேட்டாள்.

''ஓம் மாமி!'' என்று கூறிவிட்டு என்னைப் பார்த்தாள் அவ் விளங்காரிகை. நான் அவளுக்கு அப்பால் இருந்த அவள் அம்மாவைப் பார்த்தேன்.

விருட்டென்று எழுந்து ஓடினாள் ஜமுனா. அவளுக்கு கோபம் வருவது நியாயந்தானே!

''எங்கே மோனே போகிறாய்?''

''வாறன் மாமி, ஒரு வேலையிருக்குது.''

அம்மாவும் மாமியும் குசினிக்குள் சென்ற னர். அப்பாவும் மாமாவும் உரையாடுவதற் கென வெளித் திண்ணைக்குப் போனார்கள். நான் பக்கத்திலிருந்த பத்திரிகையை எடுத்து ஊன்றிப் படிக்கத் தொடங்கினேன்.

''உஸ்!''

நான் தலை நிமிரவில்லை.

''உஸ்! உஸ்!

''....!'''

''உஸ்.... அத்தான்!''

தலையை உயர்த்திச் சத்தம் வந்த திசையை நோக்கினேன். என் கண்கள் மலர்ந்தன. அங்கு அவள் விண்ணகத்துத் தேவதை போல் நின்று கண் ஜாடை காட்டினாள்.

நான் புன்னகை பூத்தேன்.... மனம் கனிய முறுவல் விரிந்தது... சிரித்தேன்... ஆம்... என்னையறியாமலேயே அவளைப் பார்த்துத் துணிந்து சிரித்து விட்டேன்.

வலிய வந்த சீதேவியை உதறித் தள்ள லாமா? ஆனால்.... ஆனால்..... வேண்டாம். சபல புத்திக்கு இடம் கொடுத்தால்...பெண் பாவம் பொல்லாதது... சே! பாதகமில்லை.

அவள் முறுவலித்தாள். மோகனப் புன் னகை அவள் முகமெங்கும் வியாபித்தது. குறும்புப் பார்வையா அது... கேலிப் பொரு ளைப் பார்த்து அவள் உள்ளம் புளகாங்கித மடைகிறதா...? ஆவலலைகளைத் தேக்கி.. நின்று உணர்ச்சி வெள்ளமாகப் பீறிட்டடிக் கக் காத்திருக்கும் நோக்கா அது. ஐயையோ இது என்ன பார்வை? ''சந்திரலேகா'' என்று படத்தில் நடித்த நடிகை பார்த்த விழிச்சுடர் போலல்லவா இந்தப் பார்வையிருக்கிறது. அப்பப்பா! என்னால் இந்தப் பார்வையை எதிர் கொண்டு பார்க்க முடியவில்லையே....என் சிரம் தாழ்ந்தது.

மின்னலிடைப் பெண் அவள்... பின்னல் சடை மருங்கசைய... அன்ன நடை பயின்று என்னருகே வந்தனள்.

ஐயையோ!.... எனக்கு வெகு அண் மையில் அல்லவா வந்து விட்டாள். ஓர் இனிய வாசனை; அவள் சேலைத் தலைப்பு என் முகத்தில் பட்டும் படாமலும் அல்லவா காற றுக்குப் படபடத்துக் கொண்டிருக்கிறது?.... கூடவே என் நெஞ்சம் படபடக்கத் தொடங்கு கிறது.. உமிழ் நீரை விழுங்கினாலும் அது முடியவில்லையே... இது என்ன சோதனை!

''அத்தான்!'' -''சூ அந்தச் சொல்லின் உச் சரிப்புக்கு இவ்வளவு இனிமையுண்டா?''

''ஊம்!''

''கதைப் புத்தகம் இருந்தால் தாருங் கோவன். நாவல் அல்லாட்டிக்குச்சிறுகதைகள். இங்கிலிஷ் புக்ஸ் என்றாலும் பரவாயில்லை.....'''

''என்னிட்ட இப்ப ஒன்றும்இல்லை... உங் களுக்கு எந்த ஆசிரியருடையது பிடிக்கும் என்றால் எங்கேனும் தேடிக்கொண்டு வந்து தருகிறேன்.''

''குறிப்பிட்ட ஆசிரியர் என்றில்லை. ஆனால் எஸ்.ஏ.பி, சாண்டில்யன், சிரஞ்சீவி.''

''சரி!''

''என்ன'சரி'யாம்? என்று கிண்கிணி நாதத்தை உதிர்த்து விட்டாள். அந்தநாதத்தின் எதிரொ லியே என்னைச் சொக்குப் பொடி போட்டாற் போன்றுகிறங்க....

நான் விழித்தேன். செட்டியில் அமர்ந்து கொண்டாள். அவள் என் கூடத் தனிமை யாக... ஓர் அங்குலம் இடை வெளியில்... இருப்பது எனக்கு முள்ளின் மேல் இருப்பது போலிருந்தது...

என்னை ஊடுருவிப் பார்த்து.... ''ஐயோ... இது என்ன....

மனோவசியப் பார்வை...''' அர்த்த மில் லாமற் சிரித்தாள்.

நானும் வெகுளித்தனமாகச் சிரித்தேன். பத்திரிகையைச் சலசலத்தேன். அங்குமிங் கும் பார்த்தேன்....மிரள மிரள விழித்தேன்.. அவள் இன்னும் பார்த்துக் கொண்டு முறு வலித்தாள்.

அதில் ஒரு சோக...அல்ல அல்ல... ஒரு வேளை இது காதலர் பரிபாஷையோ? எல் லாம் புது அனுபவந்தான். ஏதாவது கதைக்க வேண்டும்போல் தோன்றியது.

இது ஏன்? கூச்சத்தினாலா, வெட்கத்தி னாலா? இல்லை இல்லை. பயத்தினால்.... பயத்தினால் கொழும்பில் என் சக மாணவி களுடன் விஞ்ஞானக் கூட்டங்களில் பக் கத்தில் இருக்கும் பொழுது வராத பயம் இப் பொழுதும் ஏன் வரவேண்டும்?

**ஜமுனா**

பாவம்! அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது! எதையோபறிகொடுத்தவர் மாதிரி என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். நிலைமையைச் சமாளிக்க என்னாலும் முடியவில்லை. அவராலும்முடியவில்லை..

நான் போய் ''செஸ்'' போர்ட்டை எடுத்து வந்தேன்.

''வருகிறீர்களா?ஓர்ஆட்டம்ஆடலாம்.''

''செஸ்''என்றால் அவருக்குஉயிர் என்பது தெரியாதா என்ன?

காய்களைஅகற்றிஅகற்றிவிளையாடினோம். ஒரு கண வேளை!

ஸ்பரிசம்! இருவர் விரல்களும் சிக்கித் தவித்தன. நான்சிரித்தேன்.அவர் சிரித்தார். என் விரல்களை விடவேயில்லை. அவர் உணர்ச்சி வசப்பட்டார். அம்மா ''ஹோலுக் குள்'' வந்தாள். திகில், ஆச்சரியம், மகிழ்ச்சி ஒரே நேரத்தில் அவள் முகத்தில்! அத்தான் முகம் நவரசங்களையும் பிரதிபலித்துக் காட்டியது.

''அத்தான்''

''ஊம்''

''உங்களுக்கு என் மேல் கோபம்?''

''அப்படி யொன்றுமில்லையே!''

''நீங்கள் முன் போல் என்னிடம் சரள மாய்ப்பேசுவதில்லையே''? பழகுவதில்லையே?

''பேசுவதற்கு என்ன இருக்கிறது?''

''பேசுவதற்கா இல்லை? நிறைய நிறை யப் பேசலாமே?'' என்று கூறி ஓரக்கண் ணால் அவரைப் பார்த்தேன். அப் பார்வைக் கோர் அர்த்தமுண்டு என்பது என் நோக்கம்.

''சுந்தரேசன் இப்பொழுது என்ன செய் கிறான்?''

எதிர்பாராத விதமாகச் சுந்தரேசனின் பெயரை அவர் கூறியதும் எனக்குக் கலக்கம்.

''யார் சுந்தரேசன்?''

''தங்களுடைய வருங்கால கணவன் சுந்தரேசன் தான்!''

''அத்தான் நீங்கள் மிகவும் பொல்லாதவர்!''

''உள்ளதைத்தானே சொல்கிறேன்''

''அடடே, உங்களுக்கு குதர்க்கமாய்ப் பேசக்கூட வருகிறதே!''

மௌனம்.

''அது சரி. நீங்கள் ஏன் என்னைப் பன்மை யில் அழைக்கிறீர்கள்''

''மதிப்புக்குரியவர்களை மரியாதையாக அழைக்க வேண்டாமா?''

''ஓஹோ! நான் உங்களுக்கு மதிப்புக்குரிய பொருள் மாத்திரமோ! வேறொன்றுமில்லையா?''

நான் கூறியதன் அர்த்தம் அவருக்குப் புரிந்ததோ என்னவோ? ஒரு வேளை சுந்த ரேசனைத்தான் நான் விரும்புகிறேன் என்று எண்ணுகிறாரோ.

''மதிப்புக்குரியவள் என்கிறீர்களே! நான் உங்களிலும் ஐந்து வயது சிறியவள் என் பதை மறந்து விட்டீர்களா?''

''இப்பொழுது தான் தெரியும்''

''வாருங்கோ! சாப்பிடுவோம். பிள்ளை! அத்தானுக்கு செம்பை எடுத்துக் கொடு'' என்று கூவிக்கொண்டே அம்மா நாங்கள் இருந்த இடத்திற்கு வந்துவிட்டாள்.

அத்தானும் அப்பாவும் மாமாவும் திண்ணை யில் உட்கார்ந்து அரசியல் தொடக்கம் அத்தானின் படிப்புவரை அலசிக்கொண்டிருந்தார்கள்.

அம்மாவும் மாமியும் நானும் உள்ளிருந்து [illegible]கொண்டிருந்தோம். பின், ஆட[illegible] நாங்களும் சேர்ந்து கொண்டோம்.

''ஜமுனாவுக்கு ஒரு கலியாணத்தை முடிச்சு வைக்க வேணும் அண்ணை?'' அம்மா தான் மாமாவிடம் கூறினாள்.

''அதற்கென்ன பிள்ளை இப்ப அவசரம்? பொடிச்சிக்கு என்ன வயசா ஆகிவிட்டது?'' என்று மாமா கூறினார்.

''இல்லை, ஒரு கதைக்குச் சொல்றன். தம்பி கணேசும் படிச்சு முடிக்கத்தானே வேண்டும்?'' என்று கூறி முடித்தாள்.

''எல்லோர் கண்களும் அத்தானை நிலை குத்திப் பார்த்தன. ஆவலுடன் இதழில் நீருற விழிகள் மலர அவரை நோக்கினேன்.''

''நான் ஜமுனாவை ஒரு நாளும் கட்ட மாட்டேன். காரணத்தைக் கேட்காதீங்கோ'' என்று கூறி விட்டு அத்தான் எழுந்து விட்டார். எல்லோ ருக்கும் ஆச்சரியம்!

எனக்கு ஆச்சரியம், ஏமாற்றம், பொறாமை, எரிச்சல், விரக்தி.

அத்தான் எழுந்து போகிறார். மாமாவும் மாமியும் அவரைக் கூப்பிடுகிறார்கள்.

அவர் போய்க் கொண்டேயிருக்கிறார். எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள். என் தலை சுற்றுகிறது. நான் கீழே..... வி....ழு....

**கணேஷ்**

ஜமுனாவின் சாகசங்கள் எனக்குப் புரிந் தன. அவள் என்னை விரும்புகிறாள். உள்ளத் தாலும் நேசிக்கிறாள்.

ஆனால்..... ஆனால்.... அந்தச் சுந்தரேசன்?

ஜமுனாவின் தாயினுடைய தம்பி மகன். அவன் அவளுக்குச் சாலவும் பொருத்த மானவன். அவன் அழகென்ன? அவன் பெருமை என்ன? அவன் வகிக்கும் பதவி என்ன?

கேவலம்! கொம்புத்தேனுக்கு நான் ஆசைப் படுவதா? நான் ஆசைப்பட்டேனா? இல்லையே!

ஆனால்.....

தேன் மலர் வண்டையே நாடி வந்தால்.

என்னைப் பரிகசிக்கிறாளோ?

ஆம்! கள்ளி!

''சுந்தரேசன் தங்களுடைய வருங்காலக் கணவன்'' என்று நான் கூறியதும், ''பொல் லாதவர்'' என்று அவள் எனக்குப் பட்டம் சூட்டியதற்கு என்ன அர்த்தம்?

''போங்கள்!'' ''பொல்லாதவர்'' என்றெல் லாம் பெண்கள் சிணுங்குவது இணக்கத் தைக் காட்டுவதற்கன்றோ?

சரிதான்.....

அவள் அவனை விரும்புகிறாள்.

வைத்தியக் கல்லூரியில் படிக்கும்போது மாணவர் நடத்திய கேலிக் கூத்தில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் சிக்கிய நான் பலத்த எரி காயங்களால் திருமணம் புரிந்து இல் வாழ்க் கையை நடத்த முடியாத நிலையை அடைந்து விட்டேன்.


இதனால் ஜமுனா என்னுடன் சரளமாகப் பழகும் பொழுது நான் தூர விலகி நின்றேன். ஏன்? சபல புத்திக்கிடங் கொடுத்தால் திரும ணத்தில் முடியும். அவள் வாழ்வே பாழாகி விடுமல்லவா?

ஆனால், அவள் சுந்தரேசனை விரும்பு கிறாள். நல்லது தான். என்னைப் பரிகசிக்கச் சரசமா டினாள்.

* (1962).

– நன்றி: 'இருமை' சிறுகதைத் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழின் சின்னமாக வாழ்ந்த ஒரு தமிழாசிரியரின் பவித்திர நினைவுகள்

சம காலத்து கல்வி முறைமையின் பாடசாலை ஆசிரியர் தனக்கிருக்க வேண்டிய புலமையாளுமையைச் சமூகத்தில் நிலை நிறுத்திக் கொள்ள முடியாத அளவுக்குப் புறச்சூழல்கள் தொழிற்படுகின்றன. கல்வியின் வணிகமயப்பாடு அதற்குக் காரணம்.

ஆனால் 1940, 50 களில் ஆசிரியர்களின் நிலை-குறிப்பாக அரசாங்க உதவிப் படசாலைகளிலும் தனியார் பாடசாலைகளிலும் கடமையாற்றிய ஆசிரியர்களின் நிலை-வேறுபட்டதாக இருந்தது. புலமை மதிப்புப் பெற்றுச் சமூக நிறுவனத்துக்காக அவர்கள் தொழிற்பட்டனர்.

அவர்களுள்ளும் தமிழாசிரியர்கள் தனிப்பட்ட ஒரு நிலையினராக விளங்கினர். தமிழாசிரியர்களுக்குரிய வேட்டி, நாஷனல் உடை பெரும் சமூகச் செல்வாக்குப் பண்பாட்டு விடயங்களில் முக்கியத்துவமானவை. இந்த ஆசிரியர் தமிழின் பிரதிநிதியாகவே எண்ணப்பட்டார்.

அதுவும் கொழும்பில் கடமையாற்றிய தமிழாசிரியர்களோ மிக முக்கியமான சமூக நிறுவனங்களாவே திகழ்ந்தனர். முது தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, ஆசிரியமணி கந்தையா ஆகியோர் இத்தகைய சிறப்புகளுடைய தமிழாசிரியர்களாக விளங்கினர். இவர்களின் தமிழறிவை மாணவர்கள் மாத்திரமல்லாது பண்பாட்டுத்துறையில் முக்கியஸ்தர்களாக விளங்கியோரும் வேண்டி நின்றனர். இதனால் இந்தத் தமிழாசிரியர்களின்

## தக்கார் மாண்பு

சமூகச் செல்மதி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

அப்படி இருந்தவர்களில் ஒருவர்தான் கொழும்பு ஸாகிறாக் கல்லூரியில், மத்திய பாடசாலையின் பிரதான தமிழாசிரியராக விளங்கிய திரு.கந்தையா அவர்கள்.

### கந்தையா சேர்

"கந்தையா சேர்" (Sir) என்றால் தான் அந்தத் தோற்றப் பொலிவு நிறைவுறும்.

1949-50 இல் ஸாகிறாவின் பல்கலைக் கழப் புகுமுக வகுப்பில் நான் மாணவனாகச் சேர்ந்த காலம் முதல், அவர் மறைவு வரை அவரை அறிந்திருந்த பெரும்பாக்கியம் எனக்குக் கிட்டிற்று.

தமிழ் விடயங்களில் ஆர்வம் காட்டிய எம்மில் சிலர் - சிவகுருநாதன், எச்.எம்.பி. முஹிதீன், ஷிப்ளிகாசீம், வி.ஏ.கபூர், மூ.மீ.சாகுல் அமீது, குருசாமி, நான் - அவரது கவன வட்டத்தினுள் வந்தோம். எச்.எம்.பி., மூசோ அவரது நேரடி மாண வர்கள். எஸ்.எம்.கமால்தீன், ந.சண்முகரத்தினம் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புக்குத் தமிழ் கற்பித்தபொழுது, கந்தையாசேர் ஜேஎஸ்சி. (Grade 8) எஸ்.எஸ்.சி.(O/L) வகுப்புகளில் தமிழ் கற்பித்தார்.

கந்தையா சேரின் தமிழிலக்கிய, இலக்கண அறிவுமிக ஆழமானது. எந்தச் சிக்கலான இலக்கிய, இலக்கணக் கருதுகோளையும் மிக எளிமையாக விளக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது.

மாணவர்களிடத்துக் கண்டிப்பு நிறைந்த அன்பைச் செலுத்தினார். இதனால் மாணவர்கள் தமது பாடசாலை வாழ்க்கை நிறைவுற்ற பின்னர் அவரைப் பெரிதும் போற்றினர். கண்டிப்பும், கருணையும் நிறைந்த ஆசிரியராக விளங்கினார்.

டி.பி.ஜாயா அவர்கள் காலம் முதல் ஏ.எம்.ஏ.அஸீஸ் கால இறுதிவரை - அதற்கு மேலும் - கந்தையாசேர் படிப்பித்துக் கொண்டிருந்தார். அஸீஸ் அவர்கள் கந்தையா சேர் இடத்தில் பெரு மதிப்பு வைத்திருந்தார்.

கந்தையாசேர் (Sir) இன் வரன்முறையான, ஆழமான தமிழறிவு பலராலும் மெச்சப்பெற்றது. அது அவர் இளைப்பாறிய பின் எழுதி வெளியிட்ட "முதுமை நினை வுகள்" என்ற நூலில் மிகத் துல்லியமாகத் தெரிய வந்தது.

தமிழின் சின்னமாக வாழ்ந்த பெரியார் அவர். அவர் அடியொற்றி வந்த நாங்கள், அந்த உறவுகளை மிகப் பவித்திரமான நினைவுகளாகப் போற்றுகிறோம். மறப்பின் நம்மை நாமே மறுதலித்தவர்களாவோம்.

கொழும்பில் 40, 50, 60 களில் முக்கிய தமிழாசிரியராக விளங்கிய ஒருவருக்கு எங்கள் நெஞ்சு நிறைந்த கடப்பாட்டினை எடுத்துக்கூறுகிறோம்.

தமிழைச் சொல்லிக் கொடுப்பவன் புகழும், தமிழ் போல் நீடு வாழும்.



*ஆசிரியர் பொன்னையா கந்தையாவின் நூறாவது பிறந்ததினம் இம்மாதம் இருபத்து மூன்றாம் திகதியாகும். அதனையொட்டிய இந்த நிலைவலைகள் பிரசுரமாகின்றன.* ✱

**கார்த்திகேசு சிவத்தம்பி (முதுதமிழ்ப் பேராசிரியர்)**

---

# சமூகத்தை நேசித்து சுயநலம் பாராது பிறந்த மண்ணுக்காக உழைத்து மறைந்தவர்

## அமரர் சு.ஜோ.பூராசாவின் நினைவு நாள் - ஏப்ரல் 30 ஆம் திகதி

தான் வாழும் சமூகத்தைச் நேசித்த அச் சமூக சூழலின் தேவையை உணர்ந்து, இனங்கண்டு, அவற்றை உரிய முறையில் அணுகி அவற்றைத் தீர்த்து வைப்பதில் இன்பம் கொள்ளும் உத்தமனாய் எமது மண்ணில் வாழ்ந்து காட்டியவர் அமரர் உயர்திரு. சு.ஜோ.பூராசா அவர்கள். தானுண்டு தன் குடும்பமுண்டு என ஒதுங்கி வாழும் எம் சமூகத்தில் சமூகத்தினை நேசிப்பவர்கள் மிகச்சிலரே. அந்த வகையில் தனது இளமைக்காலம் தொட்டு அமரத்துவம் அடையும்வரை தனது குடும்பத்தின் சுகநலனைப் பாராது தான் பிறந்த மண்ணுக்கு எவ்வெவ்வழிகளில் சேவையாற்ற முடியுமோ அவற்றையெல்லாம் செய்துவிட்டு நிரந்தரமாக அமரர் இளைப்பாறிவிட்டார்.

அமரர் சு.ஜோ.பூராசா அவர்கள் புங்குடுதீவுக் கிராமத்தில் ஏழு சகோதரர்களுடன் பிறந்து, கல்வியில் சிறந்த மாணாக்கனாய்த் திகழ்ந்து 1959 இல் ஆசிரியரானார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆசிரியத்துவத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து தனது கிராமத்தின் கல்வி வளர்ச்சியைக் கருதி 1960 களின் முற்பகுதியில் இடமாற்றலாகி வந்தார். புங்குடுதீவுக் கிராமத்தின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு குறிகட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை உருவாக்குவதில் வெற்றிகண்டார். அத்துடன் இக் கிராமத்தின் கல்வி பின்தங்கிய நிலையில் இருந்ததையுணர்ந்து கொழும்பில் புத்திஜீவிகள், நலன்விரும்பிகளை இணைத்து "கல்விவளர்ச்சிக் கழகம்" என்ற அமைப்பினை ஏற்படுத்தி இக்கிராமத்திலுள்ள பாடசாலைகளின் - குறிப்பாகப் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். அதுமட்டுமல்லாது ஸ்ரீபராசக்தி வித்தியாலயத்தினை சங்கத்தாகேணிக்கு இடமாற்றுவதற்கு கல்வித் திணைக்களத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து வெற்றிகண்டவர்.

1960 களில் இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி மாணவர்தேவை, ஆசிரியர்வளம், பாடசாலைகளின் பௌதீகவளம் என்பவற்றில் அதிக அக்கறை கொண்டு அரச மற்றும் அரச சாராத நிறுவனங்கள், தனிப்பட்டவர்களின் உதவியைப் பெற்றுக்கொடுத்தவர்.

1974 இல் புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினை மேன்மையடையச் செய்யும் முகமாக அதன் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக எவற்றையெல்லாம் சாதிக்க முடியுமோ அவற்றினைச் சாதித்துக் காட்டியவர். குறிப்பாக எரிபொருள் நிரப்பும் நிலையம், மக்கள் கடைகள், மக்கள் வங்கிக்கிளை போன்றவற்றை நிறுவி கூட்டுறவினை மக்கள் மயப்படுத்தியவர். அத்துடன் வேலையற்றிருந்த இளைஞர்களுக்குப் பீடிக் கைத்தொழில் மூலமும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் வேலைவாய்ப்பினை வழங்கியவர்.

1990 களைத் தொடர்ந்து, புங்குடுதீவுக் கிராம மக்களின் ஒட்டுமொத்தமான இடப்பெயர்வின் விளைவாக கிளிநொச்சிக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்த திரு.பூராசா அவர்கள், அங்கு அல்லல் உற்ற மாணவர்களின் நலன்கருதித் தனது சொந்த முயற்சியில் கொழும்பில் பிரபல நன்கொடையாளர்களுடன் தொடர்புகொண்டு மாணவர்களுக்கான உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்று மாணவர் கல்வியினை மேம்படுத்தியவர். 1996 இல் தனது சொந்தக் கிராமத்தில் மீள் குடியேற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்த வேளை தான் செயலாளராகவிருந்த அருள் மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லத்தின் சார்பாக நலன்விரும்பிகள், கொடையாளிகளிடமிருந்து பொருளுதவி பெற்று கிராமத்தில் கல்விகற்ற மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலை உபகரணங்கள், உடுபுடைவைகள் வழங்கிக் கல்வியினை மேம்படையச் செய்தவர்.

அமரர் திரு.பூராசா அவர்கள் சமூகப் பணியினை ஆரம்பித்த காலத்திலிருந்து புங்குடுதீவுக் கிராமத்தின் போக்குவரத்து தொடர்பாகத் தொடர்ச்சியாகப் போராடி வந்தவர். குறிப்பாக 1971 ஆம் ஆண்டு வல்லன், வீராமலை, ஆலடி வழியாகப் புதிய பேரூந்து தடத்தினை ஆரம்பித்து வைப்பதற்குப் பெருமுயற்சி எடுத்து வெற்றி கண்டவர். அவர் மரணிப்பதற்குச் சிலநாள்களுக்கு முன்னர் கிராம மக்கள் மற்றும் பிரதேச சபையின் உதவியினைப் பெற்று வடலித்தோட்ட வீதியினைச் செப்பனிட்டு மக்களின் பாவனைக்காகத் திறந்துவைத்தவர்.

புங்குடுதீவு மக்களின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்துவருவது நன்னீர் வளப் பற்றாக்குறையாகும்.

இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் காண்பதற்காக யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறை மற்றும் விவசாயபீட விவசாய பொறியியல் துறையின் உதவியினைப் பெற்று, இக்கிராமத்தின் நன்னீர்வள இருப்புப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு இறுதி அறிக்கையினைப் பெற்ற தனை படையில் நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென ஆவல் கொண்டிருந்தவேளை அவர் எம்மை விட்டுப் பிரிந்தது வேதனையைத் தருவதாகவுள்ளது.

1970 களிலிருந்து கிராமம் முழுவதும் மின்சாரவசதி காணப்பட்டிருந்தபோதிலும் இடப்பெயர்வின் பின்னர் கடந்த இருபது வருடங்களாகச் செயலிழந்து காணப்பட்டதை உணர்ந்த அமரர் அவர்கள், அரச அதிபர் மற்றும் மின்சாரசபையினரைத்



தொடர்ச்சியாக அணுகி அதில் வெற்றி பெற்று இம் மாதம் 6 ஆம் திகதி கிராமத்திற்கு மின் சாரம்வழங்கநடவடிக்கையைமேற்கொண்டிருந்த போதிலும் ஒரு கிழமைக்கு முன்னர் தாம் அதனைக் காணாது மக்களை அனுபவிக்கச் செய்த உத்தமர்.

## நீத்தார் நயப்புரை

இவைதவிர பாடசாலைகளை மீளவும் திறத்தல், முன்பள்ளிகளின் வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்லல், வேலையற்றிருப்போருக்கு வேலைவாய்ப்பினை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றை முன்னெடுத்து கிராம மக்களின் காவலனாகத் திகழ்ந்தவர்.

சமூக சேவையில் எந்தளவிற்கு ஈடுபாடு கொண்டிருந்தாரோ அந்தளவிற்குச் சமயப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவர். பிறப்பால் கத்தோலிக்கத்தினைச் சார்ந்திருந்தபோதிலும் சகல சமயங்களையும் மதித்து தன்னால் அச் சமயத்தவர்களுக்கு என்ன உதவியினைச் செய்யலாமோ அதனைச் செய்து சாதித்துக் காட்டியவர்.

இவைபோன்ற சமூக, சமயப்பணிகளை மேற்கொண்ட அமரர்.சு.ஜோ.பூராசா அவர்களுக்கு அரசியல் வாதிகளினால் கொடுக்கப்பட்ட துன்பங்களினை ஏற்றுக் கொண்டவர். குறிப்பாக ஒரே மாதத்தில் ஆறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறவேண்டிய சூழ்நிலையையும் அனுபவித்தவர். இருப்பினும் அவற்றையெல்லாம் பெரிதுபடுத்தாது நல்லாசிரியனாய், கடமையுணர்வுடன் கூடிய அதிபராய், சமூகத்தின் துயரினைப் பகிர்ந்துகொள்ளும் காவலனாய், சர்வமதத் தொண்டனாய், சாதித்துவத்திற்கு எதிரியாய், அல்லலுற்றோரை அரவணைப்பவனாய், வாழ்ந்து அமரத்துவமடைந்த உயர்திரு.சு.ஜோ. பூராசா அவர்களின் வெற்றிடம் ஒரு நிரந்தரமான வெற்றிடமாகிவிட்டது என்றே உணர்கின்றோம். சொந்தக்கிராம மக்களை இழந்து, பெருமை இழந்து, பொலிவிழந்து காணப்படும் புங்குடுதீவுக் கிராமத்தின் வளர்ச்சிக்கு அவர் விட்டுச்சென்ற சமூகப்பணியை முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு நாம் செய்யும் காணிக்கையாகும். ✱

**பேராசிரியர் கா.குகபாலன்**
*தலைவர், புவியியற்றுறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்,*
*யாழ்ப்பாணம்.*

---

# கேம்பிறிட்ஜ் பல்கலைகழகத்தில் கணிதத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் குடியேற்ற நாட்டவர்

**இலங்கைத் தமிழரின் சாதனை**

**1916 ஏப்ரல்**

1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் அரச சட்டத்தரணியாகப் பதவி வகித்த (Crownproctor) கதிரவேலுவின் மூத்த மகனான சிற்றம்பலம் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார். கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில்பட்டம் பெற்ற முதல் குடியேற்ற நாட்டைச் சேர்ந்தவர் இவரே. பிற்காலத்தில் இலங்கை அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் ... இங்கே!**

இவர் பட்டம் பெற்றதே ஒரு சிறப்பான விடயம். இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாமலே இவர் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தால் கௌரவிக்கப்பட்டார். இறுதிப் பரீட்சை நடைபெற்ற சமயம் இவர் விபத்தில் சிக்கி வலது தோள்மூட்டு முறிந்து சிகிச்சைபெற்று வந்தார். இதனால் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை. எனினும் ஏனைய பரீட்சைகளிலும், கல்விச் செயற்பாடுகளிலும் இவர் காட்டிய திறமையையும் கேம் பிறிட்ஜ் பல்கலைக்கழ கத்தில் ஆற்றிய உரையையும் கருத்திற்கொண்டு இவருக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் சிறப்பு (honurs) சித்தி வழங்கியது.

**- தாண்டவன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துக்கொண்டே உழையுங்கள்!
உழைத்துக்கொண்டே படியுங்கள்!
சங்கானையில் எமது 1st Batch முடிவடைந்தமையையிட்டும்
யாழ்ப்பாணத்தில் எமது 1st Batch முடிவடைய உள்ளதையிட்டும்



North Lanka IIT
எமது நிறுவனத்தில்
Software Developer ஆக
5 நாட்கள் வேலை
செய்துகொண்டே படிக்கக்
கூடிய பட்டப் படிப்பு!
நீங்கள்
Trinity University இனது
பட்டதாரியாகும் அதே நேரம்
Software Developer ஆகும் வசதியுடன்
New Batch இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன

உலகில் புதிய திருப்பம்!
நிகழ்வில்
இந்தியாவிலுள்ள முன்னணி
Software Company களான
Compcare Software Private Ltd.- Chennai
Eliana Software Technology. -Chennai
ABS Soft Solution. Chennai
இணைந்து வழங்கும்
விண்ணப்ப படிவங்கள் சங்கானையில் உள்ள
நிறுவனத்தில் பெற்று 5-5-2008 ற்கு முன் பதிவு செய்யவும்.
ஒரு குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வு
மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள்
Prof. A. Sanmugadas (Administrative Advisor)

Main Street,
Chankanai.
(+94)060 221 4305
northlankaiit@yahoo.com

New College of Higher Studies
No. 95, Ariyakulam Junction,
Jaffna.
(+94)021 222 8148
(+94)060 221 4305





Mr.B.S.Raja
B. Sc.(Hons.)



Mr.S.Senthuran
B. Sc.(Hons.)



Mr.M.Asokumar
B. Sc.(Hons.)



Miss.K.Abarna
B. Sc.(Hons.)

Graduation Wishes

North Lanka IIT இன்
B.Sc. (Comp. Sc.) 1st Batch இல் பயின்ற
எமது நண்பர்கள்
Trinity University இன்
Degree Certificates ஐ பெற்றதையிட்டு



Mr.B.Gopal
B. Sc.(Hons.)



Mr.S.Selvathasan
B. Sc.(Hons.)



Mrs.K.S.Raja
B. Sc.(Hons.)

நல் வாழ்த்து
நாம் தருவோம் நல்லபடி
காமராஜர் பல்கலைக் கழகத்தின்
Post Graduate Diploma
in Comp. Application
படிக்கவென்று!!!
சக நண்பர்கள்
Computer Unit, North Lanka IIT, Chankanai.



## ST. JOHN'S COLLEGE JAFFNA
### VOCATIONAL TRAINING UNIT
*ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME*

*Course Content:* ***Listening, Speaking, Reading & Writing***

Applications are invited from School Leavers for the above course.

Classes will be conducted on Weekdays-at 2.30 p.m.

Commencement : Monday 5th May 2008

Duration : 3 Months

Application Forms could be obtained from the College Office from Monday 21st April 2008.

Closing Date: Wednesday 30th April 2008

(c/552465) ***PRINCIPAL.***


## 31ஆம் நாள் நீங்கா நினைவில்...

மலர்வு 18 ✱ 05 ✱ 1947



உதிர்வு 28 ✱ 03 ✱ 2008

### அமரர் இராமசாமி சிவசுப்பிரமணியம்

(வெள்ளை விநாயகர் வெதுப்பக உரிமையாளர்)

மாசற்ற அன்புடனும் சிறந்த பண்புடனும்
எமை உயர்த்திவிட்ட தெய்வமே!
உறவுகள் துடிக்க உள்ளங்கள் வெதும்ப
எமையெல்லாம் தவிக்கவிட்டுச் சென்ற
எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

குழுக்கண்டி வீதி,கட்டபிராய்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (73492) **குடும்பத்தினர்.**

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.27

அருட்பணி, டாக்டர் ஏ.ஜே.ஜெபரட்ணத்திற்கான பாராட்டுவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு இல.446, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்.கிறீஸ்தவ ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

நன்றி செலுத்தும் நிகழ்வை ஒன்றியத்தின் தலைவர் அருட்பணி எஸ்.கே.கதிர்காமரும் இறைசெய்தியை தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனப் பேராயர் கலாநிதி டி. எஸ். தியாகராஜாவும் நிகழ்த்துவர். (202)


### விற்பனைக்கு

**சண்டெல் தொலைபேசி இணைப்பு விற்பனைக்குண்டு.**
தொடர்பு: பொ.குமாரசாமி,
தம்பாட்டி, ஊர்காவற்றுறை.
தொ.பே: 4590165 (73522)

### ஒத்துமாறல்

திருகோணமலை கல்வி வலயத்தில் உயர் தரம் கலைப்பாடம் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்து மாற விரும்புகிறார்.
*விளம்பர இல: 3086*
**மே/பா உதயன்.** (73525)

### ஒத்துமாறல்

வவுனியாவிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொ.பே: 0775720937
"கௌரி வாசம்",
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (73526)

### தவறிவிட்டன

உரும்பிராய் கிழக்கு என்ற முகவரியைக் கொண்ட சிவஞானம் கமலாம்பிகை என்பவரது தேசிய அடையாள அட்டை மற்றும் 0903023866 என்ற இலக்கம் கொண்ட விசேட அடையாள அட்டை என்பன கைப்பையுடன் யாழ். பஸ் நிலையத்திற்கும் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடையில் கடந்த 09ஆம் திகதி தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க.சிவஞானம், முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (73529)

### ஒத்துமாறல்

புத்தளம் மாவட்ட பாடசாலை ஒன்றில் கடமை புரியும் ஆசிரியர் ஒருவர் யாழ்.மாவட்ட பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
**இ.இராஜி,**
[illegible]
தொ.பே: 0779184686 (73530)


## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் பத்மநாதன்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பத்மநாதன் அவர்கள் (25.04.2008) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் பாமினி (கனடா), சிவமுகுந்தன், மதியரசி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி (லண்டன்), தெய்வநாயகிஅம்மா, பஞ்சலிங்கம், பழனித்துரை (அமெரிக்கா), பரமநாதன், பஞ்சாட்சரம், நவலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இதயகுமாரின் (கனடா) அன்பு மாமனும் லக்ஷன், விலோஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.04.2008) சனிக்கிழமை சிவபுரி, திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஐங்கரன் அகம்',
யாழ். வீதி,
மானிப்பாய். (73524)

*தகவல்:*
நா.பரமநாதன்
*(சகோதரன்).*

### கந்தையா பரஞ்சோதி

(மருந்துக்கடை மணியம்)

(முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



நல்லூர், ஆடியபாதம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா பரஞ்சோதி அவர்கள் (25.04.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்தம்பி-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் இராசம்மா, காலஞ்சென்ற ஜெயசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகதாஸன் (சிறி முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), குகரூபன் (ஜேர்மனி), குகரூபி (கொழும்பு), குகவரதன் (கனடா), வசந்தரூபன் (முருகன் பாமசி, கல்வியங்காடு), பிறேஜி, அருள்தாஸ் ( முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு) ஆகியோரின் அன்பு தந்தையும் திருமகள், கேமாவதி, ரவிச்சந்திரன், சர்மிளா, தாரணி ஆகியோரின் அன்பு மாமனும் சிறிசுபாங்கன், கபிசானி, சயானி, கபினேகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோயில் வீதி, கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0776359319,
0777110707. (73527)

*தகவல்:*
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகத்தில் 90 வீதம் பழுதடையும் வரை அறிகுறிகள் வெளியே பெரியளவில் தெரியாது

மார்ச் 8 ஆம் திகதி உலக சிறுநீரக தினம். அதனையொட்டி யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு இம்மாதம் 19 ஆம் திகதி பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வை நடத்தியது.

யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணராகப் பணிபுரியும் வைத்திய கலாநிதி ரி. பேரானந்தராசா "சிறுநீரக நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது" என்ற பொருளில் உரை நிகழ்த்தினார்.

அந்த உரையின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

பாகம் 01

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 2 ஆயிரத்து 500 பேர் வரை நாட்பட்ட சிறுநீரக நோயினால் (Chronic Renal Failure)பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் சேர்கிறார்கள். சிறுநீரகம் (Kidney) செயலிழந்தால் அதனை சாதாரண மருந்துகள் மூலம் சீர்செய்ய முடியாது. அதற்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அல்லது குருதி சுத்திகரிப்புச் சிகிச்சை போன்றவற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறு நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்குஒருதடவை குருதியை சுத்திகரிப்பதற்கு சுமார் 6 ஆயிரம் ரூபாவரை செலவாகும். மாதத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது இச் சிகிச்சையை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இச் சிகிச்சையை மேற் கொண்டவருக்கு குருதி நிறப் பொருளின் (Haemoglobin) அளவைப் பேணுவதற்கென செலவு வேறாக இருக்கும். குருதிச் சுத்திகரிப்புச்செய்து கொள்ளும் ஒருவருக்கு வருடாந்தம் 6 லட்சம் ரூபாவரை செலவாகும். அல்லது உறவினர் எவரேனுமுடைய சிறுநீரகத்தை (ஒரே குருதி வகையை உடைய) மாற்றீடு செய்து கொள்ளலாம். இதற்கு சுமார் 12 லட்சம் ரூபா செலவாகும். அதைவிட மாதாந்தம் உள்ளெடுக்க வேண்டிய மருந்துகளுக்கென 25 ஆயிரம் ரூபாவரை செலவாகும். இந்தச் செலவுகளை சாதாரண ஒரு குடிமகன் ஏற்றுக்கொள்வது மிகச்சிரமமே!

இலங்கையில் வருடாந்தம் பாதிக்கப்படும் 2500 பேருக்கும் குருதிச் சுத்திகரிப்பு(Haemo Dialysis) சிகிச்சையை மேற்கொள்வதானால் வருடத்துக்கு 200 கோடி ரூபா (2 பில்லியன் ரூபா) தேவைப்படுகிறது. இச் செலவு வரவு-செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கென ஒதுக்கப்படும் மொத்த நிதியின் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்காகும்.

அதனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் Chronic Diabetes இனை அரச வைத்தியசாலைகளில் குணப்படுத்துவது சிரமமான காரியம்.ஆனால் தனியார் மருத்துவ மனைகளில் இச்சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. எனினும் சிறிது காலத்துக்கு Haemo Dialysis செய்து கொண்டு பின்னர் சிறுநீரக மாற்றுச் சிகிச்சையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் அரச வைத்தியசாலைகளிலும் சிகிச்சையினை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு நாட்பட்ட சிறு நீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தினமும் எடுக்க வேண்டிய மருந்துகள், "டயலிசிஸ்" செய்வதற்கு முன்னரான குருதிப் பரிசோதனை 'டயலிசிஸ்' செய்து கொண்ட பின்னரான சோதனைகள் , போக்குவரத்து ஏற்பாடு, நோயாளிக்கான உதவியாள் என்றவாறு பெரும் செலவுகளும், அசௌகரியங்களும் ஏற்படும். இதனால் நோயாளியின் குடும்பம் நொந்து போய்விடும்.

**உரிய நேரத்தில் சிகிச்சை அவசியம்**

எனவே, சிறுநீரகம் தொடர்பான நோய்களை உரிய நேரத்தில் கண்டறிந்து, சரியான சிகிச் சையை பெற்றுக்கொள்வதன் மூலம் ஏற்பட விருக்கின்ற பெரும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

சிறுநீரக நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வைஏற்படுத்துவதற்கு உலகில் பல அமைப்புகள் செயற்படுகின்றன. இலங்கையிலும் சிறுநீரக மாற்றுக்கு உதவும் கழகம் SriLanka Association of Nephrology and Transplantation (SLANT) போன்ற அமைப்புகள் இயங்குகின்றன.

**சிறுநீரகங்களின் தொழிற்பாடுகள்**

முதலில் சிறுநீரகங்கள் எவ்வாறான செயற்பாடுகளைப் புரிகின்றன என்பதனை நோக்குவோம். இதன்மூலம் சிறுநீரகங்கள் பழுதடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளலாம்.

**சிறுநீரகங்களின் முக்கிய தொழிற்பாடுகள்**

சிறுநீரகங்கள் முக்கியமாக ஆறு தொழில்களைச் செய்கின்றன.

1) நாம் உண்ணும் உணவுகளில் இருந்து உருவாகின்ற யூரியா, கிரியாற்றினின் மற்றும் நைதரசன் கலந்த கழிவுப் பொருள்களை சிறுநீராக வெளியேற்றுதல். சாதாரணமாக ஒருவர் நாள் ஒன்றுக்கு 1.5 லீற்றர் முதல் 2 லீற்றர் வரையான சிறுநீரை கழிக்கிறார்.

2) உடலில் நீரின் அளவையும் மற்றும் பொட்டாசியம், சோடியம், கல்சியம் போன்ற தாதுப் பெருள்களின் (Minerals) அளவையும் சமநிலையில் பேணுதல்.

3) உடலில் கார - அமிலத் - தன்மையை (Acid - Base Balance) பேணுதல். சாதாரணமாக குருதியின் pH - 7.4 ஆகும். இந்த pH இனை பேணுவதில் சிறுநீரகம், சுவாசப்பை மற்றும் உடலில் உள்ள பிற அங்கங்கள் என்பன சம்பந்தப்படுகின்றன. pH - 7.2 இலும் குறைவடைந்தால் உயிராபத்து ஏற்படலாம்.

★ சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதை முதலில் வராமல் தடுப்பதே (Prevention) சிறந்த அணுகுமுறையாகும்.

★ சிறுநீரக நோய்கள் ஏற்படுவதை முன்கூட்டியே கண்டறிதல், இந்நோய்கள் வருவதை தடைப்படுத்தல், என்பன இலங்கையில் பல நிறுவனங்களால் வழிப்படுத்தப்படுகிறது. இந்த நிறுவனங்கள் மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்த உதவும்

Eg: Sri Lanka Association of Nephrology & Transplantation (SLANT)

4) உடலில் குருதி அமுக்கத்தை (Blood Pressure) சீரான அளவில் பேணுதல். இதயம், சுருங்கும் போது குருதிக் குழாய்களில் உள்ள அழுத்தத்தை (Systolic Pressure) 120-140 mm Hgக்குள்ளும் இதயம், தளர்வடையும்போது குருதிக் குழாய்களில் உள்ள அழுத்தத்தை (Diastolic Pressure) இனை 70-90 mm Hg இடை யிலும் பேணுதல்.

இவ்விடயத்தில் சிறுநீரகத்தால் சுரக்கப்படும் ரெனின் (Renin) என்ற சுரப்பு (Hormone) முக்கிய பங்கை வகிக்கின்றது.

5) உடலில் உள்ள கல்சியத்தின் சமநிலையை பேணுவதில் சிறுநீரகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. எமது உடலில் ஒரு கிலோகிராம் கல்சியம் வரை உள்ளது. அதில் 95 வீதமானவை எலும்புகளிலும் மிகுதியானவை குருதியிலும் மற்றும் சில கலங்களிலும் உள்ளது.

எமது உடலில் அகத்துறிஞ்சப்படும் கல்சியம், தொழிற்பாட்டுக்குரிய நிலையை அடையவேண்டும். இதற்குரிய நொதியங்களை(Hydrolase) சிறுநீரகம் சுரக்கின்றது.

6) செங்குருதிக் கலங்களில் (Red Blood Corpuscle) உள்ள ஹீமோ குளோபினின் (Haemoglobin) உருவாக்கத்திற்கு தேவையான எரித்ரோபொயிற்றின் (Erythropoietin) சுரப்பை சிறுநீரகங்கள் சுரக்கின்றன. என்பு மச்சைகளில் உருவாக்கப் படுகின்ற Hbகளே ஒட்சிசனை காவுவதில் பங்காற்றுகின்றன. ஒருவருக்கு Hb இன் அளவு குறைவடைந்தால் அடிக்கடி களைப்பு, சோர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இலங்கையிலே 10-15 வீதமான மக்களுக்கு சிறுநீரகப் பிரச்சினை உள்ளது. சிறுநீரக நோய்களில் உள்ள முக்கிய பிரச்சினை என்னவெனில், சிறுநீரகத்தில் சுமார் 90 வீதம் பழுதடையும்வரை அறிகுறிகள் வெளித்தெரிவதில்லை.

ஆக, சிறுநீரக நோயாளி ஒருவர், வைத்தியசாலைக்கு வரும்போது அது பிந்திய நிலையாக இருக்கும். அந்த நோயாளியை மருந்துகளால்குணப்படுத்துவது கஷ்டமான விடயம்.

எனவே இத்தகைய பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்வது எப்படி என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

## நீரிழிவு நோயாளரே இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்

## ஒழுங்கான சிகிச்சை, பரிசோதனை அவர்களுக்கு அவசியம்

**வாழ்க்கை முறையில் சமநிலை பேணுவது அவசியம் .**

இதற்கு எமது வாழ்க்கை முறையை சமநிலையில் பேணுவது அவசியம். அத்துடன் அறிகுறிகள் வெளிப்படாத போதே ஒழுங்கான - இலகுவான - மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். சலப்பரிசோதனை, குருதிப் பரிசோதனை மற்றும் "ஸ்கானிங்" போன்றவற்றின் மூலம் சிறுநீரகப் பிரச்சினைகளை முன்கூட்டியே அறியலாம். ஆனால் மருத்துவப் பரிசோதனைகளை அனைவருக்கும் மேற்கொள்வது முடியாமல் போகலாம். எனவே எத்தகையோருக்கு இந்தச் சோதனைகளை மேற்கொள்வது முக்கியமானது என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

சிறுநீரகப் பிரச்சினைகளுக்கு உள்ளாவதற்கு அதிகம் சாத்தியமுள்ள குழுவை (High Risk group) இனங்காணுதல் முக்கியமானது. இதனை ஒவ்வொருவரும் தாமே செய்துகொள்ளலாம். உடல் நிலை, பழக்க வழக்கம் மற்றும் குடும்பத்தினரின் நோய்த்தாக்க விவரம் போன்றவற்றை கருத்தில் கொண்டு ஒருவரை அதிக சாத்தியமுள்ள குழுவிற்குள் அடங்குவதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும்.

★ கிட்டத்தட்ட 10% மக்கள் ஏதாவது ஒரு சிறுநீரகநோயுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

★ அநேகமான சந்தர்ப்பங்களில், நோயின் அறிகுறிகள் வெளியே தெரியாமல் உங்கள் சிறுநீரகங்கள் பழுதடைந்து கொண்டிருக்கலாம்.

★ சில வேளைகளில் உமது சிறுநீரகங்கள் 90% செயல் இழக்கும் போதுதான் முதன் முறையாக நீங்கள் நோய்க்குரிய அறிகுறிகளை காண நேரிடலாம்.

★ அப்போது காலம் அதிகம் பிந்தியதாக ஆகிவிடலாம்.


நீரிழிவு (சலரோகம்) உள்ளவர்களுக்கு சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் ஏற்பட வாய்ப்பு உண்டு. அந்த நோய் உள்ளவர்கள் ஒழுங்காக "கிளினிக்" சிகிச்சைக்குச் செல்ல வேண்டும். மருந்துகளை ஒழுங்காக உள்ளெடுக்க வேண்டும். உணவுகளில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். சிறுநீர்ப் பரிசோதனை (குளுக்கோஸ் அளவு, அல்புமின் அளவு), குருதிப் பரிசோதனை (யூரியா அளவு, கிறியாற்றினின் அளவு) மற்றும் குருதி அமுக்கம் என்பவற்றை அடிக்கடி சோதித்துக் கொள்ள வேண்டும்.

சிறுநீரில் அல்புமின்(Albumin) வெளியேறுவதனை சாதாரண பரிசோதனை (Heat Test) மூலம் ஓரளவு அறிந்து கொள்ளலாம். பரிசோதனைக் குழாயில் 3இல் 2 பங்கினை சிறுநீரால் நிரப்பி குழாயில் எஞ்சிய மேற்பகுதியை ஒரு மெழுகுதிரி கொண்டு சூடாக்கி சிறிது நேரத்தின் பின் அவதானிக்கும் போது சிறுநீர் தெளிவாக இருந்தால் புரதம் இல்லை. சிறிது மங் கலாக இருந்தால் சிறிதளவு "அல்புமின்" வெளியேறுகின்றது. முட்டையின் வெள்ளைக்கரு போன்று இருப்பின் புரதம் அதிகளவில் வெளியேறுகின்றது. இந்தப் பரிசோதனையின் மூலம் புரதம் (அல்புமின்) வெளியேற்றத்தை அறிய வேண்டுமாயின் 1 லீற்றர் சிறுநீரில் 300 மில்லிகிராம் வரை 'அல்புமின்' இருந்தால் மட்டுமே சாத்தியம். இந்த அளவை விட குறைவான அளவில் புரதம் வெளியேறுவதை கண்டறிய வேண்டுமாயின் "Micro Albumin Test" செய்யப்பட வேண்டும்.

நீரிழிவு உள்ளவர்கள் 6 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் மேற்படி பரிசோதனையைச் செய்து கொள்வது சிறந்தது. சிறுநீரில் 20 மில்லி கிராமுக்கு மேல் அல்புமின் இருந்தால் எமது சிறு நீரகத்தில் பிரச்சினை உள்ளது; அது புரதத்தை இழக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

சிறுநீரில் அல்புமின் வெளியேற்றபடுகின்ற பிரச்சினைக்கு மருந்துகள் பல உள்ளன. குறிப்பிட்ட மருந்து வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் சிறுநீரகம் பழுதடைவதை பிற்போடலாம். இதற்குரிய ஆலோசனை களை உரிய வைத்தியரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதிகம் சாத்தியம் உள்ள குழுவில் அடுத்து உள்ளடக்கப் படுபவர்கள் உயர் குருதி அமுக்கம் (Hy -per Tension) உடையவர்களே. எந்த வயதினராய் இருந்தாலும் இரத்த அழுத்தம் 140/90இற்கு அதிகமாக இருந்தால் அவர் உயர் குருதி அமுக்கத்தால் பாதிக்கப்பட்டவராகிறார். அவர் தனது உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சி, உயரத்துக்கேற்ற உடல் திணிவு போன்றவற்றில் கவனஞ்செலுத்த வேண்டும்.



வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா

**உடற்திணிவை அறிய இலகுமுறை**

உடற்பருமன் அதிகம் உள்ளவர்களுக்கு சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் நிறைய உண்டு. உயரத்துக்கேற்ற உடல்திணிவு உண்டா என்பதை அறிய பருமட்டான் எளியமுறை ஒன்று உள்ளது. ஒருவர் தனது உயரத்தை சென்றிமீற்றரில் அளந்து கொள்ள வேண்டும். அதிலி ருந்து 100 இனைக் கழித்து வரும் மிகுதியே சம்பந்தப்பட்ட நபருக்குஇருக்க வேண்டிய உடற்திணிவு (கி.கிராம்) ஆகும்.

உதாரணமாக ஒருவரது உயரம் 180 செ.மீ. ஆயின் அவருக்கு இருக்க வேண்டிய உடற்றிணிவு 80 கி.கி. ஆகும்.

(வளரும்)

தொகுப்பு: முகுந்தன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமை மனித உரிமைகளில்....

( 05 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆனால் தம் நாட்டினுள் பாதிக்கப்படும் அல்லது குரூரமாக நடத்தப்படும் மக்கள் கூட்டமொன்றின் சுயநிர்ணய உரித்தைச் சர்வதேசச் சட்டம் ஏற்கின்றது.

**சர்வதேச நாடுகளும் பிரிவினையும்**

அடுத்து சர்வதேச நாடுகளைப் பார்த்தோமானால் அவை எப்பொழுதுமே நடைமுறையில் இருக்கும் ஒரு நாட்டைத் தக்கவைக்க நடவடிக்கை எடுப்பனவே தவிர எந்த ஒரு பகுதியையும் பிரிந்து செல்ல அனுமதிக்கமாட்டார்கள். அவ்வாறு அச்செய்கைக்கு உடந்தையாக இருப்பது தத்தம் நாடுகளையும் அப்பேர்ப்பட்ட துண்டிப்புகளுக்கு ஆளாக்கிவிடும் என்ற பயம் அவர்களுக்கு.

ஆகவே சர்வதேசச் சட்டமானது பிரிவினை என்ற கருத்து உரித்து அடிப்படையில் நடைமுறையில் இருக்கின் றதா என்று அலசி ஆராயும் அதேநேரத்தில் சர்வதேச நாடுகள் பிரிவினையானது தமது நாட்டையும் பாதிக்கத் கூடும் என்ற உள்ளெண்ணங்கொண்டே இந்த விடயத்தை அணுகுவதை நாம் காணலாம். இங்கு ஒரு முக்கிய விடயம் கருத்தில் கொள்ளப்படவேண்டும். பிரிந்து செல்லும் சட்ட உரித்து சர்வதேசச் சட்டத்தில் உள்ளதா என்று ஆராய்வது சட்ட ஆராய்ச்சிகளில் ஒரு கட்டம். காரண காரியங்கள் ஒரு நாட்டில் மாற்றமடைந்து நிலைமை மிக மோசமான அளவுக்குச் சீர்கெட்டுப் போகுமானால் வருங் காலத்தில் சர்வதேசங்கள் அல்லது சர்வதேசச் சட்டங்கள் அப்பேர்ப்பட்ட ஒரு யதார்த்த நிலைக்கு எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்று ஆராய்வது வேறொரு கட்டம். அதாவது சட்டத்தில் இடமிருக்கின்றதா என்பது ஒரு கட்டம்.

சட் டம் வருங்காலத்தில் இடமளிக்குமா என்பது இன்னொரு கட்டம். ஒரு நாட்டின் அரசியல் நிலைமை மோசமடைந்து வரும்போது எப்பேர்ப்பட்ட நிலைமைகளைச் சர்வதேச சமூகம் பிரிவினைக்கு ஏற்றதாக ஒப்புக்கொள்வன என்பதுதான் இந்த இரண்டாவது கட்டம்.

ஆகவே பிரிவினைக்கு வழி சமைப்பவர்கள், பிரிவினையே குறிக்கோளாக இருப்பவர்கள் அந்த நாட்டின் சீரழிவு எந்த அளவுக்கு மோசமாகிக் கொண்டு வருகின்றது என்பதைச் சர்வதேச சமூகத்திற்குப் பறைசாற்ற எப்பொழுதும் தயாராகிக் கொண்டிருப்பர். சர்வதேச நாடுகளும் இதை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருப்பன.

**மக்கள் மனோநிலையும் பிரிவினையும்**

மூன்றாவதாக, அரசியல் தீர்வுகளால் பாதிக்கப்படப் போகும் மக்களின் மனோநிலை கண்டறியப்பட வேண்டும். உதாரணத்துக்கு இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் இன்றைய அரசியல் நிலையை அவதானித்தால் நான் கூறுவது உங்களுககுப் புரியும். ஆயுதந் தாங்கும் குழுக்கள் அல்லது அரசாங்க அதிகாரம் பெற்ற குழுக்கள் மக்களின் உண்மையான உள்ளக் கிடக்கைகளை மறைத்து விடப் பலதும் செய்யலாம். பலாத்காரத்தால் ஏற்படுத்தப்படும் அரசியல் நிர்ணயிப்புக்கள் மக்களின் உண்மையான உள்ளக் கிடக்கைகளைப் பிரதிபலிக்காத வரையில் பிரிவினைக்கோ அல்லது சேர்ந்து வாழ்தலுக்கோ அவர்கள் உடந்தை என்று கூறுவது யதார்த்த நிலையைப் பிரதிபலிக்காமல் இருந்து விடக் கூடும்.

ஆகவே இந்த மூன்று விடயங்களை, அதாவது சட்டம் கூறுவதை, எம்மைச் சுற்றியுள்ளோர் கூறுவதை மற்றும் மக்கள் எண்ணுவதை வைத்தே பிரிவினை பற்றி ஆராய வேண்டும். அவ்வாறு ஆராயும் போது நமக்குப் புலப்படுவது சர்வதேசச் சட்டமும் சர்வதேச நாடுகளும் பிரிவினையை வரவேற்கத் தயங்குவதேயாகும். மேலும் நாட்டு மக்களின் உள்ளார்ந்த அபிலாஷைகளைப் பலாத்கார நடவடிக்கைகள் மூலம் பிரதிபலிக்கப் பார்ப்பது யதார்த்தத்திற்கு முரணாகும் என்பதும் வெளிப்படை.

அதற்காகப் பிரிவினையைப் பெறமுடியாது என்று அர்த்தமில்லை. கொசோவோ அதை எடுத்துக் காட்டியுள்ளது. பிரிவினை தான் ஒரேயொரு முடிவா என்பது தான் கேள்வி. அந்த முடிவுக்கு வர சகல சந்தர்ப்ப சூழ்நிலைகளும் உருவாகியுள்ளனவா என்பது அடுத்த கேள்வி. அத்துடன் பிரிவினை கிடைத்தவுடன் புதிய நாட்டை நிம்மதியாக இருக்க வேறு சில நாடுகள் இடம் அளிப்பனவா என்பதும் மனதில் கொள்ளவேண்டியதொன்றே. அதனைத் தவிர்க்க யாருடன் கூட்டுச் சேர வேண்டும் என்பதும் கவனிக்கப்பாலது. ஆறாவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் பிரிவினை பற்றி அறிவு பூர்வமாகப் பேசுவது கூடப் பிழையாக அமையலாம். இவற்றையெல்லாம் மனதில் நிறுத்தி வைத்துக் கொண்டு சுயநிர்ணய உரித்து பற்றி ஆராயத் தொடங்குவோம்.

**சுயநிர்ணய உரித்து**

சுயநிர்ணய உரித்து என்றால் ஒரு நாட்டின் ஒரு பகுதியினர் அந்த நாட்டில் அவர்கள் வாழும் பகுதியில் தம்மைத் தாமே ஆள்வது பற்றித் தீர்மானம் எடுத்தலாகும். இதை (The Right of Self-determination) என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவானது ஏதோ காரணங்களின் நிமித்தம் கூடியவரையில் தம்மைத் தாமே ஆளும் வகையில் தீர்மானம் எடுப்பதையே இது குறிப்பிடுகிறது. இதை அகச் சுயாட்சி உரித்து என்றும் கூறலாம். புறச் சுயாட்சி என்றால் பிரிந்து போவது. அகச் சுயாட்சி என்றால் நாட்டினுள் இருந்து கொண்டே தம்மைத் தாமே ஆள்வது. இந்த உரித்து, உரிமை என்ற இரு சொற்களையும் புரிந்து கொள்ளல் நன்மை பயக்கும். உரிமை என்றால் பாத்தியதை அல்லது சொந்தம். சமூகத்தால் எமக்குத் தரப்பட்டிருப்பது அது. உரித்து என்றால் எனக்கு உரியது என்று என்னால் கோரப்படக்கூடியதொன்று. ஆகவே உரிமையைச் சமூகம் ஏற்கின்றது. உரித்தை நாங்கள் சமூகத்திடம் இருந்து கோருகின்றோம். சமூகம் சிலவேளைகளில் "உனக்கு அந்த உரித்து இல்லை" என்றும் கூற முடியும்.

நாடுகளும் அவற்றின் அரசாங்கங்களும் நடந்துகொள்ளும் விதத்தை, முறையைத், தன்மையை அலசி ஆராயும் விதத்தில் பொதுவாய் சர்வதேசச் சட்டமானது அமைந்திருந்தாலும், குறிப்பிட்ட சில சூழல்களில் நாடுகளும் அவற்றின் அரசாங்கங்களும் தவிர்ந்த இன்னொரு மக்கள் குழாம் பற்றியும் அவற்றின் உரிமைகள், உரித்துக்கள் பற்றியும் சர்வதேசச் சட்டம் கரிசனை காட்டி வருகின்றது. அதுதான் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரின் அகச் சுயாட்சி உரித்தாகும். இன்று பல நாடுகளில் இப்பேற்பட்ட மக்கள் கூட்டங்களின் உரித்துக்கள் பற்றி ஆராய வேண்டி வந்துள்ளதால் வெறும் சம்பிரதாய பூர்வமான ஆராய்வில் இருந்து சர்வதேசச் சட்டக் கோட்பாட்டு நிலைக்கு இந்த உரித்து உயர்ந்தெழுந்துள்ளதை நாங்கள் அவதானிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை பல தருணங்களில் அகச் சுயாட்சி உரித்துப் பற்றி விவாதித்துள்ளது. பிரேரணைகளைக் கொண்டு வந்து இருக்கிறது. அதாவது ஒரு நாட்டின் இறைமையைப் பேணும் அதே நேரத்தில் அதனுள் வாழும் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் தம்மைத் தாமே ஆளும் ஓர் உரித்தைப் பெற்றுள்ளார்கள் என்ற கருத்தையும் பல தருணங்களில் சர்வதேச நிறுவனங்கள் வலியுறுத்தி வந்துள்ளன. அவ்வாறான உரித்துக்களுக்குச் சில நாடுகள் இடமளிக்காமல் சில விசேட சூழல்கள் எழுந் தருணத்தில்தான் பிரிவினையை வேண்டா வெறுப்பாக ஏற்க வேண்டி வந்துள்ளது சர்வதேச சமூகத்திற்கு.

**சர்வதேசச் சட்டம் வழங்கியுள்ள சுயநிர்ணய உரிமை**


இந்த உரித்து யார் சார்பாக ஏற்கப்பட்டிருக்கின்றது என்று ஆராய்ந்தோமானால் ஒரு 'மக்கள் கூட்ட'த்தினரின் என்பதை அவதானிப்போம். மக்கள் கூட்டம் என்றால் என்ன? சர்வதேசச் சட்டம் மக்கள் கூட்டத்திற்குத் தான் அகச் சுயாட்சி உரித்தை வழங்கியுள்ளது. ஆனாலும் மக்கள்கூட்டம் அல்லது ஆங்கிலத்தில் 'Peoples' என்று கூறப்படும்பதம் அத்தனை வரையறையாக அர்த்தம் கற்பிக்கப்படவில்லை.

சுயநிர்ணய உரித்தானது மக்களின் மனித உரிமைகளுள் ஒன்றாகவே வளர்ந்து வந்துள்ளது என்பதை நாங்கள் அவதானிக்க வேண்டும். ஆகவே நாடுகள், நாட்டரசாங்கங்கள் அவற்றின் உரிமைகள் என்பவற்றிற்கு முரணாகவில்லாது சுயநிர்ணய உரித்தைக் கோரக் கூடியதாக இருக்கிறது. அதாவது ஒரு நாட்டினுள் இருக்கும் குறிப்பிடப்படக் கூடிய மக்கள் கூட்டம் அக் கூட்ட மக்களின் பொருளாதார, சமூக, கலாசார மேம்பாட்டுக்காக அந்த நாட்டினுள் இருந்துகொண்டே வழியமைக்கக் கோருவதே இந்த உரித்தின் அர்த்தமாகும். இந்த உரித்தை அகச் சுயாட்சி உரித்தென்றும் கூறலாம். இதற்கு எதிரானது தான் நான் முன்னர் கூறியதுபோல் புறச் சுயாட்சி அல்லது பிரிந்து வாழ்தல்.

சர்வதேசச் சட்டமானது சுய நிர்ணய உரித்தை வலியுறுத்தும் அதேநேரம் நடைமுறையில் இருக்கும் நாட்டின் இறைமையையும் வலியுறுத்துகின்றது. அதாவது சுய நிர்ணய உரித்தின் வெளிப்பாடு அந்த உரித்தையுடைய மக்கள் கூட்டத்தினர் பிரிவினைக்கு வித்திடும் வண்ணமாக அமையக் கூடாது என்பதிலும் சர்வதேசச் சட்டம் கவனமாக இருக்கின்றது. அது மட்டுமல்ல, சுய நிர்ணய உரித்தைப் பெறுபவர்கள், நாட்டின் அரசாங்கத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் அல்லது எதிர்த்து நிற்கும் வேற்று அரசாங்கங்களுடன் உறவுகள் வைத்து அந் நாட்டின் அரசாங்கத்தைத் தர்ம சங்கட நிலைக்கு ஆளாக்கும் விதத்தில் நடக்காமலும் இருக்கச் சர்வதேசச் சட்டம் கரிசனை காட்டி வருகின்றது.

இலங்கையில் சிங்கள மக்கள் தலைவர்கள் ஐம்பது ஆண்டுகளாகக் கூறிவருவது தவறு என்றே சர்வதேசச் சட்டம் கருதுகின்றது. அதாவது வடக்கு - கிழக்கு மக்களுக்குச் சுயநிர்ணய உரித்தளித்தால் அது பிரிவினைக்கு முதற்படி என்று கூடக் கூறாமல் அது பிரிவினையே என்றுதான் சிங்கள மக்கள் தலைவர்கள் கூறிவந்துள்ளார்கள். ஆனால் சர்வதேசச் சட்டப்படி ஒரு நாட்டின் மக்கள் குழுவொன்றிற்கு சுயநிர்ணய உரித்தை வழங்குவது சட்டத்திற்கு முரணாகாது என்பதே அதன் கருத்தாக அமைந்துள்ளது. உண்மையில் அந்த நாட்டின் இறைமையை அச் செயற்பாடு காக்கும் என்றே சர்வதேசச் சட்டம் கருதுகின்றது. ஒரு நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் வழங்கி, வேறுபாடுகள் காட்டாது, நியாயமான அரசாங்கத்தை வழங்கும் ஒரு நாட்டின் இறைமையைச் சர்வதேசச் சட்டம் பாதுகாக்கின்றது என்றே கூறவேண்டும். *(வளரும்)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 08



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

**இடமிருந்து வலம்**

1. சந்திரனுக்கு மற்றொரு பெயர்.
3. போற்றி வணங்கு.
6. ரசிப்பவன்.
9. பொருத்தமற்றது; ஒழுங்கற்றது.
11. நிலத்திலும் வாழும்; நீரிலும் வாழும்.
12. தன்மை.
14. பொய்கை.
15. வீடு.
16. ஸ்தாபி.
17. இருள் சூழ்ந்தது. இருக்காது என்பதையும் குறிக்கும்.
18. வித்தை காட்டுபவனுக்கு இது தப்பினால் மரணம்.
19. விஸ்ணு எழுந்தருளியிருக்கும் ஸ்தலம்.
20. உலகம்.

**மேலிருந்து கீழ்**

1. இராமனின் தந்தை.
2. இப்போது சொத்தைத் தேடித் தான் இவரைத் தேடவேண்டும்.
4. மறைப்பது இதனால்.
5. உடலுறுப்புக்களில் முக்கியமானது.
7. சைவர்கள் உச்சரிக்கும் சொல்.
8. அகற்றுதல்.
10. இதுவும் ஒரு உடலுறுப்புத்தான்.
12. இம்மையும் மறுமையும்.
13. பழமைக்கு எதிரானது.
15. நவக்கிரகங்களுள் ஒன்று.
16. எய்வது.
17. பல பொருள்களைச் சுட்டும் சொல்.
18. தாண்டும்படி ஏவுதல்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 08**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (07.05.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.08 இல் வெற்றிபெற்றோர் விவரம் 11.05.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 06 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அசமந்தம். (6) கதிரை. (7) தறி. (8) நடுநிலை. (9) தியானம். (11) விதி. (13)யது. (14) பிசகு. (17) பக்கம். (18)எதுகை. (19) பசு. (21) கருமை. (22) விம்பம்.

**மேலிருந்து கீழ்**

(1)அகத்தியர். (2)சதி. (3) மரை. (4)தண்டு. (5)நெறி. (7)தலைவி. (8) நம்பிக்கை. (10)யாது. (12) திகதி. (15)சக. (16) கும்பம். (17) பதுமை. (18) எரு. (20) சுப.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 06 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
சு.பாலமுரளிதரன்,
*இந்துக்கல்லூரி வீதி,*
*பண்டத்தரிப்பு.*

**2 ஆம் பரிசு**
திருமதி லோ.தில்லைநாதர்,
*இல.15, 3 ஆம் குறுக்குத் தெரு,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
க.சிவஜனனி,
*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) எஸ்.விஜயதேவி,
G.P.S. றோட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(2) சி.ஆறுமுகம்,
கலைவாணி பவனம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

(3) திருமதி சிவநந்தினி ரமேஷ்,
பெரியவளவு, ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(4) [illegible]
மாவடி ஒழுங்கை,
சங்கானை.

...மாதுளா சிறிஸ்கந்தராஜா,
இல: 15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடாநாட்டின் கூட்டுறவுத்துறை மறுமலர்ச்சி காண 'கோப் சிற்றி' வழிகோலுமா?

குடாநாட்டில் 'கூட்டுறவு நகரம்' என்ற பெயரில் பல்பொருள் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இங்கு இப்போது இயங்கும் இருபந்தைந்து கூட்டுறவுச் சங்கங்களும் தமக்கென 'கோப் சிற்றி' பல்பொருள் நிலையங்களைத் திறக்க உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை மக்கள் சேவைக்கு முன்னுரிமையும் முதலிடமும் கொடுத்து திறம்பட இயங்குமானால் மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

வெளிநாடுகளில், நகரங்களில் மட்டுமன்றி கிராமப் பகுதிகளிலும் சகல பாவனைப் பொருள்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் வாங்கக்கூடிய வசதி உள்ள 'மல்ரி மாக்கெற்' எனப்படும் விற்பனை நிலையங்கள், 'ஷொப்பிங் சென்ரர்கள்' இயங்குகின்றன.

அவற்றில் மெழுகுவர்த்தி, தீப்பெட்டி முதற்கொண்டு ஆகப்பிந்திய நவீன எலக்ரோனிக் பொருள்களை ஒரே அடத்தில் ஒரே நடையில் வாங்கலாம்.

ஒவ்வொரு வகை அல்லது இனப்பொருள்களுக்கு தனித்தனியாக காட்சியறைகளும் கூடங்களும் இருக்கும். அவற்றில் இறக்குமதிப் பொருள்களை விட உள்ளூர் உற்பத்திப் பொருள்களே விற்பனைக்கு அதிகளவில் இருப்பதுண்டு.

இத்தகைய பல்பொருள் அங்காடிகள் காலத்துக்குக் காலம் விலைகளைக் குறைத்தும், விற்றுத் தீர்த்தும், போட்டி போட்டுக்கொண்டும், புதிது புதிதாக பலவகைப் பொருள்களையும் விற்பனை செய்வதுண்டு. அதிவேக விரைவுடன் வர்த்தகம் சிறப்புற்றிருக்கும்.

இத்தகைய ஆக்கபூர்வமான சந்தைப்படுத்தல் முறைகளால் பாவனையாளர்கள் நியாய விலைகளில் தமக்குத் தேவையான எந்தப் பொருளையும் வாங்கக் கூடிய வசதி அவர்களுக்குக் கிடைப்பது ஒருபுறம். மறுபுறத்தில் வர்த்தகத் துறையில் போட்டியுடனான அதீத வளர்ச்சிகளையும் காண முடியும்.

மொத்தத்தில் உற்பத்தியாளர்கள், வர்த்தகத் துறையினர் நாட்டில் பொருளாதாரம் ஆகிய முத்தரப்பும் குறிப்பிடத்தக்க அளவில் மும்முனைகளில் வளர்ச்சி காண்கின்றன.

அத்தோடு பாவனையாளர்களும் தமக்குத் தேவையான பொருள்களை அதிக அலைச்சல் இன்றியும் தமது பண வசதிக்கு ஏற்றவாறும் கொள்வனவு செய்ய முடிகிறது.


இத்தகைய மட்டத்தில் இப்போது தெற்கில் குறிப்பாகத் தலைநகர் கொழும்பில் பல்பொருள் அங்காடிகள் சில இயங்குகின்றன. அவற்றில் மிகப் பெரும்பாலானவை தனியார் துறையினரால் நிர்வகிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் திறக்கப்படும் 'கோப் சிற்றி' எனப்படும் கூட்டுறவு நகரக் கடைகள் மேற்சொன்ன முக்கோண நோக்குடன் இயங்கினால் அவை பெரு வெற்றியாக அமையும். பாவனையாளர், உற்பத்தியாளர், பிரதேச பொருளாதாரம் என்பன துரித வளர்ச்சிகாண வழிசமைக்கும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தமது சந்தைப்படுத்தல் உத்திகளை காலத்துக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்து எமது உற்பத்திகளுக்கு முன்னுரிமையும் பாவனையாளர் நலனுக்கு முதலிடமும் கொடுக்கும் கொள்கையை முன்னிறுத்திச் செயற்பட்டால், எல்லோருக்கும் பல்முகப் பயன்தரும் ஓர் ஆக்கபூர்வமாக திட்டமாக அது அமையும்; இயக்கமாக மாறும்.

கூட்டுறவுத் துறையில், ஒரு காலத்தில் முன்னணி வகித்த பிரதேசம் யாழ்ப்பாணம். கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு விளைவுகள் மக்களைச் சென்றடைந்து அவர்களை அத்துறையில் ஈடுபாடும் பங்களிப்பும் நல்க உந்து சக்தியாகவும் விளங்கியது. பெரியார் வீரசிங்கம் காலத்தின் கூட்டுறவு யுகம் மீண்டும் இங்கு மலருமானால், அதற்கேற்ற வகையில் கூட்டுறவு இயக்கம் வளருமானால் அது வெற்றியளிக்கும் யுகத்துக்கு இட்டுச் செல்லும் என நம்பலாம்.

மக்கள் சேவையே கூட்டுறவு சேவை என்ற இலக்குடனும் நோக்குடனும் கூட்டுறவுத்துறை புதிய உத்வேகத்துடன் செயற்படுவதற்கு 'கூட்டுறவு நகரத்' திட்டம் வழிகோலி மக்களுக்கு நற்பயன் தரவேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்புமாகும்.



தந்தை செல்வாவில் 32ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள அவரது நினைவுச் சதுக்கத்தில் நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. இந் நிகழ்வில் தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர் ஆயர் வண எஸ்.ஜெபநேசன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் அவரின் நினைவுச் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதை முதலிரு படங்களிலும் காணலாம்.

யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

பிற்பகல் யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்ற நினைவுப் பேருரை நிகழ்வில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தந்தை செல்வாவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன், நேசன் )*

# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவெடுக்க சிங்களத் தலைமைகளிடம் விசுவாசமான முன்மொழிவு இல்லை

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராஜா கூறுகின்றார்

நல்லூர், ஏப்.27

கடந்த 50 ஆண்டுகளாக இருந்து வருகின்ற தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு சிங்களத் தலைமையிடம் விசுவாசமான முன்மொழிவு காணப்படவில்லை.

இவ்வாறு தந்தை செல்வாவின் 32ஆவது நினைவுதின நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. செல்வா அறங்காவல் குழுத் தலைவர் ஆயர் வண எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவை சேனாதிராஜா எம்.பி. தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

நெருக்கடி மற்றும் இராணுவக் கெடுபிடிகளின் மத்தியில், எங்களை அழித்து விட நினைத்துவிடும் கொடூரங்களின் மத்தியில் தந்தை செல்வாவை நினைவு கூருகின்றோம்.

கடந்த பல ஆண்டுகளுக்கு முன் தமிழர்களுக்கு நீதியான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக தந்தை செல்வா இந்நாட்டு அரசுடன் ஒப்பந்தங்களைச் செய்த போதும் அவை கிழித்தெறியப்பட்டன.

இறுதியாக தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க சிங்களத் தலைவர்கள் விசுவாசத்துடன் செயற்படவில்லை என்பதால் தமிழர்களுக்கு தனி நாடு என வட்டுக்கோட்டைத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதில் மலையகத் தலைவர் தொண்டமான் உட்பட பலர் கலந்துகொண்டு ஒருமனதான முடிவாக ஏற்றுக் கொண்டனர்.

ஐரோப்பியரிடம் இழந்த சுதந்திரத்தைப் பெறவேண்டும் என்ற அவரது இலட்சியத்தின் வழி இன்று நாங்கள் சென்றுகொண்டிருக்கின்றோம். நான் குடாநாட்டுப் பகுதிக்கான இராணுவ அதிகாரியைச் சந்தித்து மக்கள் படும் கஷ்டங்கள் உட்பட தந்தை செல்வா சதுக்கத்திற்கு அண்மையில் உள்ள சோதனைச் சாவடி குறித்தும் பேசியுள்ளேன்.

தமிழர்கள் விடயத்தில் ஒரு நல்ல தீர்வு காணப்படாததினாலேயே போரில் தமிழ், சிங்கள இளைஞர்கள் தேவையற்ற இறப்புக்களுக்கு உள்ளாகின்றனர். இதற்கு ஒரு நல்ல தீர்க்கமான முடிவை ஏற்படுத்தக் கூடிய அரசியல் தலைமை தேவை.

சர்வதேசத்தின் முடிவுகளுக்கமைய ஒரு தீர்க்கமான முடிவு கிடைக்கும். அதை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றோம். எம்மிடத்தில் கருத்து வேற்றுமைகள், பிளவுகள் இன்றி ஒன்றுபட்டுச் செயற்பட்டால் எமக்கு ஒரு நல்ல முடிவு கிட்டும் என்பதை கருத்தில் கொண்டு அதற்கமையச் செயற்படுவோம் - என்றார்.



நல்லை ஆதீன முதல்வர் உட்பட பலர் உரையாற்றினர். நிகழ்வில் பொது மக்களும் கலந்துகொண்டு தந்தை செல்வாவுக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். (202-111-302-68-267)

நாளை



| | |
|---|---|
| சித்திரை 16 | 28.04.2008 திங்கட்கிழமை |
| திதி: அட்டமி | பி.இ. 03.51வரை |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| சுபநேரம் : | 11.58 - 01.28 |
| ராகுகாலம் : | 07.28 - 08.58 |



# தந்தை செல்வா நினைவு நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது

யாழ்ப்பாணம்,ஏப்.27

தந்தை செல்வாவின் 31 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு கோட்டையில் அமைந்துள்ள அவரது நினைவாலயத்தில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செல்வாவின் சிலைக்கு அக்குழுவின் தலைவர் ஆயர் வண சு.ஜெபநேசன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்படப் பலர் மலர் மாலை சூட்டினர்.

அதைத் தொடர்ந்து நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி, யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ, பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், கலாநிதி குணராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அறங்காவல் குழுச் செயலாளர் தி.குலநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பலர் உரையாற்றினர்.

பிற்பகல் 3 மணிக்கு பொது நூலக கேட்போர்கூடத்தில் நினைவுப் பேருரை இடம்பெற்றது.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் 'விடிவை நோக்கி' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

அதேவேளை -

ஈ.பி.டி.பி. அமைப்பின் ஏற்பாட்டில் தந்தை செல்வா நினைவு நிகழ்வு நேற்றுக் காலை 7 மணியளவில் செல்வா நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் யூட் (உதயன்), வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் பூ.குலசிங்கம், வேலணை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் சூ.அலெக்ஸ்சாண்டர் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

செல்வாவின் சிலைக்கு உதயன் மலர் மாலை அணிவித்ததை அடுத்து மெழுகுதிரி ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் அலுவலகத்திலும் நேற்று முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் செ.விஜயரத்தினம் அஞ்சலி நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். (1-111-86-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தேர்தல்

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை நியமிக்கக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஏப்.27

கிழக்கு மாகாண சபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஐ.தே.கட்சி, இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தினர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தை அரசு, புலிகளிடமிருந்து மீட்டெடுத்ததன் காரணமாக அந்த வெற்றியை வேறு எவருக்கும் வழங்க மாட்டோம் என்று ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அப்படியென்றால் இந்தத் தேர்தலில் அரசு வெற்றி பெறுவதற்காக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்பது ஜனாதிபதியின் இந்தக் கூற்றில் இருந்து தெரிய வருகின்றது.

இதன் காரணமாகவே நாம் இத்தேர்தலை சர்வதேச கண்காணிப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

இது தொடர்பாக இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களினதும் சர்வதேச சமூகத்தினரினதும் கவனத்தை ஈர்த்து வருகின்றோம்.

சர்வதேச கண்காணிப்பாளர்களை களத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் சர்வதேச சமூகத்தினர் ஈடுபடவேண்டும் என்று நாம் கேட்டுள்ளோம்.

சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் இந்தத் தேர்தல் நடைபெறுமாகவிருந்தால் இத்தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் நாமேதான்.

இத்தேர்தல் நீதியானமுறையில் நடைபெறக்கூடிய சாத்தியங்கள் எவையுமில்லை. இப்போதுவரை தேர்தல் வன்முறைகளால் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், வன்முறைகள் எவையும் இடம்பெறவில்லை என்று காட்ட அரசு முற்படுகிறது. நாம் தொடர்ந்து அரசைக் கேட்டுக்கொண்டு வருவதுதான், பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது.

பிள்ளையானுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்குமேயானால் அவருக்கும் சட்டப்படி அரசுதான் பாதுகாப்பு வழங்க வேண்டும். அதை விட்டுவிட்டு அவரது குழுவினர் ஆயுதம் ஏந்த அரசு இடம்கொடுத்திருப்பது பிழையாகும்.

இத்தேர்தல் நீதியானதாக - வன்முறைகளற்றமுறையில் நடைபெறுவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் - என்றார். (சி)

## குண்டுவெடிப்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன்டியாக நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.(அ-1)

## மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். நேற்றுப் பிற்பகல் 5.30 மணிக்கு படையினரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் படையினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன. - என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## சமாதானப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலு வைக்க ஏற்பாடு செய்யப்படும் - என்றார் அவர்.

அதேவேளை -

மடுவில் உள்ள தற்போதைய நிலைமையைக் காண்பிப்பதற்காக வெளிநாட்டு மற்றும் உள்ளூர் செய்தியாளர்களை இன்று அங்கு அழைத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.


அதேவேளை -

மன்னார் மாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்டர் சூசை அடிகளார் நேற்று மடு மாதா தேவாலயத்துக்குச் சென்று அங்கு ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டுள்ளார்.

தேவாலயத்தின் இடதுபுறக் கூரையும், திரு இருதய ஆண்டவர் ஆலயம் முற்றாகவும், நற்கருணை ஆண்டவர் ஆலயம் பகுதியாகவும் மற்றும் பக்தர்கள் மெழுகுதிரி ஏற்றும் பகுதியிலும் சேதங்கள் காணப்படுகின்றன என்று விக்டர் அடிகளார் தெரிவித்தார்.

தேவாலயத்தில் விட்டுவந்தபொருள்கள் அனைத்தையும் புலிகள் பக்குவப்படுத்தி வைத்துள்ளதுடன் தேவாலயத்தை நன்கு பராமரித்துள்ளனர் என்று அருட்தந்தை விக்டர் அடிகளார் பி.பி.சி தமிழோசைக்குத் தெரிவித்தார். (அ-2)


கற்சுமி வெளியீடு
இப்பொழுது கிடைக்கும்...
ஆண்டு 1 முதல் 5 வரையான மாணவர்களுக்குரிய வினாத்தாள் புத்தகம்
சிறுவர் ஆற்றலை மேம்படுத்தும் மாதம் இருமுறை வெளிவருவது!



For more Information contact this No. 021 222 7442
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



விசேட விலைக்கழிவில் உயர்தரமான
திருமண அழைப்பிதழ்கள் 15% SPECIAL OFFER
ADORNA WEDDING CARDS



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:
ANDRA DIGITAL IMAGE
# 356A,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
# 6D, உப்புமடம் சந்தி, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில்.
T.P.021-4590268,0602218435
இணையத்தள முகவரி: www.andradesigns.com
திருமண அழைப்பிதழ்களை எமது இணையத்தளத்தினூடாகவும் தெரிவு செய்யலாம்.


## தமிழர்களின் போராட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கும் எந்த ஒரு தீர்வையும் தமிழ் மக்கள் தாராளமாக ஏற்றுக்கொள்வர் என்ற எண்ணத்தில் தமது நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர்.

அதற்கு வசதியாகப் பயங்கரவாத முத்திரையைப் பொறித்து, அரசாங்கம் வன்முறையில் ஈடுபட்டால் அது நாட்டின் பாதுகாப்பு; ஆனால் அரசு செய்யும் அட்டூழியங்களுக்கு எதிராக எவரேனும் நடவடிக்கை எடுத்தால் அது பயங்கரவாதம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி வருகின்றது. ஆனால் தமிழ் இளைஞர்களின் வன்முறையை அடக்குவது நோயின் அடையாளங்களை அடக்குவது போன்றதே. நோயை அடக்க வேண்டுமானால் அரசியல் தீர்வு அவசியம். இன்று புலிகளை அடக்கினால் நாளை சிறுத்தைகள் அவதரிப்பர். சிறுத்தைகளை அடக்கினால் அடுத்தநாள் கழுகுகள் உதிக்கக் கூடும்.

சென்ற ஐம்பது ஆண்டுகள் உள்ளூரில் நடத்தி வந்த போராட்டம் இன்று திபேத்தியர்களால் உலகாளவ எடுக்கப்பட்டுள்ளதென்றால் ஐம்பது வருடங்கள் அவர்களின் நோய் உள்ளூற உறைத்துக் கொண்டே உறைந்திருந்தது என்று அர்த்தம். ஒரு மக்கள் கூட்டத்தினரை என்றென்றைக்கும் ஒழித்துக் கட்டலாம் என்று அரசாங்கங்கள் எண்ணக்கூடாது. தாம் நடத்தும் அரச பயங்காரவாதம் உலக நாடுகளினால் தட்டிக் கேட்கப்படமுடியாது என்று எண்ணிவிடக் கூடாது இந்த அரசாங்கங்கள்.

### பாதுகாக்கும் உரித்து R2P

விடிவை நோக்கி நாங்கள் மட்டும் செல்லவில்லை. உலகமே அந்த யாத்திரையில் ஈடுபட்டுள்ளது. அதனால்தான் அண்மைக் காலங்களில் R2P என்ற ஒரு கருத்து மேலோங்கி வருகின்றது The Right to Protect அல்லது பாதுகாக்கும் உரித்து என்ற இந்தக் கொள்கையின் படி அயல்நாடுகளில் நடக்கும் அட்டூழியங்களை எம் நாட்டினர் வெறுமனே பார்த்துக்கொண்டு வாளாதிருக்க இடமளிக்கக்கூடாது. தட்டிக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு என்கிறது R2P. தட்டிக் கேட்பது மட்டுமல்ல பாதிக்கப்பட்டவர்களை உலக நாடுகள் சேர்ந்து பாதுகாக்கவும் பிரயத்தனங்கள் எடுக்க வேண்டும்

### பாப்பரசர் சொன்னது

சென்ற வாரம்தான் 16 ஆவது பாப்பரசர் ஆசீர்வாதப்பர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முன் நிகழ்த்திய ஒரு பேச்சில் பின்வருமாறு கூறினார் -

''கொடூரமான தொடர் மனித உரிமை மீறல்களில் இருந்து ஒவ்வொரு நாடும் அதன் மக்களைப் பாதுகாப்பது அந்நாட்டின் தலையாய கடமை''.

தொடர்ந்து அவர் பேசுகையில் -

''நாடுகளால் தமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாவிடில் ஐக்கிய நாடுகள் சாசனம் மற்றும் வேறு சர்வதேச ஆவணங்களின் அடிப்படையில் சட்டபூர்வமாக சர்வதேச நாடுகள் இடைபுகுந்து தலையிடவேண்டும்'' என்றார்.

இவ்வாறு இடைபுகுவது ஒரு நாட்டின் இறைமையைப் பாதிக்கும் செயல் என்று சிலரால் கூறப்பட்டதை பாப்பரசர் மறுத்திருக்கிறார்.

''இவ்வாறு இடை புகுவதை தேவையற்ற குறுக்கீடாகவோ நாடுகளின் இறைமையைக் கட்டுப்படுத்துவதாகவோ கத்தோலிக்கத் திருச்சபை கருதவில்லை'' என்றும் கூறினார்.

### உலகின் கண்ணோட்டம் மாறியுள்ளது

பரிதவிக்கும் அப்பாவி மக்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பாதுகாப்பது மற்றைய நாடுகளின் கடமையும் உரிமையும் என்று ஒடுக்கப்படும், ஒடுக்கப்பட்டு வரும் மக்கள் கூட்டத்தினரின் விடிவிற்காகப் போராடும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தினுள் உலகின் கண்ணோட்டம், அதன் எண்ணோட்டம் உள்நுழைந்துள்ளது என்றும் கூறலாம்.

நூறு வருடங்களுக்கு முன்னிருந்த உலகம் அல்ல தற்பொழுது நாம் வாழும் உலகம். ஒரு குடும்பத்தில் மனைவி அடி வாங்கிவிட்டு அது என் கர்மம் என்று வாளாதிருந்த காலம் அப்போது. எனக்கும் உரித்துண்டு என்று எதிர்த்துப் பேசி அடிப்பவர்களை அசிங்கப்படுத்தக்கூடிய ஒரு ஆளுமையைப் பெற்றுள்ள காலம் இப்போது.

நாடுகளும் நாட்டு மக்களும் மக்கட் கூட்டத்தினரும் அப்படித்தான். அறிவு முதிர்ச்சி, ஆற்றல், ஆளுமை ஆகியவற்றை இன்று மக்கள் பெற்றுள்ளார்கள். இதை நாம் மறுத்தலாகாது. துப்பாக்கியை வைத்துக் காட்டி மிகத் தூரம் பயணிக்க முடியாது என்பதை நாட்டரசாங்கங்களும் நாட்டாண்மைக்காரரும் உணர்ந்தே தீரவேண்டும்.

ஆகவே அரசியல் விடிவை நோக்கிச் செல்லும் நாங்கள் எமக்கிருக்கும் தீர்வுகள் பற்றி இதுவரை மேல்வாரியாக ஆராய்ந்துள்ளோம். நாங்கள் விடிவைத் தேடும் அதேநேரம் உலக மக்களும் அவர்களின் அரசியல், சமூகப், பொருளாதார, சமய நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகப் போராடி வருகின்றனர் என்பதை மனதில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

### சூழலுக்கு ஏற்ப நாமும் மாறவேண்டும்

இன்று இருக்கும் உலகம் நாளை இருக்காது. எமது நோக்குகள், இலட்சியங்கள் என்பன சூழலுக்கு ஏற்ப மாற்றமடையக் கூடும். மாறிவருஞ் சூழலுக்கு ஏற்ப நாமும் நமது நடவடிக்கைகளை மாற்றி விடிவை நோக்கிச் செல்வதே அறிவுடை நோக்கு. கடந்த காலத் தலைவர்கள் கூறியதை மனதில் எடுக்கும் அதேநேரம் நிகழ்கால வாழ்விற்கு நாங்கள் பொறுப்பு என்பதை நாங்கள் மறக்கக்கூடாது.

தந்தை செல்வா அரசியல் சம்பந்தமாகக் கூறியவற்றை மனதில் வைத்து இன்றைய நிலைமைகளைக் கணக்கில் எடுத்து அரசியல் விடிவை நோக்கி எதிர்காலத்தினுள் காலடி எடுத்து வைப்பதே எங்கள் கடமை. முதியோர்களாகிய எங்கள் காலம் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது. இளைஞர்களே விடிவை நோக்கி விரைந்து செல்ல வல்லவர்கள். அந்த விதத்தில் ஊக்கமுடைய எங்கள் இளைஞர்கள் நல்லதொரு எதிர்காலத்தை எமக்குப் பெற்றுத் தர இறைவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக - என்று தெரிவித்தார்.


MATHURAM INSTITUTE
பருத்தித்துறை வீதி,
3ஆம் கட்டை, கட்டைப்பிராய்
A/L 2010 கலைப் பிரிவு
20 பேர் மட்டும் கொண்ட மாதிரி வகுப்புகள்
* வாரத்தில் 4 மணித்தியாலம் வகுப்புகள்
* பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். அச்சடித்த பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
* இத்திட்டம் எமது பிரதேச மாணவர்களை 100% சித்தியடைய வைப்பதற்கே.
* இப்பிரிவுக்கான அனுமதிகள் 10.05. 2008 வரை மட்டுமே.
புவியியல் -N.பாபு சிறப்புக்கலைமாணி
தமிழ் - A.K.கீர்த்திராஜன் சிறப்புக்கலைமாணி
இ.நாகரிகம் - S.கார்த்திக் சிறப்புக்கலைமாணி
அரசியல் - A.K.றொபின்சன் சிறப்புக்கலைமாணி
பொருளியல் - P.பிரதாப் முகாமைத்துவமாணி
அளவையியல் - S.பவன் கலைமாணி
நாடகஅரங்கியல் S.மயூரன் சிறப்புக் கலைமாணி
இத்தனித்துவமான ஆசிரியர்களிடம் கற்று உயர்பெறுபேறுகளை அடைய இன்றே விரையுங்கள்.
A/L 2009, 2008, 2007 Day Class ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
- நிர்வாகி.



SUBRA(14)சித்தன்கேணி
O/L Day புதிய பிரிவு
30.04.2008 புதன் காலை 7.00
விஞ்ஞானம் - இரா.செல்வவடிவேல்
கணிதம் - ரவீந்திரன்
தமிழ் - ரவிராஜ்
சமயம் - குகதாசன்,அன்ரனி
ஆங்கிலம் - மேரிதாஸ்
வரலாறு- ஐங்கரன்
தமிழ் இலக்கியம் - மகேஷ்
வர்த்தகம் - பாஸ்கரன்
அரிவிருத்தி - ஜனா
புவியியல் - ஐங்கரன்
சங்கீதம் - துசந்தா
நடனம் - விஜலட்சுமி
சுகாதாரம் - கிருபா
* திங்கள் முதல் வெள்ளி வரை7.00- 1.00 மணி
* வார இறுதி நாளில் இலவச Paper Class
* காரைநகர் பகுதி மாணவர்களுக்கு 50% கட்டணம் மட்டும்.
* வறிய தாய், தந்தை அற்ற மாணவர்களுக்கு கிராம சேவகர் உறுதிப்படுத்தினால் இலவச அனுமதி.



CATWAS.COM
Computer Academy
30 நாட்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
Microsoft Office
Desktop publishing
Multimedia
Online மூலம் வகுப்புகள் இடம்பெறும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.